100/-

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

ஆனி 2015 | கலை இலக்கிய மாத சஞ்சிகை | இதழ் - 81





வ.அ.இராசரத்தினத்தின்
"தாய்" சிறுகதையின் தனித்துவம்
-ஏ.எச்.எம். நவாஸ்-



மும்முனைகளில் பிரகாசித்த
சிதம்பர திருச்செந்திநாதன்
-ச.முருகானந்தன்-



நேர்காணல்
-செ.அன்புராசா-



பேராசிரியர் க.அருணாசலத்தின்
தமிழ் ஆய்வுப்பணிகள்
-கி.நடராசா-

# ஜீவநதி

### கட்டுரைகள்


**வ.அ.இராசரத்தினத்தின் "தாய்" சிறுகதையின் தனித்துவம்**
ஏ.எச்.எம்.நவாஸ் ........................................ 03

**அ.யேசுராசாவின் "தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும்"**
அருண்மொழிவர்மன் ........................................ 14

**துயரவெளியிற் தனித்தலையும் ஒரு குரல்**
ந.சத்தியபாலன் ........................................ 16

**கம்பராமாயணத்தில் அறிவியல்**
இ.சு.முரளிதரன்........................................ 18

**மும்முனைகளில் பிரகாசித்த இணுவையூர் சிதம்பர திருச் செந்திநாதன்**
ச.முருகானந்தன்........................................ 22

**நினைவுக் குறிப்புகள் - 10**
அ.யேசுராசா ........................................ 33

**பேராசிரியர் கனகசபை அருணாசலத்தின் தமிழ் ஆய்வுப்பணிகள்**
கி.நடராசா........................................ 42


### சிறுகதைகள்


வி.ஜீவகுமாரன்........................................ 10
வினோஷா வரதராஜன் ........................................ 20
கிண்ணியா சபருள்ளா ........................................ 37


### நேர்காணல்


செ.அன்புராசா........................................ 27


### குறுங்கதை


கண.மகேஸ்வரன் ........................................ 26


### கவிதைகள்


க.திருவருள் நேசன் ........................................ 23
நேதா மோகன்.. ........................................ 24
மைதிலி தயாபரன் ........................................ 25
பதியத்தளாவ பாறூக்........................................ 45


### நூல் மதிப்பீடு


நாச்சியாதீவு பர்வீன்........................................ 46


### நூல் அறிமுகம்


அர்ச்சுனன்........................................ 48




துயரவெளியிற் தனித்தலையும் ஒரு குரல்

- ந. சத்தியபாலன் -

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



நேர்காணல்

- செ.அன்புராசா -



அட்டை ஓவியம்
நன்றி இணையம்

# ஜீவநதி

**2015 ஆனி இதழ் - 81**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் குழு:**
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 1500/=
வெளிநாடு - $ 60U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY


## ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!

- பாரதிதாசன்-

### புங்குடுதீவு மாணவியின் மீதான பாலியற் துஷ்பிரயோகமும் மனித அநாகரிகத்தின் உச்ச வெளிப்பாடும்

புங்குடுதீவைச் சேர்ந்த மாணவி மீதான பாலியற் பலாத்காரம் தமிழ்ப்பிரதேசம் முழுவதையும் ஓர் உலுக்கு உலுக்கியிருக்கிறது. சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும் என்பது எல்லோரதும் ஏகோபித்த குரலாக உள்ளது. பாடசாலைப் பிள்ளைகளின் பெற்றோர்கள் யாவருமே இச்சம்பவத்தால் திகிலடைந்துள்ளனர்.

பெற்றோரின் அச்சம் நியாயமானது. பாடசாலைப் பிள்ளை ஒவ்வொருவரும் தமக்கும் இவ்வாறான கொடுமைகள் நிகழலாம் என்று அச்சமுற்றிருக்கிறார்கள். இந்நிலையில் இது போன்ற சம்பவங்கள் இனியும் இடம்பெறாது தடுக்க வேண்டியது எம் அனைவரினதும் கடமையாகும். குறிப்பாக, பெற்றோரும் பாடசாலைகளும் இது தொடர்பாக விசேட பொறிமுறை ஒன்று குறித்துச் சிந்திக்க வேண்டியுள்ளது. இவ்வகையில் குறித்த நாட்களில் பாடசாலைக்குச் செல்ல முடியாத தமது பிள்ளைகள் குறித்து பாடசாலைக்குப் பெற்றோர் அறிவிக்க வேண்டும். அதேவேளை பாடசாலைக்கு வராத மாணவர்கள் பற்றி உடனடியாகவே பெற்றோருக்குப் பாடசாலை அறியத்தர வேண்டும். அத்தோடு அச்சத்துக்குரியோரின் நடமாட்டம் குறித்தும் பொலிசாருக்கு இவர்கள் அறியத்தருவதுடன், பொலிஸ் பிரிவும் மிகுந்த கண்காணிப்புடன் தனது கடமையைச் செய்ய முன்வரவேண்டும்.


இந்நிலையில், விழிப்புநிலை குறித்து இலக்கியப் படைப்புகள் வெளிவரவேண்டும். வெறுமனே தகவல்களை முன்வைப்பதாக அன்றி கலைத்துவமாக வாசகர்களின் உள்ளங்களில் அதிர்வை ஏற்படுத்தி அவர்களின் செயற்பாட்டைத் தூண்டவல்ல படைப்புக்களை எழுத்தாளர்கள் படைக்க வேண்டும். சமூக அநீதிகளைத் துகிலுரித்துக் காட்டி, மானுடத்தின் மேன்மைக்காக உழைக்க வேண்டும்.

- க.பரணீதரன்


### ஜீவநதியின் பிரதி கிடைக்கும் இடங்கள்

யாழ்- பூபாலசிங்கம் புத்தகசாலை, புக்லப் - திருநெல்வேலி,
கொழும்பு வெள்ளவத்தை - பூபாலசிங்கம் புத்தகசாலை,
சீ ஸ்ரீட் - பூபாலசிங்கம் புத்தகக்கடை,
பரணி புத்தகக் கூடம் - நெல்லியடி

மனித வாழ்வின் போராட்டங்களையும், அவலங்களையும், உணர்வுகளையும் உயிர்ப்புடன் சித்திரிக்க வல்லவர் வ.அ. என்பதற்கு "தாய்" சிறுகதை சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது. மண் வாசனையையும் மண்ணின் உயிருள்ள மொழியையும் அழகியல் பிரக்ஞையுடன் "தாய்" என்ற உரைபடைப்பு உணர்த்தி நிற்கிறது.





வ. அ. இராசரத்தினம்

# வ. அ. இராசரத்தினத்தின் "தாய்" சிறுகதையின் தனித்துவம்

— ஏ.எச்.எம்.நவாஷ் —

"விடுமுறை நாட்களில்
ஆற்றுக்கு அழைத்துப்போய்
உடுதுணி கழுவி
ஊத்தை தேய்த்து தேய்த்து
உம்மா எம்மைக் குளிப்பாட்டும்
நுட்பம் பார்த்து உமாலயா
ஆறும் குளிர்ந்து போயிருக்கும்"

வைகறைப் பொழுதில் தொழுதெழுந்து வரும் தாயின் பாதத்தில் சுவர்க்கம் கண்டதாக "உம்மாவின் பாதத்தடியில்" கவிதை கூறுகிறது. "தாயின் பாதத்தின் கீழ் சொர்க்கம்" என்பது நபிகள் வாக்காயினும் மனித சமூகம் முழுமைக்குமான மாபெரும் உணர்வு அது. சொல்லப் போனால் தாய் பண்பாட்டின் சின்னமாவாள். இவை அனைத்தும் அக்கவிதையில் பட்டுத் தெறிப்பதைக் காணமுடிகிறது என பேராசிரியர் எம்.எஸ்.எம் அனஸ் ("இரவின் மழையில்"; 2013:vii) கூறுகின்றார்".

நபிகள் நாயகம் அவர்களிடம் ஒருவர் வந்து, "நான் அடிபணிந்து நிற்பதற்கும் மற்றவர்களை விடவும் சிறப்பானவராகக் கருதுவதற்கும் உரியவர் யார்?" எனக் கேட்டார்.

"உங்கள் தாய்" என நபிகள் சொன்னார்கள்.

"அதன் பின் யார்?" அவர் மீண்டும் கேட்டார்.

"உங்கள் தாய்" மீண்டும் அதே பதில்.

"அதன் பின் யார்?" வந்தவர் மீண்டும் கேட்டார்.

"உங்கள் தாய்தான்!" மீள அதே பதில்.

நான்காவது முறையாக "அடுத்தவர் யார்?" எனக்கேட்ட பொழுது,

"உங்கள் தந்தை" என்றார்கள் நபிகளார்.

"தாய் தன் பிள்ளையைத் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன்"

என்கிறது பைபிள். இறைவனின் அன்பை ஒப்பீடு செய்ய ஒரு தாயின் அன்பை இறைவனே தேர்ந்தெடுத்திருக்கிறான் என்பது, தாயின் மா உன்னத நிலையை உணர்த்தி நிற்கின்றது.

தாயின் பெருமையை வள்ளலார் சுவாமிகள்

பின்வருமாறு எடுத்தோதுகிறார்:

"வன்மை யறப்பத்து மாதஞ் சுமந்துநமை
நன்மை தரப்பெற்ற நற்றாய்காண்
மண்ணுலகில்
மூளும் பெருங்குற்றம் முன்னிமேன்
மேற்செயினும்
நாளும் பொறுத்தருளும் நற்றாய்காண்
மூளுகின்ற
வன்னெறியிற் சென்றாலும் வாவென்
றழைத்துநமை
நன்னெறியிற் சேர்க்கின்ற நற்றாய்காண் –
காலம் அறிந்தே கனிவோடு நல்லருட்பால்
ஞால மிசையளிக்கும் நற்றாய்காண்
வெம்பிணியும் வேதனையும் வேசறிக்கை
யுந்துயரும்
நம்பிணியும் தீர்த்தருளும் நற்றாய்காண்
வாடியழு தாலெம் வருத்தந் தரியாது
நாடி எடுத்தணைக்கும் நற்றாய்காண்"

தாய் பற்றிய படைப்புகளை எண்ணுகின்ற போது, முதலில் எம் மனத்திரையில் தோன்றுவது, மார்க்ஸிம் கார்க்கியின் "தாய்"(1907) நாவலாகும். "தாய்" பற்றிய கலைத்துவம்மிக்க சிறுகதைகளை தமிழில் கு. ப. ராஜகோபாலன், ந. பிச்சமூர்த்தி ஆகியோர் எழுதியுள்ளனர். ந.பிச்சமூர்த்தியின் "தாய்" கதையின் சுருக்கம் பின்வருமாறு அமைகின்றது.

"ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். விழுந்தடித்து ஓடும் நக்ஷத்திரங்களையும், மசிச்சித்திரங்கள் போன்ற மரங்களையும், நீர்ப்பரப்புகளையும் இருளைப் பிளந்து செல்லும் "சர்ச்லைட்" வெளிச்சத்தையும் மாறி மாறிப் பார்க்கும் லயத்திலிருந்த என்னை, ஒரு குழந்தையின் அழுகை சப்தம் பிடித்திழுத்தது. ஜன்னலுக்கு வெளியே நீட்டியிருந்த கழுத்தை உள்ளுக்கிழுத்தேன்.

இப்படி ஆரம்பிக்கிறது கதை. குழந்தை அழுதது எனச் சொன்னது உலர்ந்த சரீரத்தோடு கூடிய நாயுடு ஸ்திரியின் ஒன்பது மாதக் குழந்தை. பிள்ளைக்குக் "கொஞ்சம் எடுத்து விடேன்" என ஒரு கிழவி சொல்ல, "எல்லாம் ஆயிடுச்சு, மொக்கு மொக்குன்னு குடிச்சுட்டுக் கத்துது. இம்மே பாலிலே; ரத்தம் தான் வரும்" என்று சொல்கிறாள் அந்தத் தாய். அக்குழந்தை பாலில்லாத மார்பின் வேதனையை அறியாது ஸ்திரீயின் மடிமீது போய் ஏறிற்று. அதை அவள் அலுப்புடன் தள்ள, ஐந்து நிமிஷம் விடாது அலறித் தீர்த்து பிறகு தூங்கி விட்டது.

பின்பக்கத்திலிருந்து "ளொள், ளொள்" என்று இருமிக்கொண்டே ஒரு குழந்தை அழத்துடங்கிற்று. நாங்கள் அதை முதலில் சட்டை செய்யவில்லை. அடுத்தாற்போல, கரகரப்பான ஒரு ஆண்பிள்ளைக் குரல், "ஆராரோ ஆரிரரோ ஆளப் பொறந்தானோ.... அடிச்சாரைச் சொல்லியழு ஆக்கினைகள் பண்ணி வைப்போம்" என்று குழந்தையை சமாதானப்படுத்த முயன்றதும் எழுந்திருந்து திரும்பிப் பார்த்தேன். நாயுடு ஸ்த்ரீயும் எழுந்து பார்த்தாள்.

நாற்பது நாற்பந்தைந்து வயது மதிக்கத்தக்க ஆண், பக்கத்தில் பெரிய பையன் – ஆறு வயதிருக்கலாம், இரண்டு வயது பெண் ஒருத்தி, ஒரு கைக்குழந்தை. பெண்ணின் கழுத்தில் அட்டிகை பதக்கம் போல, ஒரு ரப்பர் நிப்பிள் கருப்புக் கயிற்றில் கட்டி தொங்க விடப் பட்டிருந்தது.

இருமிய குழந்தை கைக்குழந்தை, அதுவும் சாதாரண இருமல் அல்ல, கக்குவான் இருமல். நடுக் குழந்தைக்கும் அதே. மூன்று குழந்தைக்கும் தாய் இறந்து போய் விட, தகப்பனே மூன்றையும் கவனித்துக் கொள்கிறாராம். மீண்டும் குழந்தைகள் இரும, காலண்டை இருந்த தூக்குக் கூடையிலிருந்து ஒரு புட்டியை எடுத்து அதிலிருந்து எதையோ ஒரு அவுன்ஸ் கிளாஸில் ஊற்றி இரண்டு குழந்தைகளுக்கும் கொடுக்கிறார். "என்ன மருந்தா கொடுத்தே அதுங்களுக்கு?"

சொன்ன பதில் நம்மை அதிர்ச்சிக்கு உள்ளாக்குகிறது. "இல்லே, இந்த இருமலுக்கு மருந்து இல்லியாமே. தானே தான் போகணுமாம். குடுக்கல்லே... நான் கொடுத்தது பிராந்தி"

நாயுடு ஸ்த்ரீ எழுந்து போய் "பாவம்! தாயில்லாப் புள்ளைங்களா?" என்று அங்கலாய்த்தாள்.

அரை மணி நேரம் சென்றிருந்தது. அனைவரும் விதியைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்க, கைக்குழந்தை மறுபடியும் இருமலில் துடித்தது. வாயிலிருந்த நிப்பிள் கீழே விழ குழந்தை அழ ஆரம்பித்தது. உட்கார முடியாது அழுகைச் சத்தம். குழந்தையின் தகப்பன் மீண்டும் கூடை நோக்கி கை நீட்ட, அந்த ஸ்த்ரீ சொன்னாள்....

"பிராந்தியைத் தொடாதீங்க. பிள்ளையை இப்படி என்கிட்ட குடுங்க" என்று குறுக்கிட்டாள் நாயுடு ஸ்த்ரீ. குழந்தையை இரு கையாலும் வாங்கித் தன் உலர்ந்த மார்போடு சார்த்திக் கொண்டாள். குழந்தையின் இருமல் ஓய்ந்தது. அவள் நெஞ்சில் அருள் சுரந்தது. ஆனால் மார்பில் பால் சுரந்ததோ என்னமோ!" (ந. பிச்சமூர்த்தியின் தேர்ந்தெடுத்த சிறுகதைகள்).

தாய் பற்றிய இத்தகைய புரிதல்களுடன், ஈழ எழுத்தாளர் வ.அ.இராசரத்தினம் அவர்களின் "தாய்" சிறுகதையின் தனித்துவம் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

2

வ.அ.என அறியப்படும் வ.அ.இராசரத்தினம் மூதூர் திருக்கோணமலையில், *1925.06.05* அன்று அந்தோனியா, வஸ்தியாம்பிள்ளை தம்பதியினருக்கு மகனாக பிறந்தார். தாமரைவில் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையிலும் பின்னர் மூதூர் புனித அந்தோனியார் பாடசாலையிலும் கல்வி கற்றார். *1952* இல் மேரி லில்லி திரேசா என்ற பெண்ணை மணந்தார். மனைவியும் ஒரு ஆசிரியை. இருவரும் இணைந்து ஒரு பதிப்பகத்தை நடத்தினார்கள். மனைவி அவரது எழுத்துப் பயணத்திற்கு உந்துசக்தியாக இருந்திருக்கிறார் என்பதை "ஒரு காவியம் நிறைவு பெறுகிறது" என்ற படைப்பு

நிறுவிக்காட்டியுள்ளது. தனது மனைவி இறந்ததும் அவர் அனுபவித்த உணர்வுகளையும், அவரது மனநிலையையும் உணர்ச்சிகரமான சொற்சித்திரமாக இராசரத்தினம் எழுதியிருக்கிறார். இதுபற்றி அ.யேசு ராசா (அலை 01; கார்த்திகை 1975) பின்வருமாறு எழுதுகின்றார்.

"வ.அ.இராசரத்தினம் என்ற ஆற்றல் வாய்ந்த இலக்கியக்காரனில் மனைவியின் மரணம் ஏற்படுத்திய தாக்கம், "ஒரு காவியம் நிறைவு பெறுகிறது" என்ற சிறுகதையில் சமீபத்தில், கலா வெளிப்பாடடைந் துள்ளது; வாழ்க்கைப் பரப்பில் நிகழ்ந்த பல்வேறு அனுபவங்களின் கோவையான அது, உண்மையில் ஒரு "மெய்யுள்" தான்.

புதுவீடு குடிபுகுகையில் "நவதானியங்கள்" ஏந்திச் செல்லும் மனைவியைத் தொடர்ந்து, இராசரத்தினம் என்ற கலைஞன் நடக்கிறான். அவனது கைகளில் விலையேறப்பெற்ற அவனது பொக்கிஷங் களில் இரண்டு. ஆம்! சிலப்பதிகாரமும், மு.தளைய சிங்கத்தின் "புதுயுகம் பிறக்கிறது" சிறுகதைத் தொகுப் பும். சுற்றத்தினர் ஆச்சரியமாகவும் ஆத்திரமாகவும் நோக்குகின்றனர். அவனைப் புரிந்தவளாய் மனைவி "லில்லி" மட்டும் திரும்பி மெல்லச் சிரித்தபடி சொல்கிறாள்:

"உங்கள் பேனையை எடுத்தீர்களா?"

"விடுவேனா பையில் இருக்கிறது."

"எடுத்துக் கையில் வைத்துக்கொள்ளுங்கள்."

(பதிவுகள்; 2003:10)."

1946இல் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து ஆசிரியராக பயிற்சியைப் பெற்றார். இக்காலப்பகுதியில் "மழையால் இழந்த காதல்" என்ற சிறுகதையை எழுதினார். இச்சிறுகதை 1948 செப்டம்பரில் தினகரன் பத்திரிகையில் வெளியானது. முதல் கவிதை 1948இல் "எரிமலை" (ஆசிரியர் அ.செ.முருகானந்தன்) பத்திரிகையில் களம் கண்டது. கொழுகொம்பு (1957), கிரௌஞ்சப் பறவை கள் (1975), ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கின்றது (1992), மண்ணிற் சமைந்த மனிதர்கள் (1996) முதலான நாவல்களையும், தோணி (1962), ஒரு காவியம் நிறைவு பெறுகிறது (1996), கொட்டியாரக் கதைகள் (1998) போன்ற சிறுகதை தொகுதிகளையும், பூவரசம் பூ (1977) என்ற அல்லாமா இக்பால் மொழிபெயர்ப்புக் கவிதை நூலையும், மூதூர் புனித அந்தோனியார் கோயிலின் பூர்வீக வரலாறு (1994) என்ற சரித்திர நூலையும், இலக்கிய நினைவுகள் (1994) என்ற நினைவுக் கட்டுரைகள் நூலையும், பொச்சங்கள் (1997) என்ற கட்டுரைத் தொகுதியையும் வெளிக் கொணர்ந்துள்ளார். இவருடைய ஆளுமை பன்முக பரிமாணங்களை கொண்டிருந்தமைக்கு இந்நூல்கள் சான்றுகளாகின்றன. 75 வருடங்களும் 08 மாதங்களும் 17 தினங்களும் வாழ்ந்த வ.அ. ஈழத்து இலக்கிய உலகிற்கு ஆற்றிய பணிகள் உயர்வானவை. பதிமூன்றுக்கும் மேற்பட்ட நூல்கள், இரண்டு இதழ்கள் என்று இவரது சாதனைகள் விரிகின்றன. சொந்த அச்சுக்கூடம் வைத்து நூல்களைப் பதிப்பித்துள்ளார். மரணிக்கும் (2001) வரை எழுத்தும், வாசிப்புமே வ.அ.வின் ஜீவ மூச்சாக இருந்திருக்கின்றது.

வ.அ.இராசரத்தினத்தின் முதல் கதைத்தொகுதி யின் மகுடக்கதையான "தோணி"யே படைப்புலகில் கவனிப்பையும் வரவேற்பையும் பெற்றது. இக்கதையில் இவரது எழுத்தாற்றல், யதார்த்த நோக்கு, மனித நேயம் கலையழகோடு பிரவகித்துள்ளது. "கலையழகுடன் யதார்த்த வாழ்வைச் சித்திரிக்கும் நல்ல கதை தோணி. இப்படிப்பட்ட வாழ்க்கைச் சித்திரங்கள் பலவற்றைத் தரமான கதைகளாக உருவாக்கியிருக்கிறார் இராசரெத் தினம்" என வல்லிக்கண்ணன் கணிப்பீடு செய்துள்ளார். "சிறுகதைகளை இவர் சிருஷ்டித்திருப்பது போல மற்றவர் கள் செய்யவே முடியாது" என்ற கனகசெந்திநாதனின் கருத்துக்கு இவரது "தாய்" சிறுகதை நல்லதோர் உதாரணமாகும்.. "தாய்" சிறுகதையை வீரகேசரி பத்திரிகையில் எழுதினார். பின்னர் இக்கதை "கொட்டியாரக் கதைகள்" என்ற இவரது சிறுகதைத் தொகுதியிலும் இடம் பெற்றது.

மனித வாழ்வின் போராட்டங்களையும், அவலங்களையும், உணர்வுகளையும் உயிர்ப்புடன் சித்திரிக்க வல்லவர் வ.அ. என்பதற்கு "தாய்" சிறுகதை சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது. மண் வாசனையையும் மண்ணின் உயிருள்ள மொழியையும் அழகியல் பிரக்ஞையுடன் "தாய்" என்ற உரைபடைப்பு உணர்த்தி நிற்கிறது.

3

தாய் பாத்திரம் எவ்வாறு உருவாக்கம் பெற்றுள்ளது?

நுண்ணுணர்வுடன் தாய் பாத்திரத்தினை வ.அ. படைத்துள்ளார். பிரதியின் தலைப்பு தாய். கதையின் மூல பாத்திரம் தாய். கதைசொல்லி தாய். கதையை முழுமை யாக நகர்த்திச் செல்லும் பாத்திரம் தாய். கதை தொடங்கி முடியும் வரை உரையாடும் ஒரே பாத்திரம் தாய். ஆக, ஒரு தாயின் சுயசரிதையே தாய் சிறுகதை. இந்தப் பிரதியி லிருந்து தாய் பாத்திரத்தை எடுத்துவிட்டால், சொல்ல கதையில்லை. ஒரு புதிய கலை அணுகலுடன் தாய் பாத்திரம் உருவாக்கம் பெற்றுள்ளது.

தாயின் கதையை இவ்வாறு சுருக்கிப் பார்க்கலாம். விவசாயியான கணவன் எதிர்பாராத விதமாக மரணித்துவிடுகிறான். குடும்பப்பாரம் அந்த தாயின் தலையில். மிகுந்த கஷ்டத்துடன் உழைத்து, மகளையும் மகனையும் படிப்பிக்கிறாள். மகள் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலைக்கு தெரிவாகிறாள். மகளின் படிப்புச் செலவுக்காக நெல்லு வெட்டுங்காலங் களில் அப்பம் சுட்டுவித்தல் முதலான தொழில்களில் ஈடுபடுகின்றாள். ஆசிரியப் பயிற்சியின் நிறைவுக் காலத்தில் நிகழவிருக்கும் பிரியாவிடை நிகழ்விற்கு சேலை வாங்குவதற்காக நூறு ரூபா பணத்தை அனுப்புமாறு மகள் கடிதம் எழுதுகிறாள். கடன்பட்டு, காதுதோட்டை விற்று காசு சேர்த்து மகளிடம் நேரில்

கொண்டு கொடுப்பதற்காக செல்கிறாள். கனவுகளை சுமந்து செல்லும் தாயை மகள் உதாசீனப்படுத்துகிறாள். வேலைக்காரியாக இழிவுபடுத்துகிறாள். மனம் சிதைந்த தாய் பைத்தியமாகிறாள்.

கதைக் கருவில் புதுமையில்லாவிட்டாலும், தாயை சித்திரித்த கலைமுறைமை புதுமையாகவும் செம்மையாகவும் அமைந்துள்ளது. ஓர் ஆசிரிய இளைஞனை வழியில் சந்திக்கின்ற தாயொருத்தி கூறுகின்ற தன்னுணர்ச்சிக் கதையாக இந்த உரை படைப்பு உயிர்பெற்றுள்ளது. தாயின் உணர்வுகளும், அவஸ்தைகளும், கடின உழைப்பும், தாய்மை உணர்ச்சி களும், பாசமும் இந்த உரையில் படைப்பாகியுள்ளன. மகிழ்ச்சி, பெருமிதம், அவலம், எதிர்பார்ப்பு, ஏமாற்றம், கோபம், பொறுமை, கவலை போன்ற உணர்ச்சிகளின் சங்கமமாக "தாய்" நகர்த்தப்படுகிறாள்.

தன்னுடைய ஊரினை (மல்லிகைத்தீவு) வெளிப்படுத்துகின்ற தருணங்களில் தாயின் மகிழ்ச்சி யும் பெருமிதமும் பரிணமிக்கக் காணலாம். பின்வரும் வரிகள் இதனை வெளிச்சமாக்குகின்றன.

"எங்க ஊர் மண் நல்ல பசையுள்ள மண், எங்க ஊர் அரிசியும் தான்தம்பி. அதுவும் பசையுள்ள அரிசிதான். சாப்பிட்டவனைப்பிரிய விடாது எங்கள் ஊர் அரிசி. அது மாதிரித்தான் சந்தனக்குழம்பாட்டம் இருக்கிற எங்கள் ஊர்ச்சுரியும் நல்லா ஒட்டிக் கொள்ளும்."

தாயின் துயர் நிறைந்த அவலம்தான் கதை முழுவதும் விரவி காணப்படுகின்றது. கீழ் வரும் சந்தர்ப்பத்தில் இது துல்லியமாக வெளிப்பட்டுள்ளது.

"எங்ககாலம் நல்லாத்தான் போச்சு. மூத்த மகளத் திருக்கிணாமல வேம்படிப் பாடசாலைக் கனுப்பித் தான் படிக்க வச்சார் என்ர புருஷன். ஆனாத் திடீரென்று அவர் செத்துப்போனார்... அவர் போனபிறகு நான்பட்ட பரயத்தைச் சொல்லேலா."

வெள்ளாம வெட்டு காலத்தில் அப்பம் சுட்டு, கூலிக்குக் குத்தி, கோழிவளர்த்து எப்படியெல்லாமோ சம்பாதித்து தன்பிள்ளைகளைக் காப்பாற்றுகிறாள்; படிக்கவைக்கிறாள். இந்த உழைப்பில் தாயின் தன்னம்பிக்கை தெரிகிறது. தன் மகள் படிப்பதற்காக "சதுரத்தச் சாறாப் புழிஞ்சி" பணம் அனுப்பியதாக சொல்வது, மகளை ஆசிரியை ஆக்கிவிட வேண்டு மென்ற துடிப்பும் ஆவலும் பாசமும் மேலோங்கி நிற்கின்றது. "ரெண்டு வருஷத்தில என்ர மகள் வாத்தியாரா வந்திடுவா. அதுக்குப் பிறகு எனக்கென்ன குறை? காலுக்கு மேல கால் போட்டுக் கொண்டு சாப்பிடுவன்" என்று தன்னுடைய ஆவலை, எதிர்பார்ப்பை புலப்படுத்துகிறாள் அத்தாய்.

தாயின் அதிதுயரும் ஆதங்கமும் கதையின் இறுதிப்பகுதியில் கொதிப்பாக வெளிப்பட்டுள்ளது. பிரியாவிடை வைபவத்துக்கு மகளுக்கு புதியசேலை ஒன்றினை வாங்குவதற்காக தன் காதுத் தோட்டை விற்று, அறாவட்டிக்கு கடன் பட்டு, பணத்தை நேரில் சென்று கொடுப்பதற்காக, பச்சரிசிப் பொங்கற் சோறும் கட்டிக் கொண்டு மட்டக்களப்பு றெயினிங் ஸ்கூலுக்குப் போகும் தாயின் பாச உணர்வு அவளின் பேச்சிலேயே பூரணை சந்திரனாக புலப்படுகின்றது. அதன் பிறகு நடந்ததை தாய் இவ்வாறு சொல்கிறாள்:

"அவளைக்கண்ட நான் சிரிச்சன்.

"ஏன் நீ வந்தனி?" என்று எரிஞ்சு விழுந்தா அவ. இதுக்கு நான் என்னத்தைச் சொல்றது? என் சேலைத் தலைப்பு முடிச்ச அவிழ்த்து நூறு ரூபாவையும் கொடுத்தன், நாலாமடிச்சு முடிஞ்சி வைச்சிருந்த பத்துப் பத்து ரூபாத் தாள்கள். அத வாங்கின உடன திரும்பிக் கொண்டு நடந்தா.

நான் அவ்விடத்திலேயே தெகைப்பூண்ட மிரிச்சவள்போல நிக்கன். மகள் போகக்குள்ள தன்னோட வந்தவளிட்டச் சொல்றா "எங்கம்மா இந்த வேலைக்காரிட்டக் காசக் குடுத்து அனுப்பியிருக்கா"

"எனக்கு பூமிபிளந்து என்னைவிழுங்கினாப் போல இருக்கு"

"பெத்த மனம் பித்து; பிள்ளை மனம் கல்லு" என்று முன்னோர்கள் சொன்னது இதைத்தானா? தாயின் எதிர்பார்ப்பு வானிலிருந்து விழுந்த கண்ணாடித் துண்டுகளாய் நொறுங்குகின்றது. தாய் எம்மைப்பார்த்து கேட்கின்றாள்:

"சொல்லுடா எனக்குப் பைத்தியமாடா?"

4

ஆசிரியர், மகள் ஆகிய கதாபாத்திரங்கள் எப்படி காட்டப்படுகின்றன?

தாய் என்ற தலைமைப் பாத்திரத்தினை சுற்றி ஆசிரியர், மகள் ஆகிய பாத்திரங்கள் பின்னப் பட்டுள்ளன. மேலும்,தாயின் கணவர், மகன், ஆசிரிய கலாசாலையில் மகளுடன் கற்கின்ற பெண் ஆகிய துணைப்பாத்திரங்களும் கதையோட்டத்தில் வந்து போகின்றன.

"தாய்" கதையில் ஆசிரியர் ஒரு கவனிப்புக்குரிய பாத்திரமாக ஒளிர்கிறார். ஆனால் அந்த ஒளியில் குளிர்மையோ சூடோ இல்லை. ஏன் அந்த ஒளியால் எதனையும் உற்றுநோக்கக் கூட முடியவில்லை. தாயின் கதையை ஆரம்பம் முதல் இறுதி வரை மூச்சுவிடாமல் கேட்கின்ற பாத்திரம்.

"என்டா தம்பி, சுரிக்குள்ள மாட்டிக்கொண்டியா? ஓம், சைக்கிள் முழுக்க நல்லாச் சேறு புடிச்சிற்று" இப்படி ஆசிரியருடன் பேசத்தொடங்குகின்ற தாய், ஆசிரியரை பின்வருமாறு அறிமுகப்படுத்துகிறாள்:

"உன்னைப் பார்த்தா, உன்ர உடுப்பைப் பார்த்தா வாத்தியார் போலத்தான் கிடக்கு."

பேசா பாத்திரமாகவும், கதையை முழுமையாக கேட்கின்ற பாத்திரமாகவும் ஆசிரியரை தாய் ஆக்கிக்காட்டுகிறாள். தாயின் வார்த்தைகளே இதனை நிதர்சனமாக்குகின்றன.

"மழைக்குப் பயப்படாமல் சேத்தை எடு. நீ சேத்தைத் தட்டி எடுக்கும் மட்டும் நான் உனக்கு ஒரு கதை சொல்றன். எங்க ஊர்க்கதை தான் தம்பி. என்ர

கதையுந்தான் சொல்றன் கேக்கிறியா? நீ பேசவே மாட்ட."

ஆசிரியர் என்ற பாத்திரம் ஒரு குறியீடு. கதையை வாசிக்கின்ற, கேட்கின்ற வாசகன் தான் ஆசிரியர்.

தாய் கதையில், சைக்கிளில் படிந்த சேறு பற்றிய விரிவான வருணனைகள் காணப்படுகின்றன. "சைக்கிள் முழுக்க நல்லாச் சேறு புடிச்சிற்று", "கம்புக் குச்சியால் சேற்றைத் தட்டுறியா?", என்றெல்லாம் வருகின்ற வருணனைகள் கதைப் பொருளுக்கு தொடர்பினை ஏற்படுத்துகின்றன. "தாய்" கதையில் சைக்கிளில் படிந்த சேறு ஒரு குறியீடாக இடம் பெறுகின்றது. தாய் மீது மகளுக்கு உள்ள உறவு, சைக்கிளில் படிந்த சேறாக சித்திரிக்கப்படுகிறது. அப்படியானால் மகள் பாத்திரம் சேறா?

வாசக சிந்தனை சைக்கிளில் சேறாக மகள் பாத்திரத்தினை இருக்கவைத்து விட்டு, ஏழை தாயின் "கனவாக" "நம்பிக்கையாக" மகள் பாத்திரத்தினை வ.அ. படைத்திருக்கிறார். அந்த நம்பிக்கை, "வாத்தியாரான உனக்குச் சொல்றன் நான் ஒரு வாத்தியார் அம்மா, ஓம் மகனே என்ர மகளும் ஒரு வாத்தியார்" என விரிகிறது. தாய் மகள் மீது கொண்ட கனவும் நம்பிக்கையும் கதை முழுவதும் விரவி நிற்கின்றது.

ஆசிரிய பயிற்சி பெறும் மகள் கதையில் ஒரு சந்தர்ப்பத்தில் மட்டுமே வருகிறாள். தாயின் நனவிலேயே அவள் உருவாக்கப்படுகிறாள். "மாதம் நாப்பது ரூபாக்காசு எனக்குப் பெரிய பொருட்டல்ல மகள். என்ர சதுரத்தச் சாறாப்புழிஞ் சென்றாலும் நான் உனக்குப் பணம் அனுப்புவன். நீ கவலைப் படாமற் கவனமாப் படிபுள்ள" என்று மகளுக்கு கடிதம் எழுதியதாக தாய் கூறுகிறாள். "ஆனா அவளைவிடவும் என்ர மகள் அழகி. கையால குத்தின பச்சரிசித் தவிட்டு நிறம். ஆனா உதடெல்லாம் எப்பவுமே அவளுக்குச் சிவந்திருக்கும். நீளமா ஒடிசலா இருப்பா. நடக்கக்குள்ள இடுப்பு முறிஞ்சு போயிருமோ என்று நினைக்கவேணும், ஆனா பெருவெளிக்குளத்துக்குள்ள பொழுது படக்குள்ள கூம்பிநிக்கிற தாமரைப் பூவைப்போல அவள் தாவணிக்கு மேலால நெஞ்சு நிமிர்ந்திருக்கும். என்ர பிள்ளையைப்பார்த்தவன் சீதனம் இல்லாமலேயே அவளைக் கொண்டு போய்விடுவான் என நான் எண்ணுவன்." இவ்வாறு தாய் மகளை படம் பிடித்துக் காட்டுகிறாள்.

மகளை ஆசிரியையாக உருவாக்க தான் பட்ட கஷ்டங்களையே தாய் கதைகதையாக சொல்லிக் காட்டுகிறாள். "கூலிக்குக் குத்தி, கோழிவளர்த்து, அப்பஞ்சுட்டு வித்து எப்படியெல்லாமோ சம்பாதித்து மகளுக்குக் காசு அனுப்பினன்" என்ற வரிகள் ஒரு சிறு எடுத்துக்காட்டு மட்டுமே.

கதையின் முடிவுப்பகுதியில் தான் மகளின் சுயரூபம் வெளிப்படுகின்றது. "எங்கம்மா இந்த வேலைக்காரிட்டக் காசை குடுத்து அனுப்பியிருக்கா" என்று அவள் கூறிச்செல்கிறாள். மகள், தாயை தேளைக் பூண்ட மிரிச்சவள் போல ஆக்கிவிடுகிறாள்; பூமிபிளந்து விழுங்கினாப் போல செய்கிறாள். மொத்தத்தில் பெத்த தாயை, சரீரத்தை சாறாகப்பிழிந்து தன்னை உயர்ந்த நிலைக்கு உருவாக்கிய தாயை, மகள் பைத்தியக்காரியாக கதைசொல்லும் நிலைக்கு தள்ளி விடுகிறாள்.

அவள் போலிப்பெருமை உடையவளாக, நன்றி மறந்தவளாக, தாய் பாசம் அற்றவளாக, ஆணவம் கொண்டவளாக சித்திரிக்கப்படுவதன் மூலம் தாய் மிக உயர்வாக வாசக உள்ளத்தில் உட்கார்ந்து விடுகிறாள். எனவேதான் மகள் இச்சிறுகதையில் மிக முக்கிய பாத்திரமாகிறாள்; தமிழக தொலைக்காட்சி நாடகங் களில் வருகின்ற வில்லிகள் போல!

ஒரு படைப்பாளனின் கற்பனை, உணர்ச்சி, எண்ணம் ஆகிய அனைத்தும் கதாபாத்திரங்களின் மூலமாகவே வடிவம் பெறுகின்றன. கதையில் வரும் மனிதர்கள் உயிர் வாழும் மனிதர்களைக் காட்டிலும் ஆற்றல் பெற்றவர்கள்; ஆயுள் மிக்கவர்கள். இலக்கியத்திறனை எடைபோடுவதற்காக மட்டுமே கதை மாந்தர்கள் உருவாக்கப்படுவதில்லை. ஒரு குறிப்பிட்ட காலத்துச் சமூகத்தின் வாழ்க்கையை அறிந்து கொள்ளும் பொருட்டும் இவர்கள் உருவாக்கப்படு கின்றனர். வ.அ.இராசரத்தினம் தாய் சிறுகதையில், தாய், மகள் ஆகிய பாத்திரங்களை இத்தகு அணுகுமுறை யிலேயே படைத்திருக்கிறார்.

## 5

என்ன உத்தியில் இந்த உரைப்படைப்பு உருவாக்கப் பட்டுள்ளது?

நனவோடை உத்தியில் தாய் என்ற உரைப் படைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. உரைநடை இலக்கியத்தில், குறிப்பிட்ட நேரத்தில் மனத்தில் எழும் எண்ணங்களையும் உணர்வுகளையும் எழுதுதல் நனவோடை எனப்படுகின்றது. நனவோடை முறை என்பது வாசகர்களைச் சுண்டியிழுக்கும் ஒரு உத்தி யாகவே கருதப்படுகிறது. நாவல்களிலும், சிறுகதை களிலும், கவிதைகளிலும் காலம், இடம் ஆகியவற்றின் பின்னணியில் நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்திக் கூறாமல், உள்மனத்தின் எண்ணங்களை அலையாகக் கிளப்பிவிட்ட நிலையில் அவற்றிற்குச் சொல்வடிவம் தந்தால் அதனை நனவோடை முறை என்று கூறலாம். "நனவோடை" உத்தியைப் படைப்பாளன் கையாளும் போது சொல்லாட்சி நுட்பம் உடையதாக அமையும். நனவோடை உத்தியை, "கவர்ச்சித் திறன் சொல்லாட்சி" என்றும் குறிப்பிடலாம். இந்த நனவோடை முறை என்பதை, பாத்திரத்தின் நினைவுப் பாதையில் மேல் மன எண்ணத்தின் செயல்பாடாகவும், பாத்திரத்தின் அடிமன எண்ணத்தின் செயல்பாடாகவும் கொள்ளலாம். இம்முறையில் கதை மாந்தர்களின் மனம் பற்றிய பல்வேறு உண்மைகளை அறிந்து கொள்ளலாம். கதை மாந்தர்களின் நிறை, குறைகளை இம்முறையில் இனம் காண முடிகிறது. கதைமாந்தர்களின் உண்மைத்

தன்மையை ஒப்பீடு செய்து அறிந்து கொள்ளவும் உதவுகிறது. "தாய்" சிறுகதை முற்றிலும் நனவோடை முறையிலேயே அமைந்திருப்பதை காண முடிகிறது. சிறுகதைகளில் நனவோடை உத்தி என்பது புதுமைக்கு உரியதாகச் சிறப்புப் பெறுகிறது. நனவோடை உத்தியைப் பயன்படுத்தித் தமிழில் சிறுகதை படைத்தோரில் மௌனி, லா.ச.ராமாமிர்தம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். வ.அ.இராசரத்தினமும் நனவோடை உத்தியை "தாய்" சிறுகதையில் செம்மையாக பயன்படுத்தியுள்ளார் என்பது வெளிப்படை.

மனம் பேதலித்த தாய், அவளது ஆசிரியப் பயிற்சி பெறும் மகள், ஆசிரியப் பணியாற்றுவதற்காக மல்லிகைத் தீவுப்பாடசாலைக்குச் செல்லும் இளைஞன் ஆகிய முக்கிய பாத்திரங்களைச் சுற்றிக் கதை நனவோடை அணுகுமுறையில் வடிவமைக்கப் பட்டுள்ளது. தாய் என்ற கதைசொல்லியின் உள்ளக் கிடக்கைகளே கதையாகிறது. "என்னடா தம்பி" எனத் தொடங்கும் தாயின் உள்மனவாய் அல்லது நினைவுப் பாதை "வரட்டா மகனே" என்று முடிக்கின்றது. கதை முழுவதும் தாயின் நனவே ஓடையாக பாய்கிறது. செய்நேர்த்தியோடு இந்த ஓடையை வ.அ. செதுக்கியுள்ளார் என்று, கதையை வாசித்து முடிக்கையில் சொல்லத் தோன்றுகின்றது.

6

தாய் கதையின் உயிர் மண்வாசனையா?

மண்ணின் இருத்தலை கலையாக்கும் நுட்பம் அறிந்த ஆளுமையாக ஈழத்து இலக்கிய வானில் ஒளிர்ந்தவர் வ.அ.இராசரத்தினம். இவருடைய மண் வாசனை வீசும் வீச்சான சிறுகதைகளை "கொட்டியாரக்கதைகளி"ல் தரிசிக்கலாம். "தாய்" கதை முழுக்க முழுக்க மண்வாசனை கமழும் கதையாக விளங்குகின்றது. மூதூர்ப்பிரதேசத்தின் மண்வளத்தையும், பேச்சு வழக்கினையும் இக்கதை அழகொளிரச் சித்திரிக்கின்றது. தாய் கதையில் அவர் பயன்படுத்திய மொழியும், கதை கூறும் உத்தியும் மூதூர்ப் பிரதேச மண்வாசனையை உணரச்செய்கின்றது.

மல்லிகைத்தீவு கிராமத்துத்தாயின் உணர்வுகளே இந்த உரைப்படைப்பில் உயிராகியுள்ளது. மல்லிகைத்தீவின் பண்புகளே கதையில் அழகு உடலாகின்றது. உயிரும் உடலும் கலந்து செதுக்கப்பட்ட வரிகள் வருமாறு:

(அ) இன்னமும் நல்லா ரோட்டு போல, கோட கொண்டல் காலத்தில இந்தக் கழித்தரை நல்லா கெட்டிப் போயிருக்கும். அந்தக் காலத்தில் கல்ரோட்டுல ஓடுற மாதிரி சைக்கிள் ஓடலாம். ஆனா மழை பெஞ்சா இந்தத் தரை சக்கரை மாதிரி குழைஞ்சு போயிருக்கும். அதுவும் எங்க ஊர் மண் நல்ல பசையுள்ள மண்.

(ஆ) எங்க ஊர் அரிசியும் தான் தம்பி அதுவும் பசையுள்ள அரிசிதான்.

(இ) வெள்ளாம வெட்டுக்காலத்தில் எங்கட ஊருக்கு வந்தியெண்டால், தண்ணி குடிச்சிக்கமாட்ட. நானென்டா எல்லாக் கிணத்தடியிலும் மணச்சவுக்காரத்தை மேலில தேய்ச்சித் தேய்ச்சிக் குளிக்கிறதால கிணத்துத் தண்ணியெல்லாம் சவுக்கார மணம் தான்.

7

தாய் சிறுகதையை தூக்கி நிறுத்துவது அதன் மொழியா?

"கூடியவரை பேசுவது போல் எழுதுவதுதான் உத்தமம் என்பது என்னுடைய கட்சி. எந்த ஒரு விசயம் எழுதினாலும் சரி, ஒரு கதை, அல்லது தர்க்கம், ஒரு சாஸ்திரம், பத்திரிகை விஷயம் எதை எழுதினாலும் வார்த்தை சொல்கிற மாதிரியாகவே அமைந்துவிட்டால் நல்லது."

இவ்வளவும் பாரதி வசன நடையைப்பற்றி ஒரு சந்தர்ப்பத்தில் எழுதிய வார்த்தைகள்.

ஒரு சிறுகதையில் அல்லது நாவலில், சிலவேளை கவிதைகளில் நாம் பாத்திரங்களின் பேச்சை அப்படியே எழுதவேண்டி இருக்கிறது. பாத்திரங்களின் இயல்பான தன்மை விகாரப்படாதிருப்பதற்காக, பாத்திரத்தின் பிரதேசம், தொழில், வாழ்க்கை முறை என்பவற்றின் அடிப்படையில் அதன் பேச்சில் சொற்கள் அடையும் மாறுதல்களை அப்படியே எழுத்தில் கொண்டு வருகின்றோம். சென்னைத் தமிழ், யாழ்ப்பாணத் தமிழ், மட்டக்களப்புத் தமிழ் என்று தமிழ் வேறுபடுவது இந்த உச்சரிப்புக் கொச்சைகள் மூலமும் சில வட்டார வழக்குகளினாலும்தான். அந்த உச்சரிப்புக் கொச்சையை எழுத்தில் கொண்டு வருவதைத்தான் நாம் பேச்சை எழுதுவது என்கிறோம் (எம்.ஏ.நுஃமான்; "மொழியும் இலக்கியமும்"; 2007: 15). "கொட்டியாரத்திலிருந்து தார் றோட்டில ஓடிவந்த மாதிரிச் சந்தியில இருந்து மல்லிகைத்தீவுக்குப் போயிரலாம் என்று நினைச்சியா" என்றெழுதப்படுவதே பேச்சை எழுதுதல் என்று சொல்லப்படுகின்றது. இதற்கு வ.அ.இராசரத்தினத்தின் "தாய்" சிறுகதை சிறந்த எடுத்துக் காட்டாகும். ஏனெனில், இச்சிறுகதை முழுமையாக மூதூர் பேச்சு மொழியிலேயே எழுதப்பட்டிருக்கின்றது.

"திருகோணமலைப் பிரதேசமும் நாற்பதுகளின் பிற்பகுதியிலேயே சிறுகதையுலகினுள் பிரவேசிக்கின்றது. வ.அ.இராசரத்தினூடாக, முதன் முதலாக மூதூர்க் கிராம விவசாயிகளின் வாழ்வு இலக்கியமாகியது" என்று பேராசிரியர் செ. யோகராசா (மூன்றாவது மனிதன்; ஜனவரி மார்ச் 2000:40) எழுதுகின்றார். இக்கூற்றினை மெய்ப்பிப்பது போல, இராசரத்தினமே பின்வருமாறு கூறுகின்றார்.

"மூதூர் தான் நான் பிறந்த மண். இந்த மண்ணிற் பிறந்தமைக்காக நான் பெருமைப்படுகின்றேன். ஏனென்றால், நீர்வளமும், கடல்வளமும் உடையது எனது மண். இந்த மண்ணின்மகன் என்ற உணர்வே என் எழுத்துக்களின் அடிநாதம். இம்மண்ணின் வனப்பையும் வளத்தையும் நேசிப்பதே என் யோகம்! இம் மண்ணின் மக்களது வாழ்வை இலக்கியமாக்குவதே என் நோன்பு. நான் எழுத ஆரம்பித்த நாட்களிலிருந்தே இத்தவத்தை

இயற்றி வருகிறேன்."

மூதூர் மக்களது இருப்பினை முன்வைத்து பேச்சுமொழி நடையில் "தாய்" சிறுகதையை வ.அ.எழுதியுள்ளார். மூதூர்ப்பிரதேச வழக்காற்று மொழிநடை மாத்திரமே பரிமளிப்பது, இக்கதையை தூக்கி நிறுத்துகிறது. தாய் தானே கதைசொல்வதாக அமைவதால் பேச்சு வழக்கில் கதை சொல்லப்படுவது யதார்த்தமாக உள்ளது. நியம மொழியற்ற உணர்வு ரீதியான பொருளாளடைய பிரதேச மொழியூடாகவே வ.அ. பேசுகின்றார்.

கதையில் சொல்லாட்சித் திறன் மெச்சுதலுக் குரியது. தன்னுடைய ஊரினை அறிமுகப்படுத்துகின்ற பேச்சு மொழி அழகினைப் பாருங்கள்:

"எங்கட மல்லிகைத்தீவு ஊர வளைச்சு ஒரே வயல் வெட்ட, பெரியவெளி, வடிச்சல்சேனை, சக்கரை வெட்ட, சிறுக்குளம் என்று எவ்வளவு வயல்வெட்ட? எல்லாம் ரெண்டுபோகம் செய்கிற நீர்பாய்ச்சல் பூமி. பெருவெளிக் குளத்தில் நெறைஞ்சி, மகாவலிகங்கைத் தண்ணி வயலுக்கெல்லாம் பாயும். எங்கஊர் ஒண்ணும் பெரிய ஊர் இல்ல. வயல் வெட்டைக்கு நடுவில இருக்கிற திட்டிதான் எங்க ஊர்."

இவ்வாறு கதைமுழுவதும் பிரதேச பேச்சு மொழியே உயிர்நாடியாக உள்ளது. ஏலாமை (இயலாமை), கரி (சேற்றுச்சகதி), சேத்தை (சேற்றை), நெறைஞ்சி (நிறைந்து), திட்டி (மேடு), மம்மட்டிய (மண் வெட்டி), மாலோகம் (அளவுக்கு அதிகமாக), என்று பிரதேச சொற்கள் கதைமுழுவதும் மூதூர்க்கடலென பரவிக்கிடக்கின்றன. பிறமொழிச் சொற்கள் பிரதேசத்தில் பேசப்படுவதை பிரக்ஞைபூர்வமாகவே கையாண்டுள்ளார். உதாரணத்திற்கு சில சொற்கள் வருமாறு; றோதை, டிஸ்திறிக், கறார். வஸ், றெயினிங்ஸ்கூல், எலவன்ஸ், ரவுண், சூட்கேஸ்.

"வெளிக்குள்ள பொழுதுபடக்குள்ளே கூம்பி நிற்கிற தாமரைப் பூவைப்போல", "ராசா ஏறின குதிரை மாதிரி", "தெகைப் பூண்ட மிரிச்சவள்போல", "பூமி பிளந்து என்னை விழுங்கினாப்போல" முதலான உவமைகளும், "தைத்தூத்தல் தலை நனையாது", "நாய்க்கு நடுச்சாமத்திரத்திலயும் நக்குத்தண்ணிதான்" என்ற பழமொழிகளும், "சதுரத்தைச் சாறாப்புழிஞ்சு" போன்ற மரபுத்தொடர்களும் மண்வாசனை வீசும் பேச்சுமொழியில் அழகியலாகின்றன.

உணர்ச்சிகளின் சுழிப்புகளை மூதூர்ப்பிரதேச வழக்கில் கூறும்போது உயிர்ப்புடையதாக அமைந் துள்ளது. உதாரணத்திற்கு சிலவரிகள்:

"நான் தெகைச்சிப்போனன். கார்த்திகை மாசத்து அடை மழை காலம். என்ர கையில மடியில ஒரு காசும் இல்ல, ஊரில ஒரு தொழிலும் இல்ல, எல்லாரும் தைப்பொறந்த பொறகு வாற வெள்ளாம வெட்ட நம்பி கடன்படுத்தின்ற பஞ்சகாலம். இந்த பஞ்சகாலத்துல எப்படி நான் நூறு ரூபாய் பெரட்டுறது, எதை நம்பிக் கடன் வாங்கிறது?"

கதை நகர்விலும் பாத்திரங்களின் குணவியல்பு களிலும் பேச்சுத் தமிழ் முக்கிய பங்களிப்பினைச் செய்துள்ளது. "என்னடா தம்பி.." எனத்தொடங்கி "வரட்டா மகனே." என்று முடியும் வரையில் பேச்சே மொழியாகி உள்ளது. ஆயினும் ஆங்காங்கே இலக்கிய வழக்குச் சொற்கள் கலந்திருப்பதை ஒரு குறையாகக் கூறலாம்.

8

சிறுகதை என்பது தந்தத்தில் பொம்மையைக் கூர்மையாய்ச் செதுக்குவது போன்றது. நல்ல நடை யினால் சிறுகதை செதுக்கப்பட வேண்டும். சொல்லு கின்ற செய்தியை, கூர்மையாய்த் தெளிவாய்ச் சொல்ல வேண்டும். இதன் மூலமே சிறுகதையின் கலை யம்சத்தைப் பிரகாசிக்கச் செய்ய முடியும். இதனை தெளிவாக உணர்ந்தே வ.அ. "தாய்" சிறுகதையை எழுதியுள்ளார். ஏனெனில் இக்கதை கருத்துத் தெளிவும், வெளியீட்டில் சிக்கனமும், தெளிவான ஓட்டமும், தொய்வில்லாத ஈர்ப்பும் கொண்டதாக அமைந்துள்ளது. மேலும் இக்கதை கச்சிதமான வடிவையும் கூர்மையான முடிவையும் கொண்டுள்ளது. மொத்தத்தில் "தாய்" என்ற தனித்துவம் மிக்க சிறுகதை சாதாரணமானது அல்ல, அது சாதனையானது என்று எழுதுவது பிழையாகாது.



இ.இராஜேஸ்கண்ணனின் "இரகசியமாய்க் கொல்லும் இருள்" சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா எழுத்தாளர் குப்பிழான் ஐ. சண்முகன் தலைமையில் யா/இமையாணன் அ.த.க. பாடசாலையில் 9.5.2015 அன்று நடைபெற்றது. வெளியீட்டுரையை கலாநிதி த.கலாமணி அவர்களும் நூல் பற்றிய உரைகளை எழுத்தாளர்களான சி.ரமேஸ், த.அஜந்தகுமார், தி.செல்வ மனோகரன் ஆகியோர் நிகழ்த்தினர்




கவிஞர் கருணாகரனின் இப்படியொரு காலம், நெருப்பின் உதிரம்,வேட்டைத் தோப்பு ஆகிய மூன்று நூல்களின் அறிமுக விமர்சன அரங்கு திருமறைக்கலா மன்றத்தில் நிலாந்தன் தலைமையில் 10.5.2015 அன்று நடைபெற்றது. விமர்சன உரைகள் க.தணிகாசலம் சி.ரமேஸ்.க.சித்தாந்தன், அன்ரன் அன்பழகன் ஆகியோர் நிகழ்த்தினர். நிகழ்வின் இறுதியில் கலந்துரையாடலும் இடம்பெற்றது.

வி. ஜீவகுமாரன்

# இரண்டு கண்கள்

அம்மா மாமிசச் சட்டிகளை கவிழ்த்து விட்டு கோவிலில் சுவாமிக்கு பூக்கட்டிக் கொடுத்துக் கொண்டு பாலும் பழத்துடன்... நாகரத்தினமோ கூறுபோட்ட திருக்கை துண்டை கையில் ஏந்தி விற்றுக் கொண்டு 3 மிளகுடனும் 3 மிடறு தண்ணியுடனும்...



இது ஜீவகுமாரனின் சிறுகதையா? அல்லது ஜீவகுமாரனின் கதையா என்பது அல்ல கேள்வி.

அவரின் இரண்டு கண்களிலும் ஒரேவேளையில் எவ்வாறு இரண்டு வெவ்வேறு பெண்கள் தோன்றினார்கள் என்பது தான் கேள்வி.

ஒருவர் கோயிலில் பூக்கட்டிக் கொண்டு... மற்றவர் சந்தையில் மீன் விற்றுக் கொண்டு..

இது அதிசயம் தான்.

நாம் அறிந்திராத அல்லது அனுபவித்த ஒன்றைச் சந்திக்கும் பொழுதுதானே அதனை அதிசயம் என்று சொல்லுகின்றோம்.

***

நாகரத்தினம்!

இந்தப் பெயர் ஆண்களினுடையதா அல்லது பெண்களினதுடையதா என்ற ஆராய்ச்சி எனக்கு அறிவு தெரிந்த காலம் முதல் தொடங்கி விட்டது.

காரணம் நாகரத்தினம் என்பது அதிகமாக ஆண்களின் பெயர்கள் என அறியப்பட்டிருந்த வேளையில் "வேவி" எனவே நினைத்திருந்த என் அம்மாவின் பெயர் நாகரத்தினம் என கூப்பன் அட்டையில் தெளிவாக எழுதப்பட்டிருந்தது.

அப்போது நான் மூன்றாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன்.

அம்மாவிடமே கேட்டேன்.

"ஆம்" என்றார்.

"ஏன் ஆம்பிளைப் பெயர் உங்களுக்கு?" இடுப்பில் கை வைத்துக் கொண்டு கேட்டேன்.

"மூத்த அக்காக்கு தங்கரத்தினம்.. இரண்டாவது அக்காக்கு இரத்தினம்... எனக்கு நாகரத்தினம் என உன் அம்மப்பா வைச்சிட்டார்"

"அவருக்கு டேஸ்டே இல்லையம்மா... நான் என்றால் என்ன சுப்பராய் வைச்சிருப்பேன்" எனச் சொல்லிக் கொண்டே அம்மா சுட்டு வைத்திருந்த

பனங்கிழங்குகளை கிட்டி விளையாட வந்திருந்த எனது நண்பர்களுக்கும் எடுத்துக் கொண்டு ஓடிப் போனது எனக்கு நல்ல ஞாபகம்.

இதே அம்மா எனக்கு காதல் திருமணம் ஆன பொழுது என் மனைவியின் பெயர் "குலமங்கலேஸ்வரி" என்று நான் சொன்னபோது தனது கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டு, "நல்ல ஸ்டைலிலான பெயர்" என சொன்ன பொழுது நினைத்துக் கொண்டேன் - இத்தனை வருடங்களுக்குப் பின் அம்மா என்னை பழி வாங்கி விட்டா என்று. ராஜீவ்காந்தியின் கொலையும் 18 வருடங்களுக்கு பின்பு நடந்த இனப்படுகொலையும் போல.

அம்மாக்கும் எனக்கும் இப்படி சின்ன சின்ன உரசல்களும் ஊடல்களும் வந்து போனாலும் எல்லோருக்கும் போல என் அம்மா என் அம்மாதான்.

தங்கச்சி பிறந்திருந்த பொழுது அவருக்காக செய்திருந்த சரக்குகறியில் இருந்த கோழித்துண்டுகளை எனக்கு ஊட்டி ஊட்டி விட்டு அவர் வெறுமே சோற்றை உண்டது... பள்ளிக் கூட நாடகத்தில் அரச வேடத்திற்காக தனது கூறைச் சேலையை உடுக்க தந்து அதை நான் கிழித்துக் கொண்டு வந்த போது "நீ வளர்ந்து அம்மாக்கு வாங்கித் தருவாய் தானே எனச் சொன்னது", வெளிநாட்டுக்கு போக காசு தேவை வந்த பொழுது தனது சீதனக் காணியை ஈடு வைத்தும் போதாமைக்கு தனது தாலிக் கொடியையும் விற்று... ஏணிப்படிகளின் ஒவ்வோர் படியிலும் என்னை ஏற்றி விட்டுக் கொண்டு வந்தவர் அவர்.

ஒவ்வோர் ஆண்டு இறுதிச் சோதனைகள் வரும் பொழுது ஒவ்வோர் தெய்வத்துக்கும் ஒவ்வோர் வகையான நேர்த்திக் கடன்கள்... பொங்கல்கள்...

நடுத்தரச் சோதனை என்றால் வெள்ளிக் கிழமைப் பூசை மட்டும்... அதுவே வருடாந்த சோதனை என்றால் மார்கழித் திருவெம்பா பூஜை... உயர்தரப் பரீட்சை என்றால் மருதடிக்கு 1001 மோதகமும் ஊர் அம்மாளாச்சிக்கு கோவிலில் அன்ன தானமும்.... அன்று எங்கள் சொந்தங்களும் 7ம் வட்டாரமும் கோவிலில் நிறைந்திருப்பார்கள்.

எனது முன்னேற்றம் எல்லாவற்றிற்கும் தான் கும்பிடும் தெய்வங்கள் தான் முழு முதற்காரணம் என நம்பியிருந்தவா. நானும் அந்த நம்பிக்கையைக் குழப்பவில்லை. அவரது தெய்வங்களும் தரப்படுத்தல் வரும் வரை எதையும் குழப்பவில்லை.

அம்மாவின் இறைபக்தி எங்கள் வட்டாரமே அறிந்தது தான். கோயில் திருவிழாக்கள் என்று வந்து விட்டால் கொடியேற்றத்திற்கு முதன் நாள் வீட்டின் பின்னே தலைகவிழும் சட்டிகள் பூங்காவனத்துக்கு அடுத்த நாள் தான் தலை நிமிரும்.

எங்கள் வீட்டு நாய் குட்டியும் பூனையும் கூட சில வேளை பக்கத்து பக்கத்து வீடுகளுக்கு சென்று விடுவார்கள். சிலவேளை நானும் தங்கச்சியும் அன்ரி வீட்டுக்கு போய் நல்ல வெட்டு வெட்டிவிட்டு நல்ல பிள்ளைகள் போல சப்பாணி கட்டிக் கொண்டு வாழை யிலையில் பருப்புடனும் உருளைக் கிழங்குடனும் மரவள்ளிக் கிழங்குடனும் அப்பா அம்மாவுடன் அமர்ந்திருப்போம்.

அம்மாவின் விரதங்களிலே பார்க்க மிகக் கஷ்டமானது கந்தசஷ்டி தான்.

ஆறுநாளும் இரவில் பாலும் பழமும் மட்டும் தான். சூரன்போர் முடிந்து அடுத்தநாள் பாறணை அன்று அதிகாலையில் வீட்டில் சமைத்து வைத்து விட்டு கோயிலுக்கு சென்று ஐயருக்கு தானம் கொடுத்து விட்டு வீட்டுக்கு வந்து அண்டை அயல்கள் எல்லோரையும் அழைத்து அவர்களுடன் சேர்ந்து சாப்பிட்டு தனது விரதத்தை முடித்துக் கொள்வார்.

பாடசாலை நாட்கள் ஆயின் அன்று எனக்கும் தங்கச்சிக்கும் லீவு தான். பின் அடுத்த நாள் "எனது மகன் சுகவீனம் காரணமாக நேற்று பாடசாலை வர முடிய வில்லை" எழுதி வைக்கப்பட்டிருக்கும் கடிதத்துடன் பாடசாலை செல்வோம். அவ்வாறே கந்தசஷ்டி இனிது நிறைவேறும்.

கந்தசஷ்டி விரதமும் அம்மாவின் பெயர் நாகரத்தினம் என்னும் பொழுது எனக்கு ஞாபகம் வரும் இன்னோர் பெண் நபர் மீன்கார நாகரத்தினம்.

சுமார் பத்து மணிக்கு கூடும் எங்கள் மீன் சந்தை யில் கணவன்மார் கொண்டு வந்து கொடுக்கும் மீன்களை கூறுபோட்டு விற்கும் பெண்களின் மொழிநடையில் அதிகம் நான் கவரப்பட்டிருந்த காலம். மரக்கறி சந்தை யில் அவ்வாறான மொழிநடையைச் சந்திக்க முடியாது.

"வா ராசா.. என்ன வேணும்... நல்ல வெங்காயம் இருக்கு... கீரைப் பிடி இருக்கு" இவ்வாறுதான் மரக் கறிச் சம்பாஷணைகள் இருக்கும்.

ஆனால் மீன் சந்தையிலோ அது ஒரு ரகமாக இருக்கும். தூஷணம் கூட ஒரு இலக்கிய இலக்கணத் துடன் வரும்.

சனி ஞாயிறுகளில் 50 சதத்திற்கு இறால் வேண்ட அனுப்பினால் கூட சந்தை முழுக்க அவர்களின் பாஷை பரிவர்தனைகளை கேட்டு விட்டு பின்பு வீட்டை வர $1\frac{1}{2}$ அல்லது 2 மணித்தியாலங்கள் எடுக்கும். அதனை கேட்பதில் அப்படியொரு ரசனை - முழுக்க முழுக்க சமுதாயத்தினால் ஏற்க முடியாததும் அதே வேளை புறக்கணிக்க முடியாததுமான சில பாலச்சந்தரின் திரைப்படங்கள்போல அந்த சம்பாஷணைகள் அமைந்திருக்கும்.

அப்படித்தான் ஒரு நாள்.

ஒரு சனி. அட்வான்ஸ் லெவல் படித்துக் கொண்டிருந்தேன்.

89 அல்லது 90ம் ஆண்டு என நினைக்கின்றேன்.

அம்மா 3 ரூபாய் தந்து "உனக்கு எது விருப்பமோ அதனை வாங்கி வா" என அனுப்பினார்.

நானும் சந்தோசமாய் பிளாஸ்டிக் பாக்கினுள் பனையோலையாலான உமலை வைத்துக் கொண்டு போனேன்.

முதல் எதுவும் வேண்டாமல் ஒரு தடவை

சந்தையைச் சுற்றி வந்தேன்.

அன்று மெல்லிய குளிரும். சிறிய மழைத்தூவலும் வேறு.

அடுத்த தடவை சுற்றி வந்த பொழுது நாகரத்தினம் மிக அழகாக ஐந்து நீலக்கால் நண்டுகளை தன் முன்னே பரப்பி வைத்திருந்தா.

அதனை ரசித்துப் பார்த்துக் கொண்டு நின்றேன்.

நாகரத்தினம் ஒரு பெரிய திருக்கை துண்டை தன் கைகளால் தராசு இல்லாமலே எடை போட்டு... தானே புன்முறுவல் பூத்து "எப்படியும் 3 கிலோ தேறும்" என தன் விற்பனைத் திறனை இன்னொரு வரிடம் காட்டிக் கொண்டு இருந்தார்.

"கிலோ சரி... விலை தான் கொஞ்சம்..." வாங்க வந்தவர் இழுத்தார்.

"நாளைக்கு வாங்கோ... வேண்டிக் கொண்டு போகலாம்" என்று விட்டு திருக்கையை அப்படியே கோபத்துடன் தராசு தட்டில் போட்டார்.

அது நாலு கிலோ காட்டியது.

வந்தவர் பேச்சு மூச்சு இல்லாமல் காசைக் கொடுத்து விட்டுப் போனார்.

"எல்லாம் நிருபிக்க வேணும்.... எப்பிடித்தான் வீட்டுக்காரி குடும்பம் நடத்துறாளோ" என்றபடி என் பக்கம் திரும்பினார்.

"பெரியவருக்கு என்ன வேணுமாம்"

திருக்கை வேண்டியவரிடம் கொண்ட கோபம் தீரவில்லைப் போலும்.

எனக்கு ஏனோ உடம்பு நடுங்கியது.

"நண்டு"

"அதிகாலை பிடிச்சது. இன்னும் செத்திராது. சதையும் கரைஞ்சிராது ராசா"

"என்ன விலை"

"எட்டு ரூபா விக்கும்... பிள்ளைக்கு என்றபடியாலை 6 ரூபா"

"மூன்று ரூபா தரட்டோ" சொற்கள் சிக்கலடித்தன.

அவர் அத்தனை நண்டுகளையும் தனக்கு கிட்டவாக இழுத்து வைத்துக் கொண்டு "தம்பி சட்டி கழுவி வைச்சுப் போட்டோ வந்தனீர்" என்றதும் சுற்றி நின்றவர்கள் அனைவரும் "கொல்"எனச் சிரித்தனர்.

எனக்கு அவமானத்தால் உடம்பு குறுகியது.

மெதுவாக நடையை கட்ட வெளிக்கிட,

"நண்டு நறுநறுக்க...

பெண்டில் புறுபுறுக்க..."

என்று தொடங்கி பின்பு மிகத் தூஷணமாக வரும் மற்ற இருவரிகள் என் காதுகளுக்கு கேட்க முதல் சந்தையை விட்டு ஓடியே வந்து விட்டேன்.

3 ரூபா காசையும் எங்கோ விழுத்தி விட்டேன்.

வேலியில் இருந்த முருங்கைக்காய்தான் அன்று எங்கள் வீட்டில் குழம்பானது.

***

இதற்கு அடுத்த அடுத்த நாள் அம்மா மீன் சந்தைக்குப் போகச் சொன்னாலும் ஏதோ சாட்டுகள் சொல்லி தவிர்த்து வந்தேன் என்பது ஞாபகம் வருகிறது.

என்னதான் தவிர்த்து வந்தாலும் தினசரிப் பத்திரிகைகளில் இன்றைய நாள் எப்படிப் பகுதிகளில் காணும் கடக ராசிக்கான நண்டின் படமும் பஸ் நிலையத்தில் நிற்கும் பொழுது தூரத்தே தெரியும் மீன் சந்தையையும் தவிர்க்க முடியாமலே இருந்தது.

நல்ல காலம் அடுத்த கிழமை முருகன் கந்தசஷ்டி விரத வடிவில் வந்து என்னைக் காப்பாற்றினார்.

அம்மா பாலும் பழமும் சாப்பிடும் அந்த ஆறு நாளும் சரி விரதத்தை முடித்து வைக்கும் அடுத்தநாள் வரும் பாறணை தினமும் சரி இந்த ஏழுநாட்களும் மாமிசச் சட்டிகள் வீட்டின் பின்புறத்தில் கவிட்டே வைத்திருக்கப்படும்.

மாமிசம் இல்லாமல் மரக்கறியை மெண்டு விழுங்குவது கஷ்டமாய் இருந்தாலும் நாகரத்தினத்தின் கண்களில் முழிக்காமல் இருப்பது மனதுக்கு நிம்மதியாய் இருந்தது.

அம்மா பாவம்! மரக்கறி எங்களுக்கு இறங்குவது கஷ்டம் என்று தெரிந்தபடியால் இந்த நாட்களில் அப்பளம், மோர் மிளகாய், வடகம், பலாக்கொட்டை, சுண்டங்கத்திரிக்காய் என பல பொரியல்கள் செய்வார்.

அதனைத் தவிர இரவில் தன்னுடன் பாலும் பழமும் நாமும் சேர்ந்து உண்ண வேண்டும் என்று அதிகமாகவே பழங்கள் வாங்கியிருப்பா. இப்பவும் விளாம்பழத்தினுள் சக்கரை போட்ட தித்திப்பு நுனி நாக்கில் சுவைக்கின்றது.

ஒரு மாதிரி ஐந்து நாட்களை வீட்டில் ஓட்டி விட்டோம்.

இன்னும் இரண்டு நாட்கள் தான் பாக்கி.

அன்று சனிக்கிழமை.

யாழ்ப்பாண பஸ் நிலைய கந்தோரில் வேலை செய்யும் அப்பா ஓவர்ரைம் செய்ய வேண்டி இருந்ததால் தனக்கு சாப்பாடு அனுப்பும்படி சொல்லி விட்டிருந்தார். நடத்துனராய் வேலை செய்யும் பக்கத்து வீட்டு பரமண்ணை வந்து சொல்லி விட்டுப் போயிருந்தார்.

அவர் வந்து சொல்லும் பொழுதே மணி 1 ஆயிற்று. அம்மா அவசர அவசரமாக எல்லாவற்றையும் ஆக்கி முடித்து என்னைக் கொண்டே பின் வளவில் வாழையிலை வெட்டிவித்து அதனை வாட்டி சாப் பாட்டு பாசலை அழகாக கட்டி முடித்தார். சின்ன சின்ன போத்தல்களில் சொதியும் குழம்பும் தனித் தனியாக.

சைக்கிளில் விரைந்து எங்கள் பஸ்நிலையத்துக்கு விரைந்தேன்.

அங்கு யாழ்ப்பாணம் செல்லும் எந்த பஸ் ரைவரிடம் சாப்பாட்டு பாசலைக் கொடுத்தாலும் போதும். அது அப்பாவிடம் சேர்ப்பிக்கப்பட்டு விடும்.

எங்கள் ஒழுங்கையால் மிதந்து றோட்டுக்கு இறங்கும் நேரம் பின் சில்லின் காற்று குறைந்து இடித்தது.

ஒட்டை விழுந்திருக்கலாம். ஆனால் சைக்கிள் கடைக்கு போக அது நேரமில்லை.

வியர்க்க வியர்க்க காற்றை அடித்துக் கொண்டு மீண்டும் சைக்கிளில் ஏறி ஓடினேன்.

மணி வேறு இரண்டு மணியாகிக் கொண்டிருந்தது.

"அப்பா பாவம்...! பசிக்கப் போகுது!!", என மனம் சொல்லிக் கொண்டது.

பஸ் நிலையத்தை மட்டு மட்டாக அடையும் பொழுது கீரிமலை-யாழ்ப்பாண பஸ் புறப்பட்டு விட்டது.

நான் கையைக் காட்டியும் பஸ் ரைவர் கவனிக்க வில்லை.

இனி காரைநகர் - யாழ்பாண பஸ்சுக்கு காத்திருக்க வேண்டும்.

போய் வாங்கில் உட்கார்ந்து கொண்டு பஸ்நிலைய சுவர்களிலும் கூரைகளிலும் ஒட்டியிருந்த புதிய பழைய நோட்டீஸ்களை பார்த்துக் கொண்டு இருந்தேன்.

அவற்றில் பல நிறம் மாறியிருந்தன.

அடுத்த நாள் முருகன்கோவிலில் நடக்க இருக்கும் சூரன்போர் பற்றியதும் அதில் ஒன்று.

வழமைபோல அடியார்கள் வந்து முருகனின் அருளைப் பெற்றுச் செல்லுங்கள்... இத்தியாதி இத்தியாதி பழக்கப்பட்ட வாசகங்களாகவே இருந்தது. கொஞ்சம் மாற்றி எழுதலாமே என என் சின்னவயது மனசு சொன்னது.

பஸ் நிலையத்தின் அமைதியைக் குலைப்பது போல ஏழெட்டு பெண்கள் பலத்த குரலில் கதைத்துக் கொண்டு வருவது என் பின்னால் கேட்டது.

தெரிந்த குரல்கள் போலவும் இருக்கவே மெதுவாக தலையைத் திருப்பி பார்த்தேன்.

மீன் சந்தையில் இருந்து நாகரத்தினம் உட்பட வியாபாரம் முடித்த பின்பு பொன்னாலை, காரை நகர்ப்பக்கம் செல்வதற்காக வந்து கொண்டு இருந்தார்கள்.

நான் மெதுவாக தலையைக் குனிந்து கொண்டேன்.

நிச்சயமாக எனக்குத் தெரியும் - நாகரத்தினம் என்னை ஞாபகம் வைத்துக் கொண்டு இருக்கப் போவதில்லை என்று. ஆனாலும் மனதுள் ஒரு....

என்னைப் போல் எத்தனை பேர் நாகரத்தினத் திடம் தினம் தினம் வாழ்த்துப் பெறுபவர்கள் - அத்தனை பேரையுமா அவரால் நினைவில் வைத்திருக்க முடியும்?

பஸ் நிலையத்துக்கு வந்த அனைவரும் வாங்குகள் இருந்த பொழுதும் நிலத்தில் சுற்றிவர இருந்து கொண்டு தங்கள் சம்பாஷனைகளைத் தொடர்ந்தார்கள்.

ஆனால் அவர்களின் கடகங்களின் மணம் மட்டும் மூச்சைத் திணற வைத்தது.

கொஞ்சம் எழுந்து போய் அப்பால் அமர்ந்து கொண்டேன்.

ஆனால் காதுகள் மட்டும் அவர்களிடம் - பொழுது போக வேண்டுமே!

அனைவரின் குரல்களிலும் இருந்து நாகரத் தினத்தின் குரல் சற்று வித்தியாசமானதாயும் மேலோங்கியும் இருந்தது.

"என்னென்டு அக்கா இந்த ஐந்து நாளும் மூன்று மிளகோடையும் மூன்று மிடறு தண்ணீரோடையும் சமாளித்தனி"

எனக்கு "திக்" என்றது.

கந்தசஷ்டி விரத்தைப் பற்றித்தான் கதைக்கின்றார்கள் என்பது உறுதியாயிற்று.

"முதல் இரண்டு நாளும்தான் கஷ்டமாய் இருக்கும். பிறகு எல்லாம் பழகிப் போயிடும். இனி நாளை ஒரு பொழுதுதானே?"

இது நாகரத்தினத்தின் குரலே.

"ஏனக்கா தொடர்ந்து பிடிக்கிறாய். சிலபேர் ஐஞ்சாறு வருசத்திலை நிற்பாட்டுறவைதானே?"

"என்னெண்டு நிற்பாட்டுறது... கட்டி ஐஞ்சு வருசமும் ஒரு புழுப்பூச்சியும் இல்லாமல் இருந்து இது பிடிக்கத் தொடங்கத்தானே முதல் பொடியன் வந்தவன். இப்ப பதினாறு வயது. அதிலை இருக்கிற பொடியன்டை அளவு இருக்கும். அடுத்த வருசம் கட்டாயம் டொக்டருக்கோ எஞ்சிஜினியருக்கோ படிக்கப் போவான். அவன்ரை படிப்பு முடியும்வரை நான் இதை நிறுத்த மாட்டன்"

நான் அதிர்ந்து போனோன்.

அம்மா மாமிசச் சட்டிகளை கவிழ்த்து விட்டு கோவிலில் சுவாமிக்கு பூக்கட்டிக் கொடுத்துக் கொண்டு பாலும் பழத்துடன்.... நாகரத்தினமோ கூறுபோட்ட திருக்கை துண்டை கையில் ஏந்தி விற்றுக் கொண்டு 3 மிளகுடனும் 3 மிடறு தண்ணியுடனும்...

என் இரண்டு கண்களிலும் இந்த இரண்டு காட்சிகள் ஒரே வேளையில் ...

என்ன அதிசயம் இது?...

என்னால் நம்பவே முடியவில்லை...

***

அடுத்தடுத்த வருடங்களில் வந்த இடம்பெயர்வுவரை நான் எந்தப் பேரமும் பேசாமல் அவரிடமே தொடர்ந்து மீன் வாங்கிக் கொண்டிருந்தேன்.


சிலவேளை அவரே சொன்ன விலையில் இருந்து விலை குறைத்து தருவார்.

"அதிகமாக மிச்சக் காசு தந்து இருக்கின்றீர்கள்" என்று அவரிடம் கேட்டால், "அதெல்லாம் கணக்கு சரி ராசா " என்று வெற்றிலை நிறைந்த வாயால் புன்முறுவலுடன் சொல்வார்.

இடம்பெயர்வு முடிந்து மீண்டும் ஊருக்கு வந்த பொழுது அவரை சந்தையில் காணவில்லை. ●

(பி.கு.: நான் முதன் முதலில் எழுத நினைத்த சிறுகதை இது. இன்றுவரை ஏன் இது எழுதப்படாமலேஇருந்து வந்தது என்று எனக்குப் புரியவேயில்லை. முன்பு எழுதியிருந்தால் சிலவேளை அது இந்த வடிவத்தைப் பெற்றிருக்காதோ என்னவோ!)

அருண்மொழிவர்மன்





# அ. யேசுராசாவின் "தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும்"

"தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும்" என்கிற அ. யேசுராசாவின் சிறுகதைத் தொகுப்பினை சென்ற ஆண்டளவில் வாசித்து இருந்தேன். அப்போது அது பற்றி எழுதவேண்டும் என்று நினைத்திருந்த சிறு குறிப்பும், வழமைபோலவே "எழுத நினைத்த விடயங்கள் பட்டியலில்" சென்று புதைந்து விட்டது. சில நாட்களின் முன்னர் யேசுராசா அத்தொகுப்புப் பற்றி நினைவுக்குறிப்பு ஒன்றினை முகநூலில் பகிர்ந்திருந்தார்; அதனை வாசித்தவுடன் மீண்டும் "தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும்" தொகுப்பினை எடுத்து வாசித்தேன். அண்மைக்காலத்தில் உணர்வு ரீதியாக மிக நெருக்கமாக உணர்ந்த தொகுப்பாக அந்த வாசிப்பு அமைந்திருந்தது.

தொகுப்பின் மிக அருமையான கதையாக "ஓர் இதயம் வறுமை கொண்டிருக்கிறது" என்பதைச் சொல்லவேண்டும். எமது தேடல்களும், பார்வையும், மதிப்பீடுகளும் எமது ஆளுமையை உருவாக்குவதில் பெரும்பங்கு வகிக்கின்றன. அவற்றின் வழியாகவே சமூகத்துடனான எமது உறவும் அமைந்துவிடுகின்றது. நாம் வாழ்ந்த சூழலிலும், நம்மைச் சுற்றி இருப்பவர்களிலும், இருக்கும் பெரும்பான்மையினரிடம் இருந்து வேறுபட்ட தளத்திலான பார்வை கொண்டவர்களாக நாம் நம்மை உணரத் தலைப்படுகின்ற கணம் ஒன்றில் நாம் நம்மை அந்நியர்களாக உணரத் தொடங்குகின்றோம். சமூகத்துடன் எம்மை இலகுவில் பொருத்திக்கொள்ள முடியாத அந்த நிலை ஒரு விதத்தில் மிகுந்த மன உளைச்சலைத் தரக்கூடியது. நம்மவர்கள் என்று கருதுபவர்களிடையே கூட தனியனாக உணர்கின்ற இந்த நிலை "அந்நியமாதல்" என்கிற கருத்துரு தருகின்ற விளைவுகளுடன் இணைத்து நோக்கத்தக்கது.

தவிர உளவியல் அடிப்படையிலும் இந்தக் கதையை சற்றே அணுகலாம். சில காலங்களின் முன்னர் மனச்சோர்வின் கடுமையான தாக்குதலுக்கு நானும் உள்ளாகியிருந்தேன். மனச்சோர்வு மெல்ல மெல்ல ஆட்கொண்டிருக்கலாம் என்றாலும், ஒரு குறித்த நாளிலேயே அது என்னைக் கடுமையாகத் தாக்கி இருந்தது. என்னைச் சுற்றியிருந்த நடைமுறை உலகுடன்



என்னைப் பொறுத்திக்கொள்ள முடியாமல் - அந்நிய மாகிப் - போயிருந்த என்னை, என் மன இயக்கங்களை அவற்றின் இயங்கு தளங்களைப் புரிந்துகொண்டவனாக ஒரு நண்பன் இருக்கின்றான். எனது அலுவலகத் திலேயே அவனும் பணிபுரிவதால் அவனுடனான உரையாடல்களே எனக்குச் சற்றே இறுக்கம் தணிக்க உதவின எனலாம். அவன் விடுமுறைக்காக ஐந்து வாரங்கள் இந்தியா செல்ல இருந்தான். அவ்விதம் அவன் பயணித்த அன்று நான் கடுமையான மனச் சோர்வின் தாக்குதலுக்கு உள்ளானேன். இன்று வரை அதில் இருந்து முழுமையாக மீள முடியவில்லை.

எனது தனிப்பட்ட இந்த அனுபவம், யேசுராசாவின் "ஓர் இதயம் வறுமைகொண்டிருக்கிறது" கதையுடன் மிக இலகுவாகப் பொருந்திவிடுகின்றது. "இதென்ன சும்மா நெடுக வீட்டுக்குள்ளேயே, வெளியில போய் நாலு மனிசரோட கதைச்சுப் புழங்கன், சும்மா விசரன் மாதிரி யோசிச்சபடி" என்கிறார் தாய். நாலு பேரோட கதைச்சுப் பழகவேண்டும் என்ற அவள் வாதம் சரி, ஆனால் அவனது ஆளுமைக்கு ஒத்த, அதை உணர்ந்த நாலுபேரை அவனால் இலகுவில் கண்டு பிடிக்க முடியவில்லை என்பதுதான் அவன் பிரச்சினையே. ஆறே ஆறு பக்கத்தில் அமைந்திருக் கின்றது இந்தச் சிறுகதை. ஆனால் அது திறந்திருக்கும் உரையாடல் ஒன்றுக்கான வெளி மிகப் பெரிது.

இதே கருத்தியல் பின்னணியுடன் இத்தொகுப்பில் இருக்கின்ற இன்னொரு சிறுகதை "தொலைவு". இன்னும் சொல்லப்போனால், தொலைவு சிறுகதையின் முற்பாதி மேலே குறிப்பிட்ட சிக்கலை இன்னமும் நெருக்கமாகவும், உணர்வுபூர்வமாகவும் காட்சிப்படுத்துகின்றது. இக்கதையில் "ஒரு செய்தி தருவோனாகத்தான் அவர்களுக்கு நான் இருக்கி றேனோவெனச் சந்தேகம் கொண்டான்" என்கிற வரியை ஒருவன் உணர்கின்ற தருணம் மிகுந்த கழிவிரக்கம் தரவல்லது. இக்கதையின் பிற்பாதி, முன்னர் சொன்ன மனநிலையுடன் உள்ள ஒருவன், சமூகத்தில் பெரும்பான்மையினரின் மனநிலையின் பிரதிநிதிகளாக இருக்கின்றவர்களுடன் ஊடாடுவதைக் காட்டுகின்றது. ஆயினும் இக்கதையின் பிற்பாதி காரணமாக அதனை "ஓர் இதயம் வறுமை கொண்டிருக்கின்றது" உடன் வைத்துப் பேசமுடியாது போய்விடுகின்றது.

"பிரிவு" இன்னொரு அருமையான கதை. அடுத்தடுத்துப் பலமுறை இக்கதையை வாசித்தேன் (வழமையாக நான் அவ்விதம் கதைகளை வாசிப்பவன் அல்ல). இக்கதையில் வருகின்ற சுப்பிரமணியம் என்கிற எழுத்தாளர் அழகியலை முன்னிறுத்தி, அது சார்ந்த வெளிப்பாடுகளின் வழியும் உலகை அணுகுபவர். ஒருவித கனவு மனநிலையில் சஞ்சரிப்பவர். உரையாடல் ஒன்றின்போது கதைசொல்ல அவரிடம் "அழக ரசிக்கத்தான் வேணும், ஆனா வேலையுஞ் செய்யத்தான் வேணும்... புற உலகத்திலயிருந்தும் வாழ்க்கையில இருந்தும் நாங்கள் ஓட ஏலாது!" என்று அறிவுறுத்துகிறார்.

"எங்களுக்கு புற உலகத்தைப் பற்றிக் கவலையில்லை, எங்கட உலகம் எங்களுக்குள்ளயே இருக்கு; அதிலேயே எங்களுக்குத் திருப்தி. அதிலேயே எங்களுடைய வாழ்க்கை முடிஞ்சுபோகும்" என்கிறார் சுப்பிரமணியன்.


இறுதியில் "அவையளின்ர பாட்டை அவையவையள் பார்த்தாலென்ன? நாங்க ஏன் அவையளின்ர பாட்டை தலையில சுமக்கவேணும். நாங்க சுதந்திரமாயிருக்க வேணும், எங்களுக்கு எங்கட மனத்திருப்திதான் முக்கியம். இல்லையெண்டு அவையள் ஆரும் வற்புறுத்தினால்... நான் செத்துப் போவேன்." என்று முடிக்கின்றார் சுப்பிரமணியன்.

இதற்குப் பிறகு சுப்பிரமணியத்துடன் முழுமையாகப் பேசும் சந்தர்ப்பம் கதைசொல்லிக்கு அமையவில்லை. ஓரிரு மாதங்களில், சுப்பிரமணியன் அவரது வீட்டுக்கருகில் ட்றெயினுக்கு முன்னால் பாய்ந்து தற்கொலை செய்தார் என்பது தகவலாக கதைசொல்லிக்கு தெரியவருகின்றது. உண்மையில் சுப்பிரமணியம் போன்றவர்களும் இன்னொரு விதத்தில் சமுகத்தில் இருந்து அந்நியமாகிப்போனவர்கள். அவர்கள் சஞ்சரிக்கும் கனவு உலகம் எல்லாப் "பொறுப்புக்களையும்" நிராகரித்துவிட்டு விட்டுவிடுதலை யாகி நிற்பது. நடுக்கடலில் கண்ணாடியால் வீடு கட்டி வாழ்வது போன்றது, அது. ஏதோ ஒரு தருணத்தில் "நிஜம்" அவர்களின் சட்டையைப் பிடித்து உலுக்கும் போது, அவர்கள் நடுக்கடலில் வாழுகின்ற கண்ணாடி வீட்டில் உடைசல் ஏற்பட்டது போல மூச்சு முட்டியவர்களாகி விடுகின்றனர்.

பத்துச் சிறுகதைகளை மாத்திரம் கொண்ட, 57 பக்கங்களை மாத்திரம் கொண்ட இச்சிறுநூல் இந்த மூன்று கதைகளாலேயே மிகக் கனதியாகி விடுகின்றது. தொகுப்பில் இருக்கின்ற "கந்தசாமி வெட்கப்படுகிறான்" கதையும், "வரவேற்பு"என்கிற கதையும் நாம் தினசரி வாழ்வில் பார்க்கின்ற எளிய மனிதர்களின் மெல்லுணர்வு களைக் காட்டுகின்றது. குறிப்பாக வரவேற்பு சிறுகதையில் வருகின்ற, வெட்கம் கலந்த சிரிப்புடன் கூடிய மரிய சூசை போன்றவர்களே வாழ்வின் அழகான கணங்கள் சிலவற்றைப் பிரசவித்துத் தருகின்றவர்கள்.

இந்நூலுக்கு எழுதிய "என்னுரையில்" யேசுராசா, தான் எழுதிய 11 சிறுகதைகளில் பத்துக் கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளதாகக் குறிப்பிடுகின்றார். தொகுப்பின் முதற்பதிப்பு 1974 டிசம்பரில் வெளியாகியிருக்கின்றது. அதற்குப்பின்னரான 40 ஆண்டுகளில் யேசுராசா அவர்களின் வேறு எந்தச் சிறுகதைத் தொகுப்பும் வெளியானதாக நான் அறியேன். ஆயினும் இப்போது வாசிப்பவர் களுக்கும் புதியதாக (Fresh ஆக) உள்ளது இச்சிறுகதைத் தொகுதி.

●



ந. சத்தியபாலன்

# துயர வெளியிற் தனித்தலையும் ஒரு குரல்


## (சித்தாந்தனின் "தூரத்தும் நிழல்களின் யுகம்" கவிதைத் தொகுப்பை முன்வைத்து)


எமது மண்ணின் கவிஞர்களுள் தனித்துவமான பார்வையினாலும் மொழியினாலும் சொற்தேர்வுகளாலும் சொல்லும் முறையினாலும் வேறுபட்டுத் தெரிபவர் கவிஞர் சித்தாந்தன்.

காலத்தின் புன்னகை (2000), துரத்தும் நிழல்களின் யுகம் (2010) ஆகிய கவிதைத் தொகுப்புக்களைப் படைத்துள்ள இவர் "மறுபாதி" என்னும் கவிதைக்கான சிறப்பு இதழின் பிரதம ஆசிரியராக உள்ளார். "தருணம்" என்னும் வலைப்பதிவிலும் எழுதி வருகின்றார்.

இவரது துரத்தும் நிழல்களின் யுகம் தொகுப்பில் நாம் கடந்து வந்ததும் கண்டு கொண்டிருப்பதுமான வாழ்க்கை பற்றிய பார்வை, தன்னை அலைக்கழிக்கும் துயரங்கள் குறித்த, மனித நேயத்தை அடிப்படையாகக் கொண்ட ஈரலிப்பான தனது பகிர்தல்கள், அச்சங்கள், நேயம் துறந்த, சுயநலமும் அறியாமையும் மிகுந்த மனிதர்கள் மீதான தீட்சண்யமான விமர்சனங்கள் என்பவற்றை சித்தாந்தன் முன்வைக்கிறார்.

சித்தாந்தனின் கவிதைகள் சமகாலத்தில் நாம் காணுகின்ற கவிதைகளினின்றும் பெரிதும் வேறுபட்டுத் தெரிபவை. இவரது படிமங்களும் குறியீடுகளும் வெற்று அலங்காரச் சொற்தேர்வுகளல்ல. நுண்ணிய அவதானிப்போடு எடுத்தாளப்படும் கலைத்துவ வெளிப்பாடுகளாய் கவிதை என்னும் மொழி சார் நுண்கலையின் அதிக பட்ச வெளிப்பாட்டுச் சாத்தியத்தைப் பரிசீலிப்பவை.



"காலையின் ஒலிகளை
கவிதைகளாய் என்னிடம் விட்டுப் போகும்
பறவைகளுக்குத் தெரிவதில்லை
மாலைச் சூரியன் அந்திம ஒளியில்
எனது மாபெரும் கவிதைகளிலும்
குருதி படிந்து போவதை"

வாழ்வின் நிச்சயமற்ற தன்மையும் எதிர்பாராத துயர் நிகழ்வுகளால் இருளில் மூடுண்டு போவதுமான இயல்பும் கவிஞரைத் துன்புறச் செய்கின்றன. மனித நேயமும் மனிதகுலத்தின் ஒளி மிகுந்ததும் அர்த்தம் செறிந்ததுமான வாழ்வைக் கனவுறும் பண்பும் சித்தாந்தனின் எழுத்தில் மிளிர்கின்ற பண்புகள்.

துன்புறும் மானுடத்தின் வேதனைகள் இவரை அலைக்கழிக்கின்றன. "மகாஜனங்களின் அழுகை அல்லது அரசர்களின் காலம்" என்னும் இவரது கவிதை,

"மகாஜனங்கள் அழுதார்கள்
அரசனின் தூசி படர்ந்த சப்பாத்துக்களின் கீழே
ஆயிரமாயிரம் கபாலங்கள்..."

எனத்தொடங்கி

"அனோஜ் எனது சின்னஞ்சிறு நண்பியே
வெண்கொற்றக்குடை
சிம்மாசனம்
ஆயுதங்கள்
படைவீரர்கள்

என எல்லாமே அரசர்களுடையன
எனக்கென்றோ
உனக்கென்றோ எதுவுமேயில்லை.

அரசர்கள் வருவார்கள் போவார்கள்
ஒரு அரசன் விட்ட இடத்திலிருந்து
மற்ற அரசன் தொடங்குவான்
இது அரசர்களின் காலம்" என்று தொடர்கிறது.

யுத்தத்தால் விளைந்த அவலங்கள் இவரது பாடுபொருளாகையில் அவற்றைச் சித்திரிக்க இவர் தேர்ந்தெடுக்கும் சொற்களும் சொல்முறையும் மென்மையானவையாகவும் இதயம் தொடுவனவாகவும் விளங்குகின்றன. யுத்தம் தோற்றுவித்த பேரழிவு, அதிகார பீடத்தின் மமதைமிக்க பார்வையில் ஒரு பொருட்டெனத் தெரியாது போன வாழ்வின் இயல்பான மேன்மைப் பண்புகள், யுத்தம் பரிசளித்துப்போன வெறுமை சூழ்ந்த வாழ்வு யாவுமே கூர்மையான ஆனால் வெறும் கோஷங்களாகவோ புலம்பல்களா கவோ அமையாத இவரது சொற்கட்டுமானத்தினூடாக தாட்சண்யமற்ற விமர்சனங்களுக்குட்படுகின்றன.

கீழ்வரும் கவிதை வரிகள் சித்தாந்தனின் மேற்சொன்ன பண்புகளுக்கு உதாரணமாகின்றன.

"துயில் உரியப்பட்ட என் கண்களில்
வாழ்வது பயமா
ஆற்றாமையின் வலியா
கையாலாகாத்தனத்தின் கண்ணீரா
புரியாமை என்னைச் சிலுவையில்
அறைந்திருக்கின்றது.
காற்றில் பரவும் செய்திகள்
உருச்சிதைக்கப்பட்ட
கழுத்து வெட்டப்பட்ட மரணங்கள் பற்றியன
தாய்மையின் கண்ணீரின் வலியுணராதவர்கள்
மரணங்களை நிகழ்த்துகிறார்கள்.
மரணத்தின் குறிப்பேடுகளுள் ஓலமாய்க் கசிகிறது குருதி
எத்தனை தடவைகள் தான் இறந்திறந்து வாழ்வது?"

எண்ணத்தின் வீச்சு அல்லது தீவிரத்தை வெளிப்படுத்த வல்ல சொற்களைத் தெரிவு செய்து உரிய முறையில் அவற்றை ஒழுங்கமைத்து கவிதை யாகக் கட்டமைப்பதில் சித்தாந்தன் காட்டும் சிரத்தையும் உழைப்பும் கவனிப்புக்குரியவை.

இயல்பு வாழ்க்கையைச் சிதைத்து நாளாந்தம் அஞ்சி அஞ்சி வாழும் நிலைமையைப் போர்க்கால வாழ்வு எம்மீது நிர்ப்பந்தித்திருந்தது. கதவைத் திறந்து வெளியே காலடிவைக்கும் போதே மரணம் பற்றி அச்சம் எம்மை எதிர்கொண்ட வாழ்க்கைக்காலம் கருமை படர்ந்த நாட்களைக் கொண்டிருந்தது. இது பற்றிய துயரும் அவலம் நிறைந்த நாட்கள் பற்றிய உள்ளுணர்வும் சித்தாந்தன் கவிதைகளில் சித்திரிக்கப் படும் முறை கவனிப்புக்குரிய ஒன்று.

வாழ்க்கையின் இயல்பான அழகு பறிபோய் விட்ட நிலையைச் சித்திரிக்கும் "தெருக்களை இழந்த குழந்தைகளின் துயர்" என்னும் கவிதை மிக மென்மை யாய் ஒரு துயரிசையாய் வெளிப்படுத்தப்படுகின்றது.

"எங்கள் தெருக்களில் குழந்தைகளைக் காணவில்லை
குழந்தைகளின் கனவுகளை மிதித்துக்கொண்டு
இராணுவ வாகனங்கள் விரைந்து செல்கின்றன"

"பலூனும் முகமூடியும் விற்கும் முதியவனின்
பாடல்களில் வழிகிறது.
குழந்தைகளை இழந்த தெருக்களின் துயர்"

"மர நிழல் குடிசையில் முடங்கிக்கிடக்கும்
சிறுவன்
தனது குரும்பட்டித்தேரையும்
கறள் ஏறிய சைக்கிள் வளையத்தையும்
அதன் ஓட்டுத் தடியையும்
எடுத்துப் பார்த்து விடும் பெருமூச்சை
வெம்மை நிரம்பிய காற்றுக் குடிக்கிறது"

என்கின்ற வரிகள் சித்தாந்தனின் கவிதைகளில் காணப்படும் மென்மை மிக்க கவித்துவத்தின் சான்றுகள். அகம் அல்லது உள்ளுலகு சார்ந்த சித்தாந்தனின் கவிதைகளின் மென்மை மிக அழகானது. அதிராத ஒரு மொழியின் தீர்க்கமான வார்த்தைத் தேர்வுகளோடு அமைகின்ற இவரது கவிதைகள் இவருக்கே உரிய தனித்துவத்தின் அடையாளங்களாக உள்ளன.

"சொற்களுக்கான வெளி" என்னும் இவரது கவிதை இவ்வாறு அமைகின்றது.


"உட்கார்ந்திருக்கின்றேன்
தனித்த சுவரின் முன்னால்
எழுத்துக்கள் பிணைந்த காகிதத்தை
கடைசித் தடவையுமாகக் கிழித்தெறிந்த போது
ஒன்றிட முடியாச் சொற்களின்
வலியுணர்ந்து அழுதேன்
இன்னொரு முறை முயன்றிருக்கலாம்
தீர்ந்து போன காகிதத் தாள்களில்
அன்பூறும் சொற்களுக்கான வெளி
இன்னும் இருந்தபடிதானிருக்கிறது"

மனித வாழ்வின் மகத்தான துக்கங்களி லொன்று உள்ளூர நாம் விரும்பினாலும் நமது நெஞ்சார்ந்த பேரன்பினை வெளிக்காட்டுவதில் சில சமயம் நாமே தோற்றுத் போய் விடுவது தான்.

கூடையோடு கவிழ்த்து முழு அன்பையும் கொட்டிவிடும் எண்ணத்தோடு முனைகின்ற போதும் நம்முள்ளே இருந்து கொண்டு நமது செயல்களையே முரணாக்கி நமக்கு நம்மையே ஒரு புதிராக்கிக் காட்டுகிற இந்தத் துயரமான வாழ்வின் விசித்திரம் ஒரு உள்ளுலக முரணாய் அவ்வப்போது நம்மையே நமக்கு வேறொரு வராய்க் காட்டும் மாயக்கண்ணாடியாகிப் போகிறது. அவ்வாறான வேளையில் தான் "அன்பூறும் சொற்களுக் கான வெளி" யை நாம் தரிசிக்க நேரிடுகின்றது.

"ஒரு காலத்தின் ஒரு வாழ்க்கையின் சாசனம் இலக்கியம்" என மறைந்த படைப்பாளி ஜெயகாந்தன் குறிப்பிடுவார். அவ்வாறு நோக்குகையில் "துரத்தும் நிழல்களின் யுகம்" அந்த வரிசையின் தவிர்க்கவியலாப் பிரதானத்துவமிக்க நூலாய் நாம் கண்டு கடந்த ஒரு வாழ்வின் சாசனமாய் என்றும் நிலைக்க வல்லது.

தனக்கான தனித்த பார்வையோடு படைப்புப் பணியில் ஈடுபட்டிருக்கின்ற சித்தாந்தனின் படைப்பு வெளியும் அவரது மொழியும் கூர்ந்த கவனிப்பைக் கோருபவை. கவிதை படைத்தலைச் சிரத்தையுடனும் வீச்சுக் குறையாத உள்ளுணர்வோடும் சொல்லவல்ல கவிஞர் சித்தாந்தனிடம் காலமும் நம் சமூகமும் இன்னும் நிறைய எதிர்பார்க்கின்றன. ●



இ.சு. முரளிதரன்

# கம்பராமாயணத்தில் அறிவியல்



பழந்தமிழ் இலக்கியங்களில் பொதிந்துள்ள சில கருத்துக்களை நுணுகி நோக்கும் போது நவீன சிந்தனையாளர்களின் அறிவியற் கோட்பாடுகளோடு சற்றே நெருங்கி வருவதை உணர்ந்து கொள்ளலாம். அந்தவகையில் கம்பராமாயணத்திலும் மீப்புலமை சுவறிய பதிவுகள் சில அறிவியலின் அலைவரிசையோடு பொருந்திப் போகின்றமை குறிப்பிடத்தக்கது.

பிளவுபடாத நுண்துணிக்கையென அறிவியலால் சுட்டப்பட்ட அணுவானது பிற்காலத்தில் இலத்திரன், புரோத்திரன், நியூத்திரன் எனப்பாகு படுத்தப்பட்டது. தொடர்ந்து மீசன், பேரியன் என்னும் நுண்துகள்களின் இருப்பும் இனங்காணப்பட்டது. தீவிர ஆய்வுத் தேடலின் விளைவாக "குவாக்" என்னும் துகளும் புதைந்திருப்பது தெரிய வந்தது. இந்நிலையில் குவாக்குகளின் சுட்டுத்திணிவோடு புரோத்தனின் திணிவு முரண்பட நவீன அறிவியல் திணறிப்போனது. கண்டறியப்பட வேண்டிய துணிக்கை ஒன்றினைத் தேடி அணுப்பௌதிகவியல் விஞ்ஞானிகள் ஆராய்ச்சியினை முன்னெடுத்தனர். ஈற்றிலே கடவுளின் துணிக்கையை (Higgs Bosson) கண்டடைந்தனர். அணுப்பௌதீகவியல் விஞ்ஞானிகளே அதிசயிக்கும் வகையிலான புனைவொன்றினை கம்பராமாயணத்திலே தரிசிக்க முடிகிறது. இரணிய வதைப்படலத்திலே கடவுளின் துணிக்கையை நெருங்கும் துகள் ஒன்றினை கம்பன் இனங் காட்டுகின்றான்.

"சாணிலும் உளன் ஓர் தன்மை
அணுவைச் சதக் கூறிட்ட
கோணிலும் உளன்"

என்று இறைவனின் இருப்பினைப் பிரகலாதன் விளக்குவதாகக் கம்பன் குறிப்பிடுகின்றான். அணுவை நூறு கூறுகளாக்கி அவற்றின் ஒரு பகுதிக்கு "கோண்" என்ற பெயரை வழங்கி கடவுளின் துணிக்கையை நெருங்கும் வசீகரமான புனைவொன்றைக் கம்பன் படைத்தளித்துள்ளான்.

ஆரம்ப காலத்தில் உலகம் தட்டையானதென்றே உறுதியாகக் கருதப்பட்டது. எனினும்

பைதகரஸ், அரிஸ்டோட்டில், ஹிப்போக் கிரட்டிஸ் போன்ற மேதைகள் கோள வடிவமென்று நம்பினர். பதினைந்தாம் நூற்றாண்டிலே தோன்றிய "கொப்பனிக்கஸ்" நட்சத்திரங்கள் தென்படுவதில் நாடுகளுக்கிடையிலான வேறுபாட்டினையும், பாய்மரக் கப்பலின் உச்சியிலுள்ள விளக்கு கடலின் தொலைவில் தாழ்ந்து செல்லும் தோற்றத்தையும் சான்று காட்டி புவிகோள வடிவமென்பதை விளக்கினார். பதினாறாம் நூற்றாண்டில் "மகலன்" என்ற கடலோடி கப்பலிலே உலகைச் சுற்றிவந்து புவியுருண்டையென நிரூபித்தார். ஆனால் பன்னிரண்டாம் நூற்றாண்டிலேயே கம்பன், "திசை முகன் செய்த முட்டை கீண்டிலது" "விரிஞ்சன் எனவோர் முட்டை தந்தனில்" என உலகை முட்டை வடிவிலே கற்பனை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மனித மனத்தின் ஆழ்புலத்தில் நிறைவேறாத வேட்கைகள் உறைந்து கிடக்கின்றன. உறக்கத்தில் - மூளையின் மெது இயக்கத்தில் - புறத்தூண்டலற்ற தருணத்தில் ஆழ்மன வேட்கைகள் வீரியங்கொண்டு கனவுகளாக வெளிப்படுகின்றன. "மன அழுத்தத்தோடு உறங்குவோருக்கு கனவிலே விபரீதமான தோற்றங்கள் தென்படலாம்" என்று உளவியல் அறிஞர்கள் கூறியுள்ளனர்.

"உண்டாகிய கேடுடையார் துயிலா
எண் தானும் இயைந்து இயையா உருவம்
கண்டாரெனலாம்"

என்று கம்பனும் உளவியலாளரின் கருத்தினை வெளிப்படுத்தியுள்ளமை ஆச்சரியகரமானது.

மாரீசன் மாயமானாக வடிவமெடுத்து வனத்தி லிருந்த சீதை முன் தோன்றுகிறான். பொன்மானைக் கண்ணுற்ற சீதை, இராமனும் இலக்குவனும் அமர்ந்திருந்த இடந்தேடிச் சென்று மானின் அங்க அடையாளங்களை விபரிக்கிறாள். "இத்தகைய உறுப்பமைவுகளோடு உலகிலே ஒரு உயிரினம் இருக்க வாய்ப்பில்லை" என இலக்குவன் கருத்துரைக்கின்றான். அதற்கு இராமபிரான் கூறும் பதிலில் கம்பனின் புலமை வியப்பளிக்கின்றது.

"நில்லாவுலகின் நிலை நேர்மையினால்
வல்லாரும் உணர்ந்திலர் மன்னுயிர் தாம்
பல்லாயிரங்கோடி பரந்துளவால்
இல்லாதன இல்லை இளங்குமரா"

என்ற எதிர்வினையில், "ஒழுங்கான அறிவினால் எவ்வளவு வல்லமை பொருந்தியவர்களும் உலகினை முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை. உலகிலே பல்லாயிரங் கோடி உயிரிகள் பரந்துள்ளன. எனவே இத்தகைய அங்க அடையாளங்களோடு ஓர் உயிரினம் இருக்கவே முடியாதென எவ்வாறு மறுக்கலாம்" என்று இராமபிரான் விடை பகர்கிறார். கம்பனின் உலக ஞானம் கனதியானது என்பதற்கு இச்செய்யுளும் சான்று பகர்கிறது.



கம்ப காவியத்தில் புட்பக விமானம் குறித்த புனைவும் அறிவியலோடு பொருந்திப் போகும் வகை யிலேயே அமைந்துள்ளதும் கம்ப நாடன் புட்பக விமானம் ஓடுபாதையில் வேகமாகச் சென்று மேலெழுந்த தகவல் ஒன்றினை அழகாகப் பதிவு செய்துள்ளான்.

"மண்ணின் மேலவள் தேர் சென்ற
சுவடெலாம் மாய்ந்து
விண்ணில் ஓங்கியது ஒரு நிலை"

என அச்செய்தி உணர்த்தப்படுகின்றது. சீதையைத் தேடிச் செல்லும் இராமனும் இலக்குவனும் விமானத்தின் சக்கர அடையாளங்களை சிறிது தூரம் காண்கின்றனர். பின்னர் வானிலே எழுந்ததற்கான சான்றே தென்படு கின்றது. ஓடுதளத்தில் வேகமாகப் பயணித்து, வானிலே எழுகின்ற விமானங்குறித்த சிந்தனையும் கம்பனின் ஆளுமையை நன்கு தெளிவுபடுத்தியுள்ளது. •

வினோஷா வரதராஜன்

"எனக்குப் பசிக்கேல்ல அம்மா, பிறகு சாப்பிடுறன்" என்று அடம் பிடித்தான் அபிநயன். "அபி காலைல சாப்பிட்ட பிறகு நீ இன்னும் எதுவும் சாப்பிடேல்ல. பள்ளிக்கூடத்தால வந்து ஒரு மணித்தியாலம் ஆகிட்டுது. கொஞ்சமாவது சாப்பிடு அச்சாப்பிள்ளையெல்லே" என்று தனது செல்ல மகனை சாப்பிடுமாறு கெஞ்சியும் கொஞ்சியும் கேட்டாள் ராதா. "வேண்டாமம்மா" என்று சிணுங்கிய அபிநயனைப் பார்த்த ராதாவுக்கு ஐந்து வருடங்களுக்கு முன்பு நடந்த சம்பவங்கள் ஆழ்மனதிலிருந்து கிளர்ந்தெழுந்தன.


எப்போதும் போல் "சீ, அதெல்லாம் ஏன் நினைத்துப்பார்க்க வேண்டும்" பிடிவாதமாக அந்நினைவுகளை ஒதுக்க முனைந்தாள் ராதா. வெட்டப்பட்ட காயத்திலிருந்து பீறிட்டு எழும் இரத்தம் போல அச்சம்பவங்கள் கிளர்ந்தெழுவதுண்டு. ஐந்து வருடங்கள் கடந்து விட்ட போதும் மறக்க முடியாத நாட்கள் அவை.

# நெஞ்சம் மறக்குமா?

அது 2008 ம் வருடம். எப்போதாவது கேட்டுக்கொண்டிருந்த வேட்டொலிகள் தினசரி கேட்கத் தொடங்கின. ஊரே போர் மேகங்களால் சூழப்பட்டிருந்தது, வானமெங்கும் விமானப் பறவைகள் வட்டமிட்டுத் திரிந்தன. பதுங்கு குழியே வாழ்க்கையாகிப்போனது. "இனி இஞ்ச இருக்கேலா தப்பா சனம் எல்லாம் புதுக்குடியிருப்புப் பக்கம் போகுது நாங்களும் இஞ்சயிருந்து வெளிக்கிடுவம்" ராதாவிடம் கூறினான் கணவன் நிமலன். ராதாவும் கணவனும் அவர்களது இரு பிள்ளைகளுமாக முறிப்பிலிருந்த தமது சொந்த வீட்டை விட்டு ஒரு சில பொருட்களை துவிச்சக்கர வண்டியில் சுமந்தபடி வள்ளிபுனம் நோக்கி இடம்பெயர்ந்தனர்.

"எல்லா வீட்டிலயும் ஒரே சனம். இருக்க இடமில்ல. பரமண்ண வீட்டுக்கு பக்கத்தில் வெறுங்காணி ஒண்டு கிடக்குது. அதில ஒரு கொட்டில் போடுவம்" என்று கூறிய நிமலன், அக்காணியில் தரப்பாளால் கொட்டில் போட்டு கொட்டிலுள்ளேயே பதுங்கு குழியும் வெட்டினான். பதுங்கு குழியை விட்டு வெளியே வருவதே அரிது. அடைமழை போல் கொட்டிய குண்டுத் தாக்குதல்களிலிருந்து தப்புவதே பகீரதப் பிரயத்தனமாயிருந்தது. "கடவுளே! உயிர் தப்பினால் போதும்" என்று தன் இரு பிள்ளைகளையும் அணைத்தவாறு கூறுவாள் ராதா.

ராதாவின் மூத்த பையன் அபிகரனுக்கு அப்போது பத்து வயது. அவனுக்கு ஓரளவு விபரம் புரிந்தது. "கரன் வங்கருக்கு வெளியே போகக்கூடாது. வெளில ஷெல் விழும்" தாய் தந்தையின் சொல்லைக்கேட்டு பதுங்கு குழியிலேயே இருப்பான் கரன். ஆனால் இரண்டே வயதான



அபிநயனுக்கு ஏன்? எதற்கு? எப்படி? என்ற வினாக்களுக்கு விடை கூற முடியாமல் திண்டாடுவார்கள் ராதாவும் நிமலனும்.

வள்ளிபுனத்திலும் அவர்களால் தொடர்ந்து இருக்க முடியவில்லை ஒட்டுசுட்டான் பகுதியிலிருந்து வந்து வெடித்த பீரங்கிக் குண்டு பதுங்குகுழியினுள் வீழ்ந்து வெடித்ததால் பக்கத்து தரப்பாளிலிருந்த ஒரு குடும்பமே முழுமையாக இறந்து போனது. மனம் பதறியது. தரப்பாள் கொட்டிலை அவிழ்த்துக்கொண்டு நள்ளிரவில் வெடிச்சத்தங்கள் சற்று ஓய்ந்த நேரம் பார்த்து "இப்ப வெளிக்கிட்டால் தான் சரி. வெளிக்கிடுவமப்பா" கணவனிடம் கூறினாள் ராதா. மீண்டும் நள்ளிரவில் பொக்கணைக்கு இடம்பெயர்ந்தனர். பொக்கணையில் கொட்டில் போடுவதற்கு இடம் தேடி அலைந்து ஒரு வீட்டின் மலசலகூடத்துக்கு பக்கத்திலிருந்த சிறிய இடத்தில் பதுங்கு குழி வெட்டி தரப்பாளையும் கட்டினான் நிமலன்.

சின்னப்பையன் "அம்மா, அம்மா, பசிக்குது ஏதாச்சும் தாங்கம்மா" என கேட்டான். ராதாவுக்கு "ஓஓ..." என்று வாய் விட்டு அழவேண்டும் போலிருந்தது. கையில் காசிருந்தும் எதுவும் வாங்க முடியவில்லை. வெளியே போகவும் முடியவில்லை. போனாலும் வாங்குவதற்கு கடையோ பொருளோ இல்லை. ஓடிப்போய் மகனை அணைத்துக் கொண்ட ராதா தலையிலடித்தவாறு "கடவுளே என்ன செய்வேன்" என அழத் தொடங்கினாள்.

கையில் கொண்டு வந்த உணவுப்பொருட்களும் தீர்ந்துவிடும் நிலையிலிருந்தது. இடம்பெயர முன் ராதாவுக்கு அவள் சீட்டுக்கட்டியதால் கிடைத்த முப்பதாயிரம் ரூபா

கையிலிருந்தது. கையில் பணமிருந்தும் பொருட்கள் எதுவும் வாங்க முடியவில்லை. தன் சின்ன மகனுக்காக அவள் வைத்திருந்த பிஸ்கட் பையை உடைத்து ஊட்டி விட்டாள். பிஸ்கட்டை உண்ட சிறிது நேரத்திலேயே குழந்தைக்கு வாந்தியும் வயிற்றோட்டமும் வந்து விட்டது. "என்ன திடீரென்று இப்படியாகி விட்டது" என்று கூறிய நிமலன் பிஸ்கட் டை திருப்பிப் பார்த்தான். அது காலாவதியாகி இரண்டு வாரங்களாகி விட்டமை தெரிந்தது. "ஓ... நான் கவனிக்கேல்லையப்பா" என்ற ராதா ஷெல்லையும் பொருட்படுத்தாது ஓடிச்சென்று பக்கத்து வேலியில் நின்ற விளாத்திப் பிஞ்சுகளை பிடுங்கி உடைத்து மகனை உண்ண வைத்தாள்.

நாட்கள் நகர்வது போலவே தெரியவில்லை. ஒரு நாள் யுகமாகத் தோன்றியது. "காலைல கடற்கரைக்கு போனால் மீன் வாங்கலாம்" என்று பக்கத்து வீட்டு விமலாக்கா கூறியதைக் கேட்டு புறப்பட்ட நிமலனைத் தடுத்த ராதா "நீங்கள் பிள்ளைளோட இருங்கப்பா நான் போட்டு வாறன்" என்று கூறி இரண்டாயிரம் ரூபா பணம் எடுத்துக்கொண்டு கடற்கரையை நோக்கி நடந்தாள். அவளைப்போலவே பலர் கடற்கரைப் பக்கமாக செல்வதையும் வானில் வட்டமிட்ட விமானம் பதியும் போது ஓடிப்போய் வீதியருகிலிருந்த பதுங்கு குழியில் பதுங்குவதையும் கண்டு தானும் அவ்வாறே செய்தவாறு கடற்கரையை அடைந்தாள்.

கடற்கரை முழுவதும் தமது உயிரை துச்சமாக எண்ணி உணவுத்தேவைக்காக சனம் முண்டியடிப்பதைக் கண்டு "கடவுளே, என்ன கொடுமை இது" என கடவுளை நேர்ந்து கொண்டவள் மீனுக்காக வரிசையில் போய் நின்றாள். கூவிக்கொண்டு வந்து ஷெல் ஒன்று கடற்கரையில் வீழ்ந்து வெடித்தது. சிதறி ஓடிய மக்கள் நிலத்தில் வீழ்ந்து படுத்தனர். மீண்டும் வரிசையில் எழுந்து நின்றனர்.

ஒன்றிரண்டு படகுகள் கரையை நெருங்கியதும் மீனுக்காக இடிபட்டனர். படகிலிருந்து பெரிய சுறாமீனும் சில சிறிய மீன்களுமே இறக்கப்ட்டன. கால்கிலோ ஆயிரம் ரூபா என்றனர். வரிசையில் இடிபட்டு ராதாவும் கால்கிலோ மீனுடன் திரும்பினாள். காலை ஆறு மணிக்கு சென்றவள் வீடு வர மணி பன்னிரண்டு ஆகிவிட்டது.

"என்ன ராதா? இவ்வளவு நேரமும் காணேல்ல எண்டு தவிச்சுப்போனம்" கலங்கிய கண்களுடன் கூறினான் நிமலன். "ம்... பெருமூச்சு விட்ட ராதா தனது பிள்ளைகளைப் பார்த்தாள். பழஞ்சோற்றை இடித்த செத்தல் மிளகாய்த் தூளுடன் கண்களில் நீர் வழிய அவர்கள் உணவை உண்டு கொண்டிருந்த காட்சி அவளது பெற்ற வயிற்றை பற்றி எரியச் செய்தது. "அம்மா உறைக்குது..." சின்னப் பையன் வீறிட்டு அழத்தொடங்க "நானென்ன செய்ய ராதா? பிள்ளையள் பசிக்குதெண்டுதுகள் அதுதான்" என்றவாறு மகனுக்கு தண்ணீர் பருக்கினான் நிமலன். கலங்கிய கண்களைத் துடைத்த ராதா மீனை வேகமாக வெட்டத்தொடங்கினாள். பதுங்குகுழியிலே சமையல் முடிந்தது. "நாளைக்கு..?" என்ற சிந்தனை கூட வரவில்லை. இன்று உயிர் தப்பினால் தானே நாளைய விடியலைப் பார்க்கலாம்.

இரவு முழுவதுமே கேட்ட வேட்டொலிகள் சற்றுக்குறைவது போல தென்படவே வெளியே வந்தான் நிமலன். பின்னாலேயே ராதாவும் அவளின் சட்டையைப் பிடித்தபடி சின்னப்பையனும் வெளியே வந்தனர். "கரன் வங்கருக்குள் இருங்கோ" மூத்த மகனிடம் கூறினான் நிமலன். "இன்றும் கடற்கரைக்குப் போவோமா?" என எண்ணியவாறு அடுப்பெரிக்க காவோலை மட்டைகளைப் பொறுக்கத் தொடங்கினாள் ராதா, திடீரென்று ஷெல் ஒன்ற அருகில் வீழ்ந்து வெடித்தது. பக்கத்தில் றப்பர் பேணியுடன் அமர்ந்திருந்த மகனை தூக்கிகொண்டு பதுங்குகுழிக்குள் ஓடினாள் ராதா. அடுத்த ஷெல் மிகமிக அருகில் வீழ்ந்திருக்கவேண்டும். ஒரே புகை மண்டலம். புகை குறைந்ததும் பதுங்குகுழியைப் பார்த்தாள். கணவனைக் காணவில்லை.

சின்னப்பையனை மூத்தவனுடன் பதுங்குகுழியிலேயே இருத்திவிட்டு வெளியே வந்தாள். வெளியே வந்த ராதாவின் கண்களில் மகன் வைத்திருந்த றப்பர் பேணி தென்பட்டது. வெடித்த ஷெல்லின் துண்டு ஒன்று ஒட்டி நசுங்கிக் கிடந்தது பேணி. "கடவுளே" என நெஞ்சில் கை வைத்துக்கொண்டாள். கணவனைத் தேடினாள். காணவில்லை. பத்து நாட்களுக்கு முன்னரும் இதே போலத்தான் ஒரு சம்பவம்.

***

ஷெல்லடி தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தது சின்னப்பையன் "தண்ணி விடாய்க்குது" சிணுங்கத்தொடங்கினான். "கொஞ்சம் பொறு தம்பி ஷெல்லடி குறையட்டும்" சமாதானப்படுத்தினாள் ராதா. "ம்... எனக்கு தண்ணி வேணும்" பிடிவாதம் பிடித்தான் அபி. "நான் தண்ணி எடுத்து வாறன்" என பதுங்குகுழிக்கு வேளியே போன நிமலன் நீண்ட நேரமாக வரவில்லை. "தண்ணி..." அழத்தொடங்கினான் அபி. செய்வதறியாத ராதா "கரன் பார்த்துக்கொள்ளு, நான் போய் அப்பாவையும் கூட்டிக்கொண்டு தண்ணியோட வாறன்" என்று எழும்ப "இந்தா அபி தண்ணி" என்றவாறு உள்ளே வந்த நிமலன் "மூன்றாவது கொட்டில்ல இருந்த பாமாக்கான்ர மனுசன் செத்திட்டார். ஷெல் பீஸ் பட்டு தலைக்காயம். ஆள் உடனே முடிஞ்சுது" என்று வேதனையுடன் கூறினான்.

***

பக்கத்து தரப்பாள் கொட்டிலிலிருந்தன கமலாக்கா "ராதா... ராதா" என பதற்றத்துடன் அழைக்கும் குரல் கேட்டது. உணர்வு பெற்ற ராதா நெஞ்சு பதறிக் கூப்பிட்ட திசை நோக்கி ஓடிச்சென்றாள். அங்கு அந்தக் காட்சியை கண்டவள் நெஞ்சில் கையை வைத்தவாறு "ஐயோ..." என்றவாறு மயங்கி விழுந்தாள்.

***

படலையருகே ஆட்டோ வந்து நிற்கும் சத்தம் கேட்டது. பழைய நினைவுகளில் இருந்து மீண்ட ராதா திரும்பிப் பார்த்தாள். அங்கே நிமலன் ஒரு ஊன்றுகோலை ஊன்றியவாறு நடந்து வந்து கொண்டிருந்தான். "ஒரு மணி ஆகிட்டு போல. சாப்பிட வாறார்" என எண்ணியவள் "சாப்பாடு போடட்டே" என்றவாறு சமையலறை நோக்கி நடந்தாள். ●



ச.முருகானந்தம்

# மும்முனைகளில் பிரகாசித்த இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்

எழுபதுகளில் எழுத்துலகில் கால்பதித்த எழுச்சி மிக்க படைப்பாளர் அணியில் முகிழ்ந்து எழுந்த மூத்த இலக்கிய கர்த்தா இணுவையூர் திருச்செந்தி நாதனுக்கு இது மணிவிழா ஆண்டு. எழுத்துருவாக்கம், திறமையான நிர்வாக அதிகாரி, தேசப்பற்றாளன் என்ற மூன்று முகங்கள் இவருக்கு! தான் தடம் பதித்த இத்துறைகளில் முழுமையாக ஆழக் கால்பதித்து அகலித்த பங்களிப்பைச் செய்தவர் இவர். நான்கு தசாப்த இலக்கியப் பயணத்தில் இவருக்கு பல முகங்கள்! முக்கியமாக சிறுகதைப் படைப்பாளியாக பரிணமித்த இவர் நாவல், நாடகம், கட்டுரை முதலான துறைகளிலும் படைப்பாற்றலை வெளிப்படுத்தி யுள்ளார். இதற்கு மேலாக வானொலி மற்றும் மேடை நாடக படைப்பாளியாகவும், பத்திரிகையாளராகவும் செயற்பட்டிருக்கின்றார். எழுத்துலகில் காலடி பதித்த நாள்முதல், முதல் இரண்டு தசாப்தங்களாக இளமைக்கேயுரிய வேகத்துடனும் துணிச்சலுடனும் பல கதைகளைப் படைத்துள்ளார். எனினும் பின்னர் அரசபணி இறுக்கம் காரணமாகவும், தேசத்தின் அவல நிலை மற்றும் கொடிய யுத்தம் காரணமாகவும் இவரது எழுத்துப்பணிகள் சற்று வேகம் தணிய, பத்திரிகைத் துறையில் முழுமூச்சுடன் செயற்பட்டார்.

ஒரு சிறுகதை எழுத்தாளனாக 150 இற்கு மேற்பட்ட சிறுகதைகளை ஈழத்தின் அனைத்து பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் எழுதினார். சில போட்டிகளில் பரிசில்கள் பெற்றதுடன் இவரது சிறுகதைகளுக்கு தகவம் அங்கீகாரமும் கிடைத்தது. அமிர்த கங்கை இதழில் எழுதிய "இவர்கள்", மல்லிகை இதழில் எழுதிய "அகதி முகாம்" ஆகிய இரு சிறுகதைகள் தமிழ்க்கதைஞர் வட்டத்தின் பரிசில்களைப் பெற்றன. தனது சிறுகதைகள் சிலவற்றை தொகுதிகளாக வெளிக்கொணர்ந்தும் இருக்கின்றார். "வெட்டுமுகம்", "அம்மாவினதும் எனதும்", "மணல்வெளி அரங்கு" என்ற மகுடங்களில் மூன்று சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்திருக்கின்றன. "என்றாவது ஒரு நாள்" என்ற குறுநாவல், நாவல் உலகில் இவரைப் பயணிக்க வைத்தது. "முடிவல்ல ஆரம்பம்", "இருள் இரவில் அல்ல", "மீண்டும் புதிதாய் பிறப்போம்", முள்முடி மன்னர்கள்" ஆகிய நாவல்களையும் எழுதி ஈழத்து இலக்கிய உலகில் தனக்கென ஒரு இடத்தை பிடித்துக்கொண்டார்.



இவருடைய சில சிறுகதைகள் சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. பழம்பெரும் எழுத்தாளர் அ.செ. முருகானந்தன் எழுதிய "காளி முத்துவின் பிரஜாஉரிமை" என்ற சிறுகதை பிரசித்த மானது. இந்தக் கதையின் தலைப்பில் தொகுக்கப்பட்ட சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழ்ச் சிறுகதைகளில் இவருடைய "மேன்மக்கள்" என்ற சிறுகதையும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இவரது கதைகள் நடைமுறைப் பிரச்சினை களை யதார்த்தமாக அணுகி சமூக விழிப்புணர்வுக்கும், மாற்றத்துக்கும் வித்திட்டன. ஆரம்ப சிறு கதைகள் சில வறுமை, குடும்பச் சிக்கல் கள், சமூகத்தின் போலித் தனங்கள், வர்க்க மற்றும் சாதிய அடக்குமுறை களை சித்திரித்தன. சமூக மாற்ற உலைக்களமாக இருந்த ஐம்பது முதல் எழுபது வரையிலான காலங் களை அடுத்தும், தேசியப்பிரச்சினை, இன முறுகல்கள், விடுதலைப் போராட்டம் என்பன முகிழ்ந்த ஆரம்பக் காலத்திலும் எழுத்துலகில் காலடி பதித்த அணியில் இணுவையூர் சிதம்பரதிருச்செந்தி நாதனுடன் நானும் இருந்தவன். இப்போதைய காலத்தைப் போலன்றி அன்றைய காலகட்டம்

இலக்கியவாதிகளின் படைப்புக்குள் சிறந்த நுகர்வுப் பண்டமாக இருந்ததை இப்போதும் நினைத்துப் பார்க்கின்றேன். மூலைக்கு மூலை புத்தகக் கடைகள் இப்போதைய கணினித் தட்டு (dvd) கடைகள் போல் இருந்த காலம். இந்திய சஞ்சிகைகளில் மூழ்கிப்போயிருந்தவர்களுக்கு, அவற்றின் இறக்குமதிக் கட்டுப்பாட்டினால் வாசிப்ப தற்கு நூல்கள் இன்றி தவித்தனர். அதுகால வரை கண்டு கொள்ளப்படாத ஈழத்து பத்திரிகை சஞ்சிகைகள் தேடிக்கண்டு பிடிக்கப்பட்டன. ஈழத்து இலக்கியப் படைப்புக்களைக் கண்டு முகம் சுழித்தவர்கள் கூட காலப்போக்கில் அவற்றை விரும்பிப் படிக்க ஆரம்பித்தனர். அந்தக் காலத்தில் கதைகள் பற்றிய ரசனைப் பரிமாற்றம், கலந்துரையாடல், கருத்தரங்கம் எனக் களை கட்டின. எங்கள் எழுத்துக்கள் விரும்பிப் படிக்கப்பட்ட போது உற்சாகமாக எழுதவும் முடிந்தது. இன்று எல்லாமே மாறி விட்டது. வீரகேசரி நிறுவனம் வணிகநோக்கில் நாவல்களை வெளியிட ஆரம்பித்தது. எனினும் இந்த நிறுவனம் மாதா மாதம் பல நல்ல நாவல்களை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. மண்வாசனை மிக்க படைப்புக்கள் பரவலாக வாசிக்கப்பட இவ்வெளியீடுகள் பெரிதும் வழி சமைத்தன.

இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் பழகுவதற்கு இனியவர். அவரது பண்பட்ட மனதில் எழுந்த பல கதைகள் மனிதத்தைப் பேசின. போர்க்கால ஆரம்பத்தில் எழுத்தாளர்கள் போர் பற்றி எழுத முடியாத சூழ்நிலை இருந்தது. அரச படைகளின் நடவடிக்கைகள், போராளிகளிடையே முரண்பாடுகள் என்பன ஒரு புறம், பத்திரிகைகளில் போர்பற்றி புனைவுகளைக் கூட எழுதமுடியாத சூழ்நிலை மறுபுறம் என எழுத்தாளர்கள் பேனாவை மூடிவைத்திருந்த காலத்தில் ஒரு சிலர் உருவகமாகவோ, நாசுக்காகவோ படைப்புக்களை வெளிக்கொணர்ந்தனர். இந்த வகையில் பதுங்குகுழி, அலியன்யானை, அரசனின் வருகை, கோசலை, அகதிமுகாம் முதலான கதைகள் ஏதோ ஒரு வகையில் போர்பற்றிப்பேசின. காலப்போக்கில் போர் தொடர்பான கதைகள் பத்திரிகைகளில் இடம்பெற ஆரம்பித்தன. இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதனின் பின்னைய கதைகள் போரினால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றிப் பேசின. போரினால் பாதிக்கப்பட்ட மக்களையும், சம்ப வங்களையும் தனது கதைகளில் தரிசனமாக்கினார்.

இவர் யாழ் பல்கலைக்கழக நுண்கலைத்துறை ஊடாக, "சுக்கிராச்சாரியார்" என்னும் புராண நாடகத்தைத் தயாரித்து யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற்றினார். இந்த மேடை நாடகம் வானொலிக்கு ஏற்றவாறு மாற்றப்பட்டு "தேவயாணி" என்ற பெயரில் முழுநேர நாடகமாக மூன்று தடவைகள் ஒலிபரப் பானதுடன் பாராட்டைப் பெற்றது.

பல்துறை ஆற்றல்களை தொடர்ந்து வெளிப் படுத்த வந்த இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதனின் அண்மைய தசாப்தங்கள் படைப்பிலக்கியத்தை விட பத்திரிகைத் துறை சார்ந்ததாக இருந்தது. வன்னி இறுதிப் போர் பலரைப்போலவே இவரது மனநிலையையும் பெரிதும் பாதித்திருந்தது. இவரது படைப்புக்களின் இதழ்கள் யாவும் இழந்த நிலையில் புதிய படைப்புக்களில் ஈடுபாடு குன்றியவராக அமைதியாக இருந்ததை அவதானிக்க முடிந்தது. இதன்போது ஓய்வு நிலையில் அவர் தொடர்ந்தும் படைப்பில் ஈடுபட வேண்டும் என்பதை நண்பர்களினதும் அவரது அபிமான வாசகர் களினதும் விருப்பம். அகவை 60 ஐ நிறைவு செய்யும் மணிவிழா ஆண்டில் அன்னாரை வாழ்த்துவதுடன், தொடர்ந்து நீடூழி வாழ்ந்து ஈழத்து இலக்கியத்துக்கு உரமூட்ட வேண்டும் என விரும்புகின்றேன். •

# அறிவினால் அகிலத்தை வெல்வோம்

எண்ணங்கள் குறிக்கோளாய் ஏற்றங்கள் காண்பதற்கு
மண்ணிலே மாந்தர்தாம் மலர்ச்சி காண்பார்
விண்ணையே தொட்டுவிடும் வியத்தகு சாதனைகள்
கண்ணுற்றே செயல்கொள்வார் காலமெல்லாம் அறிவாலே.

கல்லிலே உளி கொண்டு கட்டவிழ்த்த சிற்பத்தில்
மெல்முகைவெடித்த மலராக மூச்சுற்றே உயிரோட்டம்
படிமேவும் பண்பாடு வியந்து நிற்கும் வரலாற்றில்
நெடியதோர் ஆற்றுகையால் நிலைபெறுதல் அறிவாலே.

தமிழும் இலக்கணமும் தனித்துவமாய் புகழ் ஓங்க
தரம்மிக்க மென்பொருட்கள் தாராளமயமாகும்
தரணியில் தமிழுலகம் தலைசிறக்க அறிஞர்கள்
சிரம் கொள்வார் தேசத்தில் தேர்ச்சியுறு அறிவாலே.

பூஞ்சோலை நறுமணமும் புத்தாக்க மரபுரிமை
நந்தவனக் கலைப்படைப்பில் நயமிகு நலப்புதுமை
காந்தக்கலையழகு களிப்பூட்டும் கண்ணசைவும்
வேந்தரும் வியப்படைவார் விழியுறுவர் அறிவாலே.

அனுவியல் ஆராய்ச்சி அதிநுட்ப விஞ்ஞானம்
மெய்யியல் கோட்பாடும் மேன்மையுறு அறிவியலும்
விழுமியத்துப் பண்பு கொண்டே வீறுகொள்வார்
விருப்புடனே நாட்டுயர்ச்சி கண்டிடுவார் அறிவாலே.


பாட்டாளி மக்களவர் பாரிய கைத்தொழிலில்
கூட்டாளியாகி எந்திரக் குறுகுபணி மேவிடவும்
வேற்றுமைகள் களைந்தே மானுடத்து மதியுள
ஆற்றலால் அதிசக்தி பெற்றிடுவோம் அறிவாலே.

கோபுரக் குளிர்மலைகள் நிலைகுலைந்து வீழ்வதுவும்
பாரினில் நிலநடுக்கம் பலவெடுத்து வருவதுவும்
குன்றின் தீ அலையால் குமுறும் எரிமலைகள்
நன்றே நம் நலன் காப்போம் நாம் பெற்ற அறிவாலே.

பூமியில் வாழுயிர்கள் புண்ணியப் பிறப்புயிர்கள்
இயற்கையின் அன்னையிவள் இயல்புறவே நடைகொள்வாள்
ஆனந்தமாய் நாம்வாழ அறிவியலை நேசித்தே
அறிவினால் அகிலத்தை அரும்பணியால் வெற்றிகொள்வோம்.

– க.திருவருள்நேசன் –

# வதை மொழி



எனது சொந்த வாழ்வுக்கு
நிம்மதி கொடுங்கள்
துயரத்தின் இரும்புக்கம்பிகளால்
என்னைச் சிறை வைத்தீர்கள்

எனது சுதந்திரத்தினை
உங்களது ஜனநாயகம்
நான்கு சுவருக்குள்
சுருக்கி விட்டது.

எனது வாழ்வுரிமை
வதைக்கப்பட்டு
அதிகாரத்தின் முள்வேலிக்குள்
புதைக்கப்பட்டிருக்கிறது.

எனது பெண்ணியத்தின்
விசாலத்தினை,
நிர்க்கதியற்ற எனது
சொந்த வாழ்வினை
அதிகாரத்தின் கெட்டுப் போன
விரல்கள் தொட்டு நாசமாக்கின.

எனது பெண்மை
குலைக்கப்பட்ட குடிசைபோல
சீரழிந்து போனது

இந்த நாற்றம் பிடித்த
இருட்டுக்குள்
வெள்ளையாடையுடன்
ஒரு அலுமினியத்தட்டுடன்
என் உடல் அதிகமான நோய்களை,
வலிகளை
அறிமுகப்படுத்திக் கொண்டு
என் ஆன்மா
சோர்ந்து கிடக்கின்றது.

உறக்கத்தின்
பெரும் வெளிகளிலெல்லாம்
என்னைத் துரத்தி வருகிறது
ஆறுகால் கொண்ட
பிசாசுக் கூட்டம்!


என் ஆடைகளைப் பிய்த்து
என் முலைகளையும்,
வயிற்றினைப் பிய்த்து
என் இரைப்பையினையும்,
தின்று கூச்சலிடுகின்றன.

என் உடல் வியர்த்து
நள்ளிரவில் உறக்கத்தின்
பெருவெளி அடங்கையில்
கரிய இருட்டுச் சிறைக்குள்
நடுங்கிக் கிடந்தேன்.

நான் விடுதலை அடையும்
நாளில் என் ஆன்மா
என்னை விட்டு
வெகுதூரத்தில்
போய்விட வேண்டும்.

துர்நாற்றம் பிடித்த
இந்த சமுதாயத்தில்
நான் உயிர் கொண்டு வாழ்தல்
ஜடத்திற்கு உயிர் உண்டான
கதையாகி விடும்.

# உன் ஒழுக்கு நீள்வளையமா?



பெண்ணே ....
பேசா மடந்தையாய்
பிரியமுடன் வருகிறாய்.!
பேச நான் தொடங்கையில்
பார்த்துவிட்டு ஓடுகிறாய்.

நாம்
இருக்கும் இடத்திற்கு
எட்டுத்திசைகள்
இது தெரியும்
எனக்கும் உனக்கும்
உனக்கு மட்டுமேன்
அத்தனை திசைகள்

திரும்பி நின்றால்
நெருங்குகிறாய்
நெருங்கி நான் வந்தால்
ஓடி மறைகிறாய்

நீ..
பிறன் மனையாள் என்பது
எனக்குத் தெரியும்
இருப்பினும் உன் மீதான
என் பிரேமை
சகோதர பிரேமையல்ல..

சட்டெனக் கோபம்
கொள்ளாதே பெண்ணே...
இவற்றைவிட உறவுகள்
எம்மிடத்தில் இல்லையா?

நட்பைச் சகித்திடாத
நரகச் சமூகத்தில் பிறந்தோமா?
ஆனுடன் பெண்ணைக் கண்டால்
அது தான் ...!
என நினைப்பதா?

தோழியடி நீயெனக்கு ...
தோழனாக நீ நினைத்தாய்..
தோளில் தட்டிச் சென்றாய்

கரங்களைக் குலுக்கத் தாவென்றேன்
அதரத்தில் அனல் தெறிக்க ஓடுகின்றாய்

அருகில் வருவதும்..
தொலைவில் செல்வதும்
அசர்ந்து நான் நின்றால்..
அடித்துச் சிரிப்பதும்
போதுமடி வதையெனக்கு...

பருவ மாற்றத்தை.
படிமமெனக் கொண்ட..
உன் ஒழுக்கு நீள் வளையமா?

ஒழுக்குகள் நெருங்கினும்
ஓடும் பாதை வேறல்லவா ...
முன்னால் பார்த்து
ஓடிக் கொண்டிரு..

உனக்குள் புள்ளியாக
என்னை மாற்றிடாதே
உன் இறைமையும் என் வாழ்வும்
ஒரு சேர முடிந்துவிடும் !

கனா.மகேஸ்வரன்

# போதைவந்தபோது...

போதையேறித் தலைதெறிக்கும் வெறியில், தன்னை மறந்து புலம்பிக் கொண்டிருந்த ராசையரை, கார்க் கதவைத் திறந்து வெளியில் இழுத்திறக்க முயன்றபோதுதான் இவன் கவனித்தான்.

பின் ஸீட் முழுவதும் சிதறிப் பரவிய காரம்,மணம்,சுவை கொண்ட கரம் சுண்டல், ஸீட்டின் கீழேயும் நிறையவேகொட்டிக்கிடந்தது.

"ச்சீ... இதையெல்லாம் வீணாக்கி யிருக்கிறாரே இந்த மனிசன்... இதையே ஒரு ஸொப்பிங் பாக்கில் கொண்டு வந்திருந்தால், நண்பர்களோடு பங்கு போட்டுத் தின்றாலும், உடன் தின்று முடிக்க முடியாத அவ்வளவு கடலைகள் - வெங்காயம் - மாங்காய்த் துண்டங்கள்.."

வெறும் ஐந்தோ பத்தோ ரூபாவில் வாங்கி ருசித்துச் சாப்பிடும் மணியத்திற்கு வாய் ஊறவே செய்தது.

ராசையரைவெளியே இழுத்தெறிந்த வேகத்தில், றிவேஸில் பறந்து மறைந்தது, அந்த பியட் கார்.

"வா...வா.. அவன் போக முன்னம் காட்டிறன்..." என்று இவனை இழுத்துக் கொண்டு போனான்,அவன்.

அவன் காட்டிய இடத்தில் நிற்பவனின் கோலத்தைக் கண்டு, இவன் கெக்கட்டமிட்டுச் சிரித்தான்.

வாயைக் குவித்து "...உர்...ர்...ர்..." என்ற படி கண்களை மூடிக்கொண்டு,அந்தக் குடிகாரன் ஒலியெழுப்பிக் கொண்டிருந்தான்.

"ஓ...! இதுதான் தும்பியா? வெறியேறினால் இப்படியுமா?" என்றுஅலுத்துக் கொண்டான் இவன்.

அடுத்து அவன் கண்டமற்றொருகாட்சியும் சுவையானதுதான்,

கண்விழித்து ஸொப்பிங் பாக்குடன் முன் நகர்ந்த அந்த "வெறிமகன்" கீழே விழுந்த கத்தரிக்காய் ஒன்றைப் பொறுக்கி பாக்கில் போட்டு தள்ளாடி ஓரடி எடுத்து வைத்தான்.

குனிந்து பார்த்தவன், "அட; இன்னும் ரெண்டு விழுந்திருக்கே..." என்று தனக்குள் முணுமுணுத்தபடி

இதுகளெல்லாம் ஏன் தான் இப்பிடித் தலைகால் தெரியாத குடியில் உழன்று திரியுது களோ என்றுஆதங்கப்பட்டான் மணியம்.

அவனுக்கு ஒன்று மட்டும் புரிந்தது, இது காசு கொடுத்து வாங்கிய சுண்டலல்ல...ஆளை அடித்துப் பறித்துவந்திருப்பார்களென்று.

வெறிமுறிய,விடிந்தால் வெளிச்சத்திற்கு வருமென்று அமைதியானான்.

ராசையரின் தமக்கை வந்து தடியெடுத்து சரமாரியாகத் தாக்கினாள்.

"அக்காத்தை நீ அடி...நல்லாய் அடி... வேறை ஒருத்தரும் என்னில கை வைக்கப்படாது... நீ அடி அக்காத்தை...!"

அந்த வெறியிலும்,அடி வாங்கிய போதும், பாசம் பொங்கி வழிந்தது ராசையரிடம்.

மணியத்திற்கு ஆச்சரியமாயிருந்தது.

***

முன்பும் இப்படித்தான் ஒரு சமயம் ஆச்சரிய மான சம்பவமொன்றை மணியம், தன் நண்பனின் மூலம் தரிசித்தான்.

பஸ் ஸ்ராண்டில் ஒருவன் தும்பி ஊதிக் கொண்டிருப்பதாகவும்,தும்பி ஊதுவதென்றால் என்னவென்று தெரியுமா? என இவனிடம் அவன் கேட்டபோது, அப்பாவித்தனமாக, இல்லையென இவன் தலையசைத்தான்.

எடுத்துப் போட்டவன், "இன்னும் இருக்கா?" என்று மறுபடியும் குனிந்தான்.

மற்றவற்றை எங்கோ தொலைத்து விட்டு, ஒரேயொரு கத்தரியை ரெண்டென சொல்லிச் சொல்லியே கிழிந்த பாக்கில் போடும் அந்த அதிசயத்தையும் பார்த்தான். வெறியில் ஒன்று இரண்டாகத் தெரியுமோ?"

***

பொழுது விடிந்தபோது, பக்கத்துவீட்டுப் புதினம் பார்க்கத் தயராக,மணியம் நேரத்தோடே எழுந்து காத்திருந்தான்.

"தம்பி! ராசையா ஐயான்ரை வீடெது?" என்று புதியதொரு குரல் கேட்டது.

நிமிர்ந்து பார்த்தபோது,சாட்சாத் கரஞ் சுண்டல் வண்டிக்காரனே நின்றிருந்தான். இவன் வாய் திறக்க முன்னரே, ராசையாரே அங்கு பிரசன்ன மானார்.

"ஐயா...நீங்கள்...நேற்று..."

"போடா,போ...நான் வந்து கவனிக்கிறன்!" தமக்கையின் கண்ணில் படாமல் துரத்தி விட்டதில், திருப்தியுடன் நடந்தார் ராசையர்.

மணியத்துக்கு இருப்புக் கொள்ளவில்லை.

மாலையில் ரவுணுக்குப் போனவன், புதிய கரஞ்சுண்டல் வண்டியுடன் நின்ற கடலைக்காரனைப் பார்த்து திகைத்து நின்றான்.

நேர்காணல்


2001 இல் 'மறைப்பணி புரிந்த மாமேதை' என்ற நூலைப் பிரசவித்ததன் மூலம் இலக்கியப் பிரவேசம் செய்த அருட்தந்தை செபமாலை அன்புராசா அவர்கள் இதுவரை எட்டு நூல்களை வெளியீடு செய்துள்ளார். 'கலைத்தவசி' குழந்தை செபமாலை அவர்களின் மகனான அருட்பணியாளர் செபமாலை அன்புராசா அவர்களின் நேர்காணலை ஜீவநதி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

# செ. அன்புராசா அடிகள்

சந்திப்பு:- கே.ஆர். டேவிட்

**கே.ஆர். டேவிட் - தங்களின் இலக்கிய ஈடுபாட்டிற்கு தங்களின் தந்தையாரான "கலைத்தவசி" குழந்தை செபமாலை அவர்களே உந்து சக்தியாக இருந்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை. குழந்தை செபமாலை அவர்களின் இலக்கிய ஈடுபாடுகள் தங்கள் சிந்தனையில் ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றி விபரிக்க முடியுமா?**

செ. அன்புராசா-என்னுடைய தந்தையார் குழந்தை செபமாலை ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு மேலாக கலை இலக்கியத்துறைகளில் மிகுந்த ஈடுபாட்டோடு இயங்கி வந்தவர். ஏனெனில் அவரின் 20ஆவது வயதிலேயே பயிற்றப்பட்ட ஆசிரியராக உருவாக்கம் பெற்றிருக்கிறார். அவருடைய இளமைக் காலத்தில் இருந்தே அவருக்கு கலைகளிலும் இலக்கியத்திலும் அரசியலிலும் அதீத ஈடுபாடு இருந்தது. அவர் கலை இலக்கியத் துறைகளில் இடைவிடாமல் இயங்கிக் கொண்டிருந்த ஆளுமைமிக்க ஒருவராக, அவரை, என்னுடைய சிறு வயதிலிருந்து பார்த்து வந்த காரணத்தினால் கலை இலக்கியங்களை இரசிக்கின்ற - அவற்றில் பங்கெடுக்கிற விருப்பம் இயல்பாகவே எனக்குள் இருந்து வந்தது. அந்த வகையில் என் தந்தையார் மிகவும் உற்சாகமாக இயங்கி வந்த காலத்தில்,"நாம் செய்கிறவற்றை (கலை இலக்கிய சமுக செயற்பாடுகளை) வரலாற்று ஆவணமாக நாம் உருவாக்கவில்லை என்றால் அவை காற்றோடு காற்றாய் பறந்துவிடும். அடுத்த தலைமுறைக்கு அது போய்ச்சேராமல் போய்விடும். எனவே, ஆவணப்படுத்துதல் அவசிமானது!" எனப் பல நேரங்களில் சொல்லக் கேட்டிருக்கிறேன். அத்துடன் மிகுந்த வறுமையான சூழலிலும் அவரால் தொடர்ந்து ஆற்றுகை செய்யப்பட்ட நாடகங்கள், கலைநிகழ்வுகள், வெளியீடுகள் என்பவை எங்களுக்கு அவரின் தமிழ் - கலை - இலக்கியத் தாகத்தை வெளிப்படுத்தி நின்றன. இத்தகையதொரு வாழ்க்கை அனுபவம் என் மனதில் மிக ஆழமாகச் சிறு வயதிலிருந்தே பதிந்திருந்தது.



அதனால், கலை இலக்கியப் படைப்புக்களை குறிப்பாக பாரம்பரிய மரபுவழி கிராமிய இலக்கியங்களை ஆவணப்படுத்த வேண்டும் என்பதன் அவசியத்தை என் தந்தையிடம் இருந்தே கற்றுக்கொண்டேன். இதன் பின்னணியில்தான், என் தந்தையாரால் பாடப்பட்டு (குறிப்பிட்ட சில பாடல்களை குழந்தை செபமாலையின் இளைய சகோதரர் கலாபூசணம் மாசிலாமணி பாடியிருக்கிறார்) நான் பதிப்பித்த "வியாகுலப் பாக்களும் வியாகுலப் பிரசங்கமும்" என்ற ஒலிப்பேளையையும்(2006), முதுகலைமாணி பட்டப்படிப்பை மேற்கொண்டு ஆய்வு செய்து பின்னர் வெளியிட்ட,"மன்னார் மாதோட்ட கத்தோலிக்க நாடகங்கள் - ஓர் ஆய்வு"(2007) என்ற நூலையும்,"முருங்கன் புனித இயாகப்பர் ஆலய நூற்றாண்டு விழா மலர் 1908 – 2008" என்ற எம் ஆலய மலரையும்(2008), என் தந்தையாரின் அரை நூற்றாண்டுக்கும் மேலான கலை இலக்கிய வாழ்வை



ஓரளவுக்கேனும் ஆவணப்படுத்தியுள்ள "கலைத்தவசி"என்ற என் தந்தையாரின் கலைப்பணி நயப்பு மலரையும்(2012), "தவமலர்கள்" என்ற என் பெற்றோரின் திருமண பொன்விழா மலரையும்(2013), "நாம்"என்ற முருங்கன் முத்தமிழ் கலா மன்றத்தின் (குழந்தை செபமாலை அவர்களால் நிறுவப்பட்டது) பொன்விழா மலரையும்(2014) நோக்கவேண்டும். சுருக்கமாகக் கூறினால் என் தந்தையார் ஏற்படுத்திய தமிழ் - கலை - இலக்கிய நெருப்புத்தான் எனக்குள்ளும் பற்றிக்கொண்டது என்பேன்!

**கே.ஆர்.டேவிட் - இலக்கியங்களுள் எந்த வகையான இலக்கியங்களில் கூடுதலான அக்கறை செலுத்தி வருகின்றீர்கள் என்பதையும், அந்த இலக்கியத்தின் மூலம் சமுகத்திற்குக் கூடுதலான செய்திகளை வழங்க முடியும் என்று தாங்கள் நம்புவதற்கான சமுகவியல் காரணங்கள் பற்றியும் விளக்குவீர்களா?**


செ.அன்புராசா - சிறுவயதில் சிறுசிறு நாடகங்களை, பேச்சுக்களை, கட்டுரைகளை, கவிதைகளை ஆக்கியிருக்கிறேன். ஆனால், பெரிய அளவில் "எழுத வேண்டும்", "நூல்களைப் படைக்கவேண்டும்" என்ற எண்ணம் ஆரம்பத்தில் எனக்கு இருந்ததில்லை! ஆனால் நான் வாழ்ந்த சூழல் என்னை எழுத நிர்ப்பந்தித்தது என்றுதான் சொல்லலாம். 1998ஆம் ஆண்டு யாழ்.மருத்துவமனை ஆன்ம குருவாக என் குருத்துவப் பணியைத் ஆரம்பித்த போர்க்காலச் சூழலில் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த ஒரே ஒரு பத்திரிகையான உதயனில் "மக்கள் திருமுகம்" என்ற பகுதியில் மக்கள் சந்தித்த சொல்லொணாத் துன்பங்களை யாழ்.மருத்துவமனையை மையமாக வைத்துக் கொண்டு எழுதினேன். ஒரு கட்டத்தில் ஒரே ஒரு பத்திரிகையான உதயனும் இடைநிறுத்தப்பட்டது! எப்படியான காலசூழலில் எழுத்துலகில் மிகத் தீவிரமாக நுழைந்தேன் என்பதற்காக இதனைக் கூறுகிறேன். இவ்வாறுதான் சமூகத்தின் ஈடுபாடும் அதனை இலக்கியமாக்கும் திறனும் எனக்குள் உருப்பெற்றது.

அந்த வகையில் ஆவணப்படுத்தலை ஒரு புறமாக வைத்துக்கொண்டு கட்டுரை, கவிதை, ஆய்வு, கலை ஆற்றுகைகள் ஆகிய இலக்கிய வடிவங்களிலேயே கூடுதலான கவனத்தைச் செலுத்தினேன். மேற்கூறப்பட்ட இலங்கிய வடிவங்களில் ஒப்பீட்டளவில் கட்டுரை இலக்கியத்தையே கூடுதலாகப் படைத்திருக்கின்றேன். கட்டுரைகளைப் படைப்பதற்குக் காரணம், பெரும் எண்ணிக்கையிலானவர்கள் சமுகம் சார்ந்த கட்டுரைகளைப் படிக்கிறார்கள் என்பதை என் அனுபவத்தில் கண்டுகொண்டேன். என்னுடைய கட்டுரைகளைப் படித்துவிட்டு பலர் என்னிடமே அது பற்றி சொல்லியிருக்கிறார்கள். அந்தவகையில் என் கட்டுரைகளைப் பலர் படிக்கின்றார்கள், அவை மக்களை நேரடியாகச் சென்றடைகின்றன, அது மட்டுமல்லாது அது பலரின் சிந்தனையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை உணர்ந்து கொண்ட நான் தொடர்ந்து அவற்றைப் படைப்பதிலேயே ஆர்வமாக ஈடுபட்டு வருகிறேன்.

**கே.ஆர்.டேவிட் - மன்னார் பிரதேசத்தில் நாட்டார் இலக்கியங்கள் கூடுதலாகப் பேணப்பட்டு வந்ததாகவும், இப்போதும் பேணப்பட்டு வருவதாகவும் பேராசிரியர் மௌனகுரு அவர்கள் அழுத்திக் கூறியுள்ளார். மன்னார் பிரதேசத்தில் நாட்டார் இலக்கியங்கள் தோற்றம் பெற்றமைக்கும், வளர்க்கப்பட்டமைக்குமான வரலாற்று, சமுகவியல் காரணிகள் எதுவாக இருக்குமென எண்ணுகிறீர்கள்?**

செ.அன்புராசா - மன்னார் பிரதேசத்தைப் பொறுத்த வரையில் நாட்டார் இலக்கியங்கள் இப்போதும் பேணப்பட்டு வரப்படுகிறது என்பதோடு அவை இன்றும் உயிரோட்டமாக மக்களின் வாழ்வியலோடு இணைந்திருக்கிறது என்றுதான் கூறவேண்டும். கிறிஸ்தவர்களிடையே புனிதர்களைப் பற்றிய நாடகங்களும்(இரண்டு இரவுகள்), வாசாப்புக்களும்(ஓர் இரவு) இப்போதும் மிகவும் ஆர்வத்தோடு பாடப்பட்டு வரப்படுகின்றன. கிறிஸ்தவர்களைப் போல இந்துக்களிடையே காத்தவராயன் கூத்து ஆடப்பட்டு வரப்படுகிறது. இவ்வாறு இக்கூத்துக்கள் மன்னார் மாதோட்டப் பிரதேசங்களில் இன்றும் ஆடப்படுவதற்கு, அங்கு, இன்னும் மாறாமல் மறையாமல் காணப்படும் ஊர் அமைப்பு, கிராமியச் சூழல், கிராமியச் செல்வாக்கு ஒரு முக்கியமான காரணம் என நான் கருதுகிறேன். மன்னார் மாதோட்டத்தில் நாட்டார் இலக்கியங்கள் தோற்றம் பெற்றமைக்கும் இப்போதும் தொடர்ந்து வளர்க்கப்படுகிறமைக்கு கிராமிய வாழ்க்கை முறை இன்னும் கெட்டுப்போகாமல் இருப்பது ஒரு முக்கியமான காரணம் என நினைக்கிறேன்.

அத்துடன் கிறிஸ்தவ மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மன்னார் மாதோட்டத்தில் ஏதாவது வேண்டுதல்களை முன்வைத்து உதாரணமாக மன்னாரின் வாழ்வாதாரத்தை நிர்ணயிக்கும் வேளாண்மை, கடற்தொழில் போன்ற தொழில்கள் மழையின்மையால் கைகூடாமல் போகிறபோது, நோய் பிணிகளால் மக்கள் அல்லலுறுகிறபோது, சமுகத்தில் ஒற்றுமை குலைந்து பிரச்சினைகளும் பிளவுகளும் அதிகரிக்கின்றபோது, பிள்ளைச் செல்வங்கள் குறைவடைகிறபோது என இந்நாடகங்கள் நேர்த்திக்









காகப் பாடப்படுவதும் முக்கியமான ஒருசில காரணங்களாகும். கிறிஸ்தவ மக்களைப் போல இந்துக்களும் காத்தவராயன் கூத்தினை மிக நீண்ட காலமாக பாடி வருவதும் குறிப்பிடத்தக்கது.

மேலும், ஒவ்வொரு ஆலயங்களிலும் பாடப் பட்டுவரும் அவ்வாலயத்துப் புனிதர் பெயரில் பாடப்படும் கவிகள், சுற்றுப்பிரகாரப் பாடல்கள்(புனிதரின் ஊர் வலம்) போன்றவை இன்றும் வழக்கத்தில் உள்ளவையாக - வாழும் கலைகளாகவே இருந்து வருகின்றன.

**கே.ஆர்.டேவிட் - தங்களின் தந்தையாரான “கலைத்தவசி” குழந்தை செபமாலை அவர்கள் தனது ஐந்தாவது வயதில் மேடையில் ஏறி நடித்ததாக அவரைப் பற்றிய பதிவுகள் தெரிவிக்கின்றன. நீங்கள் உங்களின் கலை, இலக்கியச் செயற்பாடுகளை எத்தனையாவது வயதில் ஆரம்பித்தீர்கள், அதற்கான சூழல் தங்களுக்கு எவ்வாறு அமைந்தது என்பது பற்றி விளக்குவீர்களா?**

**செ.அன்புராசா -** என் தந்தையார் குழந்தை செபமாலையின் பிரசித்தி பெற்ற நாடகங்களுள் “யார் குழந்தை?” என்ற நாடகமும் ஒன்று. அந்நாடகத்தை முதன் முதலாக 1971இல் மேடையேற்றியபோது என் தந்தையார் சொலமன் அரசனாக நடித்து நாடகத்தின் உச்சக் கட்டத்தில் ஏறக்குறைய ஒரு வயதான என்னை தலை கீழாகத் தூக்கினார். அதாவது குழந்தைப் பருவத்தில் இருந்து நான் நாடகங்களில் நடித்து வருகிறேன் எனக் குறிப்பிடுவதற்காக இதனைக் கூறவில்லை! மாறாக, சிறுவயதில் இருந்தே கலைநிகழ்வுகளைப் பார்க்கவும், இரசிக்கவும் அவற்றில் பங்கேற்கவும் வாய்ப்புகள். கிடைத்தன. வீட்டில் அத்தகைய சூழல் நிலவியது. எங்கள் வீட்டில் அனேகமான மாலைப்பொழுதுகளை நாடகம், நாட்டுக்கூத்து, வில்லுப்பாட்டு எனப் கலைப் பயிற்சிகளிலேயே செலவழிப்போம்.

எங்கள் கிராமத்தில் 1978ஆம் ஆண்டு மிகப் பிரமாண்டமாக ஆற்றுகை செய்யப்பட்ட சந்தியோகுமையோர் நாடகத்தில் என் தந்தையாரோடு சேர்ந்து குட்டிப்பேயாக நடித்தேன். அப்போது எனக்கு வயது எட்டு! தொடர்ந்து சிறுவர்களுக்கான நாடகங்களில் மாவட்ட, மாகாண பாடசாலைப் போட்டிகளிலும் பொதுவான நிகழ்வுகளிலும் கட்டியனாக, மந்திரியாக, அமைச்சனாக, அரசனாக நடித்திருக்கிறேன்.






**கே.ஆர்.டேவிட் - தமிழர்கள், தங்களின் உரிமைகோரி நடத்திய போராட்ட காலத்தில் குறிப்பாக 1998 - 2002 ஆகிய காலப் பகுதியில் தாங்கள் யாழ்.போதனா வைத்தியசாலை வாளாகத்துள் அமைந்துள்ள கிறிஸ்தவ தேவாலயத்தின் ஆன்ம குருவாகக் கடமையாற்றியுள்ளீர்கள். இக்காலப்பகுதியில் பல சம்பவங்களை நேரடியாகக் காணுகின்ற சந்தர்ப்பங்கள் தங்களுக்கு நிறையக் கிடைத்திருக்கும். தாங்கள் ஒரு சிருஸ்டி கர்த்தா என்ற வகையில் தங்கள் மனதைப் பாதித்த சில சம்பவங்களை விபரிக்க முடியுமா?**

**செ.அன்புராசா -** பல சம்பவங்கள் உண்டாயினும் முக்கியமான ஒருசில சம்பவங்களைக் குறிப்பிடுகிறேன். குறிப்பாக, இராணுவத்திற்கும் புலிப் போராளிகளுக்கும் இடையில் மோதல்கள் நடை பெற்றபோது மோதல்களில் கொல்லப்படுகிற இராணுவத்தினரின் உடலங்களை, யாழ்ப்பாணம் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த காரணத்தினால், இராணுவத்தினர் எடுத்துச் சென்று விடுவார்கள். ஆனால், போராளிகளின் உடலங்கள் வாரக்கணக்கில் உடலங்களைப் பேணும் அறைக்கு வெளியேகூட கறுப்பு பொலித்தீனில் “ரொவி”களை சுற்றிவைப்பது போல சுற்றி, அடுக்கி வைத்திருப்பார்கள். கிழமைக்கணக்கில் வைக்கப்படும் அவ்வுடலங்களில் இருந்து வீசுகின்ற துர்நாற்றம் வைத்தியசாலை வளாகத்தைக் கடந்தும் சென்றது. இவ்வாறான ஒரு சூழலில்தான் வைத்தியசாலையில் நோயாளருக்கான மருத்துவம் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. நாளாந்தம் மோதல்களில் கொல்லப்பட்டவர்களின் பெரும் எண்ணிக்கையிலான உடலங்கள் யாழ்.மருத்துவமனைக்கு வந்துகொண்டிருந்த காலம் அது!

அடுத்து, மருந்துப் பொருள்களுக்கான தட்டுப்பாடு என்று கூறுவதைவிட மருந்துப் பொருட்கள் அரசினால் தன் மக்களுக்கு மறுக்கப்பட்ட ஒரு காலத்தில்தான் நான் பணிசெய்தேன். சாதாரணமாகப் பயன்படுத்துகின்ற மருந்துப் பொருட்களையே யாழ்.போதனா வைத்தியசாலையில் மக்கள் பெற முடியாத காலம் அக்காலம். இத்தனைக்கும் யாழ். போதனா வைத்தியசாலை அரச கட்டுப்பாட்டிலேயே இருந்து வந்தது. இவ்வவலங்களை அப்போது யாழ்ப்பாணத்தில் வெளிவந்த ஒரே ஒரு பத்திரிகையான உதயனில் எழுதிக் கொண்டிருந்தேன். உதயனில் வெளிவந்த என் அனுபவங்களைத் தொகுத்து “காலத்தின் பதிவுகள்”(2002) என்ற நூலாக வெளியிட்டேன்.

மேலும், 2000ஆண்டளவில் யாழ்ப்பாண நகரம் இடம்பெயர்வுக்கு உள்ளானபோது யாழ்.மருத்துவமனையும் இடம்பெயர்ந்து மானிப்பாயில் இயங்கியது. அந்நேரத்தில் யாழ்.மருத்துவமனையில் ஆண்களுக்கு ஒரு விடுதியும், பெண்களுக்கு ஒரு விடுதியுமாக இரண்டு விடுதிகள் மட்டும் அவசர நோயாளருக்காக இயங்கிய காலம் அது! யாழ்ப்பாண நகரம் வெறிச்சோடி மனிதர்களை மருந்துக்கும் காணமுடியாத ஒரு காலம் அது!



இத்தகைய ஒரு காலச் சூழமைவில்தான் நான் யாழ். வைத்தியசாலையில் ஆன்ம குருவாகப் பணியாற்றினேன்.

**கே.ஆர்.டேவிட் - 2008-2010 இடைப்பட்ட காலத்தில் தாங்கள் பிரான்சிலுள்ள லூர்து திருத் தலத்தில் ஆன்மகுருவாகப் பணியாற்றியுள்ளீர் கள். புலம்பெயர்ந்து பிரான்சில் வாழும் தமிழ் மக்களோடு பழுகுகின்ற வாய்ப்புக்கள் தங்களுக்கு நிறையக் கிடைத்திருக்கும். அவர்களின் வாழ்வியல் பற்றிய உங்களின் முக்கிய அவதானிப்புக்களை விளக்குவீர்களா?**

**செ.அன்புராசா-** புலம்பெயர்ந்து வாழும் எம் உறவுகளில் முதல் தலைமுறையினருடைய (இங்கிருந்து 1990 களுக்கு முன் வெளிநாடுகளுக்குச் சென்றவர்களைக் குறிப்பிடுகிறேன்) கடின உழைப்பால் அங்கு வாழும் அவர்களுடைய பிள்ளைகள் அதாவது இரண்டாம் தலைமுறையினர் தங்களின் வாழ்வை சிறப்பாக அமைத்திருக்கிறார்கள் என்றுதான் குறிப்பிடுவேன். தாங்கள் வாழும் நாடுகளில் அந்நாட்டைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு இணையாக - நிகராக - மேலாக வளர்ச்சியடைந்து வருகிறார்கள். அதேபோல் புலம் பெயர்ந்து சென்றவர்களின் உதவிகளால் இங்குள்ளவர் கள் நிறைய உதவிகளைப் பெற்றிருக்கிறார்கள் - பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இது ஒருபுறமிருக்க, புலம்பெயர் மண்ணில் நம்மவர்கள் நிறைந்த நெருக்கீடுகள், மன உளைச்சல் கள், குடும்பப் பிரிவினைகள் மத்தியில் தங்களின் வாழ்வை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள். தங்களின் வாழ்வாதாரத்தை மிகுந்து கஸ்ரங்களுக்கு மத்தியில் தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மையை இங்குள்ளவர்கள் (ஈழத்தவர்கள்) இதுவரையில் உணர்ந்து கொள்ளவில்லை என்பதுதான் என்னுடைய கணிப்பு. காரணம், இங்குள்ளவர்கள், புலம்பெயர் மண்ணில் வாழும் நம்மவர்களிடம் "நிறையப் பணம் இருக்கிறது" என்ற "நினைப்பில்" (தவறான எண்ணத்தில்) இருந்து வருகிறார்கள். அத்துடன் புலம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருப்பவர்களிடம் இங்குள்ளவர்கள் பணத்தை எதிர்பார்த்து வைத்திருக் கிற எதிர்பார்ப்புக்கு அளவே கிடையாது என்பதுதான் என்னுடைய முடிபு.


புலம்பெயர் மண்ணில் வாழுகின்ற நம்மவர் களில் வாழ்வியல் பண்புகளை எடுத்துக்கொண்டால்; பலர் உலகளாவிய சகோதரத்துவம், "யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்", ஈகை, விருந்தோம்பல், அறநெறி வாழ்வு, கடின உழைப்புப் போன்ற நம் பண பாட்டின் விழுமியங்களில் வாழ்ந்து வருவது பாராட்டுக் குரியது. அதேவேளை குறிப்பிடத்தக்க குறைந்தளவு வீதத்தினர் பானை சட்டியை மட்டும் மாற்றியிருக்கிறார் களே தவிர அதே சோறுகறியோடு அங்கும் வாழ்ந்து வரு கிறார்கள் என்பதையும் குறிப்பிட்டே ஆக வேண்டும். அதாவது நம்மூர் தமிழ்ச் சமுகத்திற்கே உரித்தான சீதனம், சாதிய ஏற்றத்தாழ்வு என இங்கு(எம் மண்ணில்) எப்படி இருந்தார்களோ அங்கும் (வெளிநாடு களுக்கு) போய் அப்படியே குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டிக்கொண்டும் இருக்கிறார்கள்!

**கே.ஆர்.டேவிட் - குருத்துவ வாழ்க்கை மிகவும் கட்டுப்பாடானது. இந்த வாழ்க்கையை நீங்களாகவே தெரிவு செய்தீர்களா அல்லது உங்கள் பெற்றோர் தெரிவு செய்தனரா? அந்தத் தெரிவுக்கான காரணங்களை விளக்குங்கள்?**

**செ.அன்புராசா-** உண்மையில் குருத்துவ அழைப்பு ஆண்டவரிடமிருந்து வருகிறது. அவ்வாறு ஆண்டவரிட மிருந்து குருத்துவ அழைப்பு வரினும், அவ்வழைப்புக்கு ஒவ்வொருவருந்தான் பதிலளிக்கவேண்டும். ஆக, என்னுடைய குருத்துவ வாழ்க்கைமுறையை நானாகவே விரும்பித் தெரிவு செய்தேன். அதற்கு, என் பெற்றோர் தங்களது சம்மதத்தைத் தெரிவித்தார்கள். என் தெரிவுக் கான காரணங்கள் சில உண்டு. ஒன்று, நான் வளர்ந்த கிராமியச் சூழல். எங்களுடைய வீட்டிற்கு அருகில் புனித யாகப்பர் ஆலயம் உள்ளது. என்னுடைய அப்பா அம்மா அவர்களின் பெற்றோர் மிகுந்த கடவுள் நம்பிக்கை உடையவர்கள் என்பதோடு ஆலய, சமூகப் பணிகளில் மிகுந்த கருசனையும் ஈடுபாடும் உடையவர்கள். இத்தகைய ஒரு குடும்பப் பின்னணி, முழுமையாக இறைசேவையில் என்னை ஈடுபடுத்துவதற்கு தூண்டியது. இரண்டாவது, எங்கள் ஆலய பங்குத்தந்தையர்கள் மிகுந்த இறைபற்றுடையவர்களாகவும், சமூக அக்கறை யுடையவர்களாகவும் இருந்தார்கள். அதனால், அவ்வாறு நானும் இறைவனுக்கும் அவர் மக்களுக்கும் பணியாற்றவேண்டும் என்ற உந்துதல் எனக்குள் ஏற்பட்டதால் இத்தெரிவினை மேற் கொண்டேன்.

**கே.ஆர்.டேவிட் - ஒவ்வொரு பிரதேசத்திற்கும், அப்பிரதேசம் சார்ந்த பொருளாதார, புவியியல், வரலாற்றுகளின் அடிப்படையில் சில சிறப்பம்சங்கள் காணப்படும். அந்தவகையில் மன்னார் பிரதேசத்துக்குரிய சிறப்பம்சங்கள் பற்றியும் அவற்றிற்கான காரணங்கள் பற்றியும் கூறுங்கள்?**

**செ.அன்புராசா-** மன்னார் மாவட்டத்தின் மாதோட்டப் பிரதேசத்திலேயே வரலாற்றுப் புகழ்மிக்க இந்து ஆலய மான திருக்கேதீஸ்வரம் காணப்படுகிறது. இவ்வா





லயமானது பல நூற்றாண்டு வரலாற்றைக் கொண்டது. அதேபோல மருதமடுத் தேவாலயமும் மிகப் பிரசித்தி பெற்றது. இவ்வாலயங்கள் இரண்டும் வரலாற்றுச் சிறப்புமிக்கதாகத் திகழ்கின்றன. இவ்வாலயங்களுக்கு நாட்டின் அனைத்துப் பாகங்களில் இருந்தும் மக்கள் திருப்பயணங்களை மேற்கொள்கிறார்கள். மேலும், மன்னார் வேதசாட்சிகளின் நிகழ்வும் முக்கியமான ஒரு வரலாறாகத் திகழ்கிறது. இன்னும் கிறிஸ்தவ, இந்து, இஸ்லாமிய மக்கள் (ஒரு காலத்தில் ஒருசில இடங்களில் புத்த மதத்தினரும்) ஒற்றுமையாக மிக நீண்ட காலமாக வாழ்ந்த வாழுகிற பிரதேசமாகவும் திகழ்கிறது. இதுதவிர திருக்கேதீஸ்வரப் பகுதியில் வரலாற்றுச் சிறப்புமிக்க துறைமுகம் ஒன்று இருந்திருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. புவியியல் மாற்றங்களினால் அத்துறைமுகம் காலவோட்டத்தில் இல்லாது போனது.

மன்னார் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் மன்னார் நகரசபையைத் தவிர்ந்த ஏனைய இடங்கள் கிராமிய சூழலையே தங்களின் பின்புலமாகக் கொண்டுள்ளது. அதனால் மக்களிடையே சமூக ஊடாட்டம் அதிகமாக இருக்கிறது என நினைக்கிறேன். மேலும் கிராமியக் கலைகள் குறிப்பாக நாடகங்கள் (இரண்டு இரவுகள் ஆடப்படும் கூத்து), வாசகப்பாக்கள் (ஓர் இரவு), காத்தவராயன் கூத்து(ஓர் இரவு) போன்றவை ஆண்டுதோறும் ஆகக்குறைந்தது மூன்று, நான்கு கிராமங்களிலேயாவது ஆடப்பட்டு வருவதை அவதானிக்கலாம்.

பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் நெல் வயலையும் கடலையும் நம்பி வாழுகின்ற மக்களாயிருக்கிறார்கள். இவையே மக்களுக்குப் பெரும் வருமானத்தை ஈட்டித்தருபவையாக இருந்துவருகிறது. குறிப்பாக நெல் உற்பத்தி செய்யப்படும் காலங்களைத் தவிர்ந்த ஏனைய பெரும் காலப்பகுதியில் மக்கள் ஆங்காங்கே சில வேலைகளில் ஈடுபட்டாலும் அது பெரும் பொருளாதார வளர்ச்சிக்கு அவர்களை இட்டுச் செல்லாத நிலையையே காட்டுகிறது. அதனால் நெல்பயிர் செய்யும் காலங்களைத் தவிர்ந்த ஏனைய காலங்களில் மக்கள் ஈடுபடக்கூடிய வேறு முயற்சிகளை அறிமுகப்படுத்தவேண்டிய அவசியத் தேவை இருக்கிறது. மேலும் மக்களின் நெல், கடலுணவு போன்றவற்றுக்கான பெறுமதி ஒரு நிலையான இடத்தினைக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. அதாவது விவசாயிக்கும் கடல்தொழிலாளிக்கும் அவர்களின் உழைப்பிற்கும் உற்பத்திக்கும் ஏற்ற விலை நிர்ணயம் பொதுவாக இல்லாததால் அவர்களின் உழைப்பு ஒரு வகையில் சுரண்டப்படுகிறதை அவதானிக்கலாம்.





புவியியலைப் பொறுத்தவரையில் வறண்ட பிரதேசம் என்று சொல்லப்படுகிறது. ஆனால், வேலையின் நிமித்தமோ அல்லது வேறு காரணங்களை முன்னிட்டோ வருகிறவர்கள் நாளடைவில் மன்னார் மாதோட்ட மக்களின் விருந்தோம்பல், அவர்களின் இயற்கையோடு இயைந்த வாழ்வு, கிராமிய நாட்டுப்புறக் கலைகள் போன்ற காரணங்களுக்காக மன்னார் பிரதேசத்திலேயே வாழ விரும்புவதையும் நோக்கலாம்.

**கே.ஆர்.டேவிட் -கட்டுரைகள், இறுவட்டுக்கள், ஆய்வுகள் என்ற இலக்கிய வகைகளில் பெருமளவான படைப்புக்களை வெளியீடு செய்துள்ள தாங்கள் இதுவரையில் படைப்பு இலக்கியங்களான சிறுகதை, நாவல் போன்ற துறைகளில் இதுவரை ஈடுபடாமல் போனமைக்கு அடிப்படையில் ஏதோ காரணங்கள் இருக்க வேண்டுமென நான் கருதுகிறேன். எனது கருத்துப்பற்றிய தங்களின் அபிப்பிராயத்தை கூறுவீர்களா?**

**செ.அன்புராசா-**நான் எழுத ஆரம்பித்தபோது கவிதைகளை எழுதினாலும் கட்டுரைகளையே அதிகமாக எழுதி வந்தேன். என்னுடைய கட்டுரைகளைப் படித்து விட்டு பலதரப்பட்ட வாசகர்கள் கூறிய - கூறுகின்ற அபிப்பிராயங்கள், கருத்துக்களில் இருந்து இத்துறையில் தொடர்ந்து ஈடுபடவேண்டும் என்ற தூண்டுதல் - உந்துதல் எனக்குள் பலதடவைகள் ஏற்பட்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக ஏறக்குறைய 10 ஆண்டுகளுக்கு முன் நான் "நான்" உளவியல் சஞ்சிகையில் எழுதிய ஒரு கட்டுரையைப் பற்றி ஒரு வாசகர் சில மாதங்களுக்கு முன் வரிக்குவரி நினைவூட்டினார். அத்துடன் என் கட்டுரைகளை எல்லாத்தரப்பினரும் விரும்பிப் படிக்கிறார்கள். "என் படைப்புக்கள் பலதரப்பட்ட தரத்தினரையும் போய் சேருகிறது"என்ற உள்மனச் செய்தி கட்டுரைகளைப் படைப்பதிலேயே என் கவனமும் நேரம் போய்விடுகிறது.

அடுத்தது, கட்டுரைகளை எழுத ஆரம்பிக்கிற போது அவை எனக்கு லாவகமாக வந்து அமைந்து விடுவதுடன், என் கட்டுரைகளுக்கு மிகுந்த எதிர்பார்ப்பு இருப்பதனால் அவற்றைத் தொடர்ந்து படைப்பதில் ஆர்வமாய் இருந்துவருகிறேன். இன்னும் சிறிய அளவில் கவிதைகளையும் படைத்திருக்கிறேன், அவை நூல்களாக வெளிவரவில்லை. அத்துடன் இக்காலங்களில் இறுவட்டினுடைய பயன்பாடும் அதிகரித்துக் காணப்படுவதால் அதனையும் என் இலக்கியப் பரப்பில் இணைத்துக் கொண்டேன். சிறுகதை நாவல்களைப் படைக்கவேண்டும் என்று இதுவரையில் ஏனோ தெரியவில்லை நான் எண்ணியதில்லை! எதிர்காலத்தில்





முயற்சிக் கலாம் போல் தோன்றுகிறது.

**கே.ஆர்.டேவிட் -புனித வளனார் குருமடத்தின் அதிபராக கடமையாற்றும் தாங்கள் குருத்துவ மாணவர்களை படைப்பிலக்கியத்துறையில் ஈடுபடுத்துவதற்கான ஏதாவது முயற்சிகள் செய்கின்றீர்களா?**

**செ.அன்புராசா** - நிச்சயமாக. இலக்கியத் துறையில் இவர்களுக்கு ஈடுபாடு ஏற்படவேண்டும் என்பதால் அவர்களை இறுவட்டு வெளியீடு, நூல் வெளியீடு, கலைநிகழ்வுகள், நடன நாட்டிய அரங்கேற்றங்கள், நாடக ஆற்றுகைகள், சிறுகதை கவிதைப் பட்டறைகள் போன்றவற்றுக்கு அதிகம் அனுப்புவதுண்டு. காரணம் இந்நிகழ்வுகளில் பலதரப்பட்டவர்களின் உரைகளை அனுபவங்களை கேட்பதன் வழியாக அவர்களுக்கு இலக்கியத்துறையில் பற்றுறுதி ஏற்படும். அத்துடன் பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் கட்டுரைகள் கவிதைகளை அனுப்பும்படி ஊக்குவித்து வருகிறேன். இவற்றுக்கு மேலாக என்னுடைய இலக்கிய ஈடுபாடு எத்தகையது என்பதை அவர்கள் கண்டுகொள்ளக் கூடியதாக இருப்பதால் அது அவர்களுக்குள் இலக்கிய இரசனையும், இலக்கியத்துறையில் ஈடுபாட்டினை ஏற்படுத்தும் என எண்ணுகிறேன்.

**கே.ஆர்.டேவிட் -தமிழ் மக்களின் வாழ்வியல் பிரச்சினைகள் பற்றிக் குரல் எழுப்புவதில் மன்னார் பிரதேச மக்கள் முக்கியமாக கிறிஸ்தவ மக்கள் முன்னணியில் நிற்பதாகப் பொதுவானதொரு அபிப்பிராயமுண்டு. இந்த அபிப்பிராயத்தில் எனக்கும் உடன்பாடுண்டு. தாங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை விளக்குங்கள்?**

**செ.அன்புராசா** - ஏழை மக்களின் குரலாக குல முதல்வர்கள், இறைவாக்கினர்கள் திகழ்ந்தார்கள் என்பதை விவிலியம் எடுத்துக்கூறுகிறது. ஏழைகளுக்காக வழக்காடும் படியாகவும், எளியவர்களுக்கு வாழ்வழிக்கும் படியாகவும் விவிலியம் போதிக்கிறது. நீதியும் உண்மையும் நிலை நாட்டப்படவேண்டும் எனவும், ஏழைமக்கள் சார்பாக இறைவனே நிற்கிறார் என்பதையும் விவிலியம்தாமே தெளிவாக எடுத்துச் சொல்கிறது. ஆக, இப்போதனைகளுக்கு செயல் வடிவம் கொடுக்கவேண்டும் என்பதை உணர்ந்து கொள்கிறபோது மனிதாபிமானம்மிக்க ஒவ்வொருவரதும் உண்மைக்கும், நீதிக்கும் முதலிடம் கொடுப்பார்கள். அவ்வகையில் மன்னார் மக்களில் பெரும்பாலானவர்கள் கத்தோலிக்க மக்களாவர். அவர்கள் விவிலியப் போதனையின் முக்கிய விழுமியங்களான நீதி, சமாதானம், மனிதமாண்பு போன்றவற்றைக் கடைப்பிடிக்கத் தூண்டப்படுகிறார்கள். அத்துடன் இம்மக்களுக்கு தற்போதைய ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு அவர்களின் தலைமைத்துவமும் நேரடியான அவரின் மனிதாபிமான ஈடுபாடும் மக்களுக்கு முன்னுதாரணமாக இருப்பதால் மக்களும் தங்கள் நல்லாயனைப் பின்பற்றுகிறார்கள் என எண்ணுகிறேன்.


**கே.ஆர்.டேவிட் -இதுவரையில் என்னென்ன வெளியீடுகளைச் செய்துள்ளீர்கள் எனக்கூற முடியுமா?**

**செ.அன்புராசா** - நூல்களாக,"மறைப்பணிபுரிந்த மாமேதை" (2001), "காலத்தின் பதிவுகள்"(2002),"சுனாமி சொல்லாத சோகங்கள்"(2005),"நம்பிக்கையின் பாதையில்"(2005), "மன்னார் மாதோட்ட கத்தோலிக்க நாடகங்கள்"(2007), "லூர்து நம்பிக்கை தரும் நகர்" (2009),"திருப்பத்திற்கான தேடல்கள்"(2013), "அதிர்வுகள்"(2014) போன்றவற்றை வெளியிட்டுள்ளேன். இறுவட்டுக்களாக,"அன்புக் காணிக்கை"(2000), "வியாகுலப் பாக்களும் வியாகுலப் பிரசங்கமும்"(2006),"லூர்து விசுவாசத்தின் விளை நிலம்"(2009), "உந்தன் நினைவினிலே" (2012), "என் தேசத் திருப்பாடல்கள்"(2013) போன்றவற்றையும் வெளியிட்டுள்ளேன்.

> இலக்கியங்களை, கலைப்படைப்புக்களை முதலில் இரசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். நல்ல நூல்களைவாங்கி வாசிக்கும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்ளவேண்டும். தொழில்சார் துறை யுடன் வேறு ஏதாவது ஒரு துறையில் ஆற்றலை இனம்கண்டு, பயின்று, படைப்பாளியாக வேண்டும் ஆகக்குறைந்தது படைப்புக் களை இரசிப்பவர்களாக இருக்க வேண்டும்.

**கே.ஆர்.டேவிட் - தற்போதைய இளம் தலைமுறைப் படைப்பாளிகளுக்கு என்ன கூறவிரும்புகிறீர்கள்?**

**செ.அன்புராசா** - இலக்கியங்களை, கலைப்படைப்புக் களை முதலில் இரசிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். நல்ல நூல்களைவாங்கி வாசிக்கும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்ளவேண்டும். தொழில்சார் துறையுடன் வேறு ஏதாவது ஒரு துறையில் ஆற்றலை இனம்கண்டு, பயின்று, படைப்பாளியாக வேண்டும் ஆகக்குறைந்தது படைப்புக்களை இரசிப்பவர்களாக வேண்டும். காரணம், அது ஒவ்வொருவரையும் தங்கள் சொந்த ஆளுமையில் வளரவும், சமூகத்தின் மட்டில் அக்கறை உள்ளவர்களாகவும் மிளிரச் செய்யும் - வாழச் செய்யும். எல்லாரும் முழுநேரமாக இலக்கியப்பணிகளைச் செய்ய முடியாது. உதாரணமாக என் குருத்துவப் பணிகளின் மத்தியில் இயலுமான இலக்கியப்பணிகளை ஆற்றிவருகிறேன். அதேபோல நமக்குக் கிடைக்கின்ற நேரங்களில் இலக்கிய, கலைப் பணிகளுக்காகப் பயன்படுத்தினால் நாம் இருக்கும் நிலையில் இருந்துகொண்டே சமூகத்திற்கு எவ்வளவோ செய்யமுடியும் என நம்புகிறேன். ●



# நினைவுக் குறிப்புகள் - 10

2008 ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஒரு நாள், பலாலி வீதியிலிருந்து திருநெல்வேலி சிவன் அம்மன் வீதியில் திரும்பி, சென்றல் நேசிங் ஹோம் அருகில் சைக்கிளில் சென்றுகொண்டிருக்கையில், ஓர் இளைஞர் “சேர்” என்று கூப்பிட நின்றேன். தன்னை ஆனந்தமயிலின் மகன் என அறிமுகப்படுத்தியவர், தந்தையின் சிறுகதைத் தொகுதியை வெளியிட விரும்புவதாகவும், அது வெளிவர பதிப்பு வேலைகளில் உதவி செய்யும்படியும் கேட்டார். எனது நேரப் பிரச்சினையால் அம்முயற்சியில் ஈடுபடுவது சிரமம் எனத் தெரிவித்தேன். அவரோ, பதிப்பு வேலைகளில் தனக்கு முன் அனுபவம் எதுவும் இல்லையெனவும், அதுபற்றி ஆலோசனைகள் சொன்னால் உதவியாக அமையுமெனவும், அதுபற்றி உரையாட எனது வீட்டுக்கு வரலாமா எனவும் கேட்டார். நான் சரியெனக் கூறி எனது வீட்டுக்கு வரும் விபரத்தையும், எனது தொலைபேசி இலக்கத்தையும் தெரிவித்தேன். இரண்டொரு நாளில் வருவதாகச் சொன்ன அவர் வரவேயில்லை.

இரண்டு மூன்று கிழமைகளின் பின்னர், திடீரென அவர் எனது வீட்டுக்கு வந்தார். கையிலுள்ள கொஞ்சம் அச்சுப் படிகளைத் தந்து, அப்பாவின் சிறுகதைத் தொகுதி வேலை நடக்கின்றது எனவும் சொன்னார். அவற்றை வாங்கிப் பார்த்த எனக்கு அதிர்ச்சி. கொஞ்சக் கதைகளின் அச்சுப் படிகளான அவை ஒழுங்கீனமாக இருந்தன. பொருத்தமற்ற எழுத்துரு பெரிய எழுத்திலும் பாவிக்கப்பட்டிருந்தது. எழுத்துருவும் அமைப்பும், சீராக - ஒத்த விதத்திலும் இருக்கவில்லை; வெவ்வேறு வகைகளில் இருந்தன! நமது அச்சகங்களில் இவ்வாறு நிகழ்வது வழமைதான்; கையெழுத்திலுள்ளவற்றை எப்படியும் அச்சில் தந்தால் சரிதானே என்பதுதான், பெரும்பாலானோரின் முடிவு. அழகியல் உணர்வு என்பதையெல்லாம் அவர்கள் அறிந்திருப்பதுமில்லை; யாரும் சுட்டிக் காட்டும்போது பொருட்படுத்துவதுமில்லை! ஆனந்தமயிலின் ‘திருவிழா’ என்ற



ஆனந்தமயில்

சிறுகதையை 1976 இல் எமது ‘அலை’ இதழில் வெளியிட்டுள்ளோம்; அவரின் வேறு சிறுகதைகள் சிலவற்றையும் படித்துள்ளேன். அவர் சிறந்த எழுத்தாளர் என்ற எண்ணப் பதிவு ஏற்கெனவே என்னுள் உருவாகியிருந்தது. நீண்டகால உடல்நலக் குறைவால் அவர் மன அழுத்தத்துக்கும் உள்ளாகியிருந்த நிலைமை. முதன் முறையாக வரப்போகும் அவரது நூல், இவ்வாறு செம்மையற்றதாக வருவதை என்னால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. எனவே, எனது அவதானத்தில் பட்ட குறைகளை நித்திலவர்ணனிடம் (ஆனந்தமயிலின் மகன்) சொல்லி, நான் பொறுப்பெடுத்து புத்தக வேலைகளைப் பார்க்கிறேன் எனச் சொன்னேன்; அவருக்கு மகிழ்ச்சி.

அடுத்த நாள், காங்கேசன்துறை வீதியிலுள்ள பாரதி பதிப்பகத்தில் சந்தித்தோம்; அச்சகத்தாருக்கு என்னை அறிமுகப்படுத்தி, இனிமேல் இவர்தான் புத்தக வேலைகள் சம்பந்தமாகத் தொடர்புகொள்வார் என்றும் தெரிவித்தார். நான் கணினியில் எழுத்துக்களைப் பதியும் பெண்ணிடம், ஏற்கெனவே தரப்பட்ட அச்சுப் படிகளில் செய்யவேண்டிய திருத்தங்களையும், ஏனைய பக்க அமைப்பு விபரங்களையும் விளக்கினேன். பிறகு அவர்கள் சொன்ன நாள்களில் சென்று அச்சுப் படிகளை எடுத்துவந்து, வீட்டில் வைத்துத் திருத்தங்களைச் செய்து, பிறகு அச்சகத்தில் சேர்ப்பித்தேன். புத்தகத்தின் அட்டையை ரமணியின் ஓவியத்துடன், குரு அச்சகத்தில் நித்திலவர்ணனே அச்சிட்டுக் கொண்டு வந்தார். ஒரு வாறாக ‘ஓர் எழுது வினைஞனின் டயறி’ சிறுகதைத் தொகுதி வேலைகள் முடிவடைந்தன.

அடுத்து, வெளியீட்டுக் கூட்டத்தை ஒழுங்கு செய்வதுபற்றி ஆலோசித்தோம். நித்திலவர்ணன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில், கல்வியியற்றுறையில் விரிவுரையாளராகவும் இருந்தார். பல்கலைக்கழகத்தில் கூட்டம் நடைபெறுவது நல்லதென முடிவெடுத்தோம். விரிவுரையாளர்களான க. அருந்தாகரன், பா. அகிலன் ஆகியோர் மதிப்பீட்டுரை நிகழ்த்துவதெனவும், நான் அறிமுக உரை நிகழ்த்துவதெனவும் முடிவானது. குப்பிழான் ஐ. சண்முகனைக்



குப்பிழான் ஐ. சண்முகன்


கூட்டத்துக்குத் தலைவராகத் தீர்மானித்தோம். அருந்தாகரனின் உதவியுடன், பல்கலைக்கழகத்திலுள்ள சமூகவியல் மன்றத்தின் அனுசரணையுடன், கூட்டம் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டது. கூட்டத்துக்கு சுமார் அறுபது பேர்வரை வந்திருப்பார்கள். நூலின் முதற் பிரதி திருமதி ஆனந்தமயிலுக்கு வழங்கப்பட்டது. பேச்சாளர்கள் முறையாக ஆயத்தம் செய்து வந்து, தத்தம் கோணத்தில் கருத்துக்களை முன்வைத்தனர். ஆனந்தமயிலின் வெளிப்பாட்டுத் திறன் - படைப்பு மொழி ஆற்றல் என்பன எல்லோரின் பேச்சிலும் சுட்டிக்காட்டப்பட்டமை முக்கியமானது. சீன எழுத்தாளர் லூ- சுன் எழுதிய ‘ஒரு பைத்தியக் காரனின் டயறி’ நீள்கதையுடன் ஆனந்தமயிலின் ‘ஓர் எழுதுவினைஞனின் டயறி’ கதையை நான் ஒப்பிட்டு, ஆனந்தமயிலின் கதையில் காணப்படும் தன்வெளிப்பாடையும், தனித்துவமான படைப்பு மொழியையும் பாராட்டியமை நினைவிலுள்ளது. தீவிர வாசிப்பில் ஈடுபட்டுள்ள நண்பர் சிலர், நீண்ட காலத்தின் பின்னர் நிறைவை அளித்த ஓர் இலக்கியக் கூட்டமென்ற கருத்தையும் தெரிவித்தனர். ஈழத்தின் முக்கிய எழுத்தாளர் ஒருவர், அன்று சரியாக அடையாளப் படுத்தப்பட்டார்! கவலை என்னவென்றால், அக்கூட்டத்துக்கு ஆனந்தமயில் வந்திருக்கவில்லை; நித்திலவர்ணன் எவ்வளவோ வற்புறுத்தியும் அவர் சம்மதிக்கவில்லை. அதைவிடவும் இன்னொன்று, புத்தகத்துக்கு நூலாசிரியனின் என்னுரையை அல்லது சிறிய குறிப்பையாவது எழுதித் தரவும் அவர் மறுத்துவிட்டார். சுகவீனமுற்றிருந்த ஒரு மகனை மந்திகை மருத்துவமனையில் பராமரிக்கத் தங்கிய வேளை, 1995 இல் ஒரு நாள், கட்டிலிலிருந்து தவறி விழுந்தபோது முள்ளந்தண்டில் அடிபட்டு, பன்னிரண்டு ஆண்டுகளாக இடுப்புக்குக் கீழ் இயக்கமில்லா நிலையில் - சக்கர நாற்காலியில் நடமாடிய அவர், தனது புத்தகம் வெளிவர வேண்டுமென முன்னர் ஆர்வங் கொண்டிருந்தும், இறுதி நாள்களில், புரிந்துகொள்ளவியலாத மனநிலை வேறுபாடு கொண்டிருந்தார்; அதனால் பிடிவாதமாக ஒதுங்கிவிட்டார். நித்திலவர்ணனுக்கும் எனக்கும் அது ஏமாற்றம் தான்.

அடுத்து, புத்தக விநியோகத்தில் கவனம் காட்டினோம். முக்கியமான எழுத்தாளரிடமும், பத்திரிகைகள் சிற்றேடுகளுக்கும் அது சென்றுசேருமாறு திட்டமிட்டுச் செயற்பட்டோம். அதன்காரணமாக பல அச்சு ஊடகங்களில் நூல் பற்றிய மதிப்பீடுகள் வெளிவந்தன; காலச்சுவடு போன்ற தமிழக இதழிலும் மதிப்பீட்டுக் கட்டுரை வந்தது. 2011 இல், கன்னியாகுமரியில் நடைபெற்ற ‘சு.ரா. 80’ கருத்தரங்குக்கும், 2014 இல் சென்னை புத்தகத் திருவிழாவுக்கும் நான் சென்றேன். அவ்வேளை அங்கு சந்திக்கும் தமிழக எழுத்தாளருக்கும் சிற்றிதழ்க்காரருக்கும் புத்தகப் பிரதிகளைச் சேர்ப்பிப்பது நல்லது என்ற எனது கருத்தைக் கூறியதில், தன்னிடமுள்ள பிரதிகள் பலவற்றை நித்திலவர்ணன் என்னிடம் தந்திருந்தார். அவற்றைப் பொருத்தமான முறையில் பகிர்ந்து கொடுத்தேன். ஈழத்தவர் பெருமைப்படக்கூடிய ஓர் எழுத்தாளர், தமிழகத்திலும் அறியப்படவேண்டும் என்பதே எனது நோக்கமாயிருந்தது!

**

1976 இல், சுண்டிக்குளி அஞ்சலகத்தில் நான் கடமை பார்த்தேன். அவ்வேளை, முத்திரைச் சந்திக்குப் பக்கத்திலுள்ள யாழ்ப்பாணக் கல்விக் கந்தோரில், நண்பர் குப்பிழான் ஐ. சண்முகன் பணியாற்றினார்; அங்குதான் ஆனந்தமயிலும் பணியாற்றினார். சண்முகன் மூலமாகவே ஆனந்தமயிலின் ‘திருவிழா’ சிறுகதை ‘அலை’க்குக் கிடைத்தது; சண்முகனும் அலை ஆசிரியர் குழுவில் ஒருவர். 1972 சித்திரையில் எழுதப்பட்ட அக்கதை, ஆசிரியர் குழுவிலுள்ள நால்வருக்கும் பிடித்துக்கொண்டது; அலையின் ஐந்தாவது இதழில் (ஆடி - ஆவணி 1976) அது பிரசுரமான பின்னர், வேறு பலரும் பாராட்டினர். ஊர்க் கோவில் திருவிழாச் சூழலில், பகுத்தறிவும் சமூக அக்கறையும் பொதுவுடைமை நாட்டமுங் கொண்ட அத்தானைப் பற்றி - அவனது மச்சாளின் நோக்கில், பேச்சுவழக்கில் கதை சொல்லப்படுகிறது. பிசிறில்லாமல் இயல்பானதாக ஆசிரியரின் நோக்கம் பரிமாறப்படுகிறது. பிரச்சாரப் படைப்புகள் மேலோங்கியிருந்த அக்கால முற்போக்குப் படைப்புச் சூழலில், வித்தியாசமாய் கலைத்துவத்துடன் அமைந்த ஒரு சிறிய கதை அது.

‘ஓர் எழுதுவினைஞனின் டயறி’ தொகுப்பில் பன்னிரண்டு சிறுகதைகள் உள்ளன. அனுபவ வெளிப்பாடு எழுத்தாளனின் தனித்துவமான படைப்பு மொழியில் அமைந்துள்ளதை, எல்லாக் கதைகளிலும் காணலாம். கதைகள் எம்மை வசீகரிப்பதில் அவரது மொழிக்கு முக்கிய இடமுண்டு. இரண்டு வெவ்வேறு கதைகளில் என்னைக் கவர்ந்த சில பகுதிகளைத் தருகிறேன்:




“முருகைகக் கற்களுக்கு வெளியே உள்ளவற்றை ஊடுருவிப் பார்த்தார்கள். அங்கே புதிய உலகம் தெரிந்தது.

அழகிய வாழ்வு கிடைத்தது. கடல் தாலாட்டியது. அவர்கள் குதித்து நீந்தவும் சுழியோடவும் முடிந்தது.

எவ்வளவு அழகான குகைகள், சோடனைகள், அவற்றை அலங்கரித்து வைத்திருக்கும் கடல்தாய் எவ்வளவு அற்புதமானவள். மஞ்சள் குருத்துப் பச்சையாய், ஊதாவாய் முருகைக் கற்பூக்கள் மலர்ந் திருந்தன. கற்பார்கள் பவளம் போலத் தோன்றின. வர்ணந் தீட்டிய மீன்கள் வகைவகையாக நீந்தித் திரிந்தன. சூரியக் கதிர்கள் நீரினூடாக சித்திரந் தீட்டப் பட்ட கற்பூக்களைத் தொட்டு நின்றன. நீலநீரில் வெள்ளிக் கீற்றுக்கள் தெறித்து ஒளிர்ந்தன. கடற் பூக்களும் பாசிகளும் அவற்றை மெருகேற்றின." (பக். 8)

"கடற்கரை சந்தோஷத்தில் பூரித்தது. கிளித்தட்டுக்கள் விளையாடினர். அம்மன் கோவிலுக்கு அலங்காரத் திருவிழாச் செய்தனர். கரகம் எடுத்தனர். கூத்தும் நாடகமும் போட்டனர். பந்து விளையாடினர். கயிறு இழுத்தனர். பட்டங்கள் கட்டிப் பறக்க விட்டனர். கொக்கும் பிராந்தும் பட்டமாய்ப் பறந்தன. கட்டுக் கொடிகள் ஆடியாடி விண் கூவின. படலங்களில் மின்குமிழ்கள் பொருத்தி வானத்தில் ஒளிஉமிழ விட்டனர். முருகைக் கற்பார்களில் கொடிகள் கட்டி நீச்சற்போட்டி வைத்தனர். மீன்பாடு குறையும்போது தந்தையாருடன் சேர்ந்து, இரவில் கடற்தெய்வத்திற்கு படையல் படைத்து, கூறைப்பாய் இழுத்து சிறு கட்டுமரத்தில் அதனை வைத்து, சமுத்திரத்தில் ஓடிச்சேர விட்டனர். அதில் ஏற்றிய பந்தம் போகும் தூரத்தைக் காட்டி நின்றது.


இப்போதோ தொழில் உயிரிழந்து விட்டது. இடம்பெயர்ந்து அகதிகளானவர்களுடன், வாழ் கின்றனர். கடல் சாந்தமாக இருந்தாலும் உவட்டாக இருந்தாலும் கரை துன்பமாகவே இருக்கின்றது. வெறுமை கனக்கிறது. கரையெங்கும் சிதைந்த வீடுகளும் உடைந்த கலங்களுமே கிடக்கின்றன. தொழிலின் சந்தடி குறைந்துள்ளது. மீன்கண்ணி பாட வில்லை. ஆகாயத்தில் மழைக்கண்ணிகூடக் குறைவாக உள்ளன. சிலர் சமுத்திரத்தில் ஏதோ ஒன்றை இலக்கற்று உற்றுப் பார்க்கிறார்கள். எங்கும் அகதிமை தெரிகிறது." (பக். 10 – 11)

– முருகைக் கற்பூக்கள் – 30.9.1993

"அறையில் குப்பைகூளங்கள் அதிகரித் திருக்கின்றன. சிரிக்கும் குழந்தையின் படத்திலிருந்து – புத்தக அலுமாரிவரை, வலைபின்னிய சிலந்தி காத்துக்கிடக்கிறது.

அவர்களை இந்த மாலையில் யாரோ வரவேற்றிருக்க வேண்டும். அவளின் மனச்சிறையில் வரவேற்பவன் நானிருக்க எப்படி அவள் வேறொருவர் வரவேற்பில் சுகித்திருக்க முடியும். சிறிய காலடி ஓசைகள் அண்மித்து வருகின்றன – எனது அறையை நோக்கித்தான் – அவள் வந்து நின்றாள்.

அவளுக்கு என்ன நடந்துவிட்டது. முகத்தை உயர்த்தி என் கண்களுக்கூடாக எதனைப் பார்த்தாள். என் இதயத்தையா... என் அன்பே உன் இதயத்தை என்னால் தெளிவாகப் பார்க்க முடிகிறது. அங்கே ஒரு நேரான பாதை என்னை நோக்கித்தான் இருக்கிறது. ஆனால் உனக்கு... எவ்வாறு எனது இதயத்தெருவின்



நித்திலவர்ணன்

முறிவுகளைப் பார்க்க முடியும்.... அது எங்குபோய் முடிகிறதோ... அந்தத்தெருவில் சகோதரப் பாறைகள் உயர்ந்து கிடக்கின்றன. அம்மாக் கிழவி பாறிய மரமாக விழுந்து கிடக்கிறாள்." (பக். 26)

– ஓர் எழுதுவினைஞனின் டயறி – 1976

**

அலுவலகத்தில் பின்னேரம் நான்கு மணிக்கு எனது வேலை முடியும் சில நாள்களில், சண்முகனுக்குத் தொலைபேசியில் அறிவித்துவிட்டு, முத்திரைச் சந்திக்குச் செல்வேன்; அங்குதான் அவர் கரணவாய் செல்வதற்கு பருத்தித்துறைப் பேருந்திற்காகக் காத்து நிற்பார். சில வேளைகளில் ஆனந்தமயிலும் அவருடன் நிற்பார். இலக்கியம், அரசியல், வேறு விடயங்கள் எனப் பலவற்றை பற்றியும் உரையாடுவோம். பேருந்துகள் பலவற்றைப் போகவிட்டு, ஒரு மணித்தியாலம் வரைகூட உரையாடல் நடைபெறும். அரசியல் கதைக்கையில் ஆனந்தமயிலுடன் முரண்பட நேரும். அவர் சண்முக தாசனின் கொம்யூனிஸ்ற் கட்சி அனுதாபியாக இருந்தார். சண்முகதாசனில் எனக்கும் ஈடுபாடிருந்தாலும் (அவரது கட்சிப் பத்திரிகையான 'தொழிலாளி'யை, எனது கொழும்புக் காலத்திலிருந்து ஒழுங்காக வாங்கிப் படித்துச் சேமித்தும் வைத்திருந்தேன். 1971 இன் நெருக்கடிச் சூழலில், பாதுகாப்புக் கருதித் தனது தொழிலாளிப் பத்திரிகைகள் அனைத்தையும் எரித்து விட்டதால் தற்போது ஒன்றுமேயில்லை எனப் பின்னாள்களில் ஒரு நாள், இயக்கச்சி மணியம் கவலையுடன் சொன்னார்; கொம்யூனிஸ்ற் கட்சிக் காரரான அவரிடம் இருப்பதே பொருத்த மானது என உணர்ந்த தில், எனது சேகரிப்பு முழுவதையும் அவருக்கே கொடுத்து விட்டேன்.), அவரது கட்சி, ஸ்ராலினின் தேசிய இன வரையறையைக் குறிப் பிட்டு – பொதுப் பொரு ளாதாரம் இல்லையென – தமிழ் மக்களைத் தேசிய இனமாக



ஏற்றுக்கொள்ளாதது எனக்கு உடன்பாடானதாக இருக்கவில்லை (ஒரு தேசிய இனத்துக்கு வெவ்வேறு விளக்கங்களை வெவ்வேறு மார்க்சியவாதிகள் கூறியிருப்பதை ஆராயும் மைக்கல் லோவியின் கட்டுரையொன்றை, "நியூ லெவ்ற் றிவியூ" இதழில் தான் படித்ததாகவும், அது சுவாரசியமான கட்டுரை என்றும், ஒருமுறை கதைக்கும்போது ஏ. ஜே. கனகரத்தினா என்னிடம் சொன்னார்; இன்றையச் சூழலில் எமக்கு மிகப் பொருத்தமானதென்பதால் அதனை மொழி யாக்கம் செய்வது நல்லதென, ஏ.ஜேயிடம் கூறினேன். மார்க்சியவாதிகளும் தேசிய இனப்பிரச்சினையும்" என்னும் தலைப்பிலான அவரது மொழியாக்கத்தை அலை 10, 11, 12 ஆவது இதழ்களில் வெளியிட்டதோடு, அதனைச் சிறு நூலாக்கி, 300 பிரதிகளை இரண்டு ரூபா வீதம் விற்பனை செய்தோம்.). தமிழ் மக்களுக்கெதிரான 1977 'இன வன்முறை'யின் பின் வெளியான 'அலை' பத்தாவது இதழில், 'தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி! பாதுகாப்பை வழங்கு!' என்னும் தலைப்பில் தலையங்கம் எழுதியிருந்தோம். அதில் ஓரிடத்தில், "... பாராளுமன்ற மாயையுள் மூழ்கியுள்ளவர்களின் இத்தகைய கபடநாடகம் எமக்கு ஆச்சரிய மூட்ட வில்லை. ஆனால் புரட்சியை முன்னிறுத்துகின்ற இடது சாரிக் கட்சியொன்று கலவரத்திற்கான முழுப் பொறுப்பையும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர்மீதும் - அதன்மூலம் தமிழர்கள்மீதும் சுமத்திவிட்டு, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய நடைமுறைகளில் சிறிதும் ஈடுபடாம லிருப்பது ஏமாற்றத்தை அளிக்கிறது. இந்நிலையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினதும், மக்கள் விடுதலை முன்னணியினதும் (ஜே.வி.பி.) அறிக்கைகள் ஓரளவிற்கு நம்பிக்கை தருவனவா யுள்ளன." என்னும் வரிகள் உள்ளன. முதலில் குறிப்பிடப்படுவது சண்முகதாசனின் கட்சியைத்தான்; அப்போது அவர்கள் வெளியிட்ட அறிக்கை பற்றிய விமர்சனமே அது. இது ஆனந்தமயிலுக்குக் கோபத்தை எழுப்பியது. ஜே.வி.பியை எப்படி அங்கீகரிக்கலாம் என்றும் கேள்வி எழுப்பினார். மலையகத் தமிழ்த் தொழிலாளரை "இந்திய விஸ்தரிப்புவாதத்தின் ஒரு கருவி"யாக அவர்கள் சித்திரித்தது போன்றவை யெல்லாம் தவறானவை; இங்கு அவர்களின் குறிப்பான ஓர் அறிக்கையுடனான உடன்பாட்டையே 'அலை'யின் தலையங்கம் தெரிவிக்கின்றது என, அவருக்குப் பதில் சொன்னேன். வரலாற்றின் முரண்நகை என்ன வென்றால், பின்னாள்களில் அனுராதபுரத்தில் கடமை புரிந்தபோது, ஜே.வி.பியினருடன் தொடர்பு ஏற்பட்டு, அவர்களின் ஆதரவாளராக ஆனந்தமயில் மாறினார். ஆயினும், தான் சரியென உணருவதனுடன் சார்புநிலை கொண்டு தன்னை அடையாளப்படுத்தும் நேர்மைப் பண்பு அவரிடம் எப்போதும் இருந்தது என்பதை, இங்கும் தெளிவாக உணரலாம். 1980 இல் நடைபெற்ற பொது வேலைநிறுத்தத்தில் பங்கேற்றதில், வேலை யிழந்த பல்லாயிரக் கணக்கானோரில், ஆனந்தமயிலும் ஒருவர். பின்னாளில் அவருக்கு வேலை திரும்பக் கிடைத்தது. வேலையிழந்த காலத்தில் சுமார் ஒரு வருடம் வரை, கடற்றொழிலுக்குப் போனார்; அக்கால அனுபவங்கள் அவரது எழுத்துக்களிலும் வெளிப்படு கின்றன. கடலும் கடற்புரமும் கடற்கரை மனிதரும் இவரது எழுத்துக்களில் கலா வெளிப்பாடு கண்டது போல், வேறு யாரிடமும் ஈழத்தில் வெளிப்பட்டுள்ளனவா என்பதும் கவனத்துக்குரியது.

**

ஆனந்தமயிலின் புதல்வர்களான தீபவர்ணன் (முன்னாள் போராளி; தற்போது அவுஸ்திரேலியாவில்), நித்திலவர்ணன், முல்லைத் திவ்யன் ஆகியோரும் கவிதைகளையும் சிறுகதைகளையும் எழுதுகின்றனர். முல்லைத்திவ்யனின் நான்கு கவிதைத் தொகுப்புகளும், நித்திலவர்ணனின் கவிதைகளும் சிறுகதைகளும் கொண்ட ஒரு தொகுப்பும் இதுவரை வெளியாகியுள்ளன.

வடமராட்சி கல்விப் பணிமனையில் எழுது வினைஞராகப் பணியாற்றிய ஆனந்தமயிலின் சீரற்ற உடல்நிலை கருதி, அவர் வாழ்ந்த கரவெட்டியிலுள்ள கோட்டக் கல்விப் பணிமனைக்கு இடமாற்றம் கொடுத்தனர். 2004 இல் தனது சேவையிலிருந்து அவர் ஓய்வுபெற்றார். இறப்பதற்குச் சில ஆண்டுகளின் முன்னர், குப்பிழான் சண்முகனின் கரணவாய் வீட்டுக்குச் சென்று, அவரும் நானும் சைக்கிள்களில் கரவெட்டியிலுள்ள ஆனந்தமயிலின் வீடு சென்று சந்தித்தோம். அப்போது அவர் ஆர்வமாகக் கதைத்தார். தனது கவிதைகளை எழுதிவைத்துள்ள குறிப்புப் புத்தகத்தைக் காட்டி, பனை தொடர்பான கவிதை யொன்றையும் வாசித்துக் காட்டினார்; அக்கவிதை நன்றாக இருந்த உணர்வு. கவிதைகளைத் தொகுப்பாக வெளிக்கொணர்வதில் அவருக்கு ஆர்வம் இருந்தது. ஒரு கட்டத்தில், பழைய சம்பவமொன்றையும் மெல்லிய சிரிப்புடன் நினைவுகூர்ந்தார்! அவரது 'முருகைக் கற்பூக்கள்' சிறுகதை, யாழ் இலக்கிய வட்டம் தனது வெள்ளிவிழா ஆண்டை முன்னிட்டு நடத்திய சிறுகதைப் போட்டியில், இரண்டாம் பரிசைப் பெற்றது. பரிசளிப்பின்போது அவரை "ஆனந்தமயில் என்ற இளம் எழுத்தாளர்" எனச் செங்கை ஆழியான் குறிப்பிட்டாராம்! பிறகு அவரிடம், "நான் ஏற்கெனவே 'மல்லிகை'யிலும் 'அலை'யிலும் சிறுகதைகளை எழுதியுள்ளேன்!" என இவர் தெரிவித்தாராம்! அரசியல் கதையாடலில் கேலிக் குறிப்புகள் வழமைபோல் அன்றும் வெளிப்பட்டமை மங்கலாக நினைவிலுள்ளது; வேண்டுமென்றே நான் சர்ச்சையைத் தவிர்த்தேன்.

ஆனந்தமயில், கரவெட்டியைச் சேர்ந்தவரான பேராசிரியர் கா. சிவத்தம்பியின் உறவினருங்கூட! தனது சிறுகதைத் தொகுப்பின் சமர்ப்பணத்தில்,

"பிறந்த ஊர்,
கரவெட்டிக்கும்
வளர்ந்த ஊர்,
பொலிகண்டிக்கும்...."

என்று குறிப்பிட்டிருக்கிறார்!

*08.11.1947 இல் பிறந்த ஆனந்தமயில்*
*11.03.2012 இல் காலம் ஆனார்!*

*–22.05.2015*

***

கிண்ணியா சபருள்ளா

# ஜனநாயகத்தின் கடைசி நம்பிக்கை

ரொம்பவும் பசித்தது. யாரிடம் சொல்ல முடியும் சொன்னால் மட்டும் திண்ண உண்ண எதுவும் கிடைக்காது என்பது ஒரு புறமிருக்க பசியெடுத்தாலும் திண்ண ஏதாவது கொடுங்கள் என்று அங்கு யாரிட மாவது சொல்ல நினைத்தாலும் பயம்... பயம்...அடுத்தவனை பலம் பெற வைக்கும் பயம்... அடுத்த வனை வாழ வைத்துக் கொண்டி ருக்கும் பயம்...ஒருத்தனின் பயம்... இன்னொருத்தனின் பலம்... இன்னொருத்தனின் வளம்... இன்னொருத்தனின் நலம்... இன்னொருத்தனின் வருமான மூலம்...விளிம்பு நிலை மக்களின் பயம்தான் ஏய்த்துப் பிழைக்கும் கூட்டத்தின் வியாபாரமாகி விடுகின்றது.

இன்று மூன்றாவது நாள் உறக்கமில்லாத இரண்டு இரவுகளின் அவஸ்தை பரீதின் கண்களில் தெரிந்தது. கண்களின் கீழே கருவளையம் உறக்கமில்லாத அவஸ்தைகள் பற்றிய ஆவணப்படம் செய்திருந்தது. ரொம்பவும் சோர்ந்து போயிருந்தான். அவன் மட்டுமில்லை. அவனோடு சேர்ந்து இன்னும் ஒரு ஏழெட்டுப்பேர். எல்லோரும் சோர்ந்து போயிருந்தார்கள் என்பதனை அவர்களது முகங்களினைப் பார்த்தால் புரிந்து கொள்ளலாம்.

எல்லோரும் என்னை மாதிரித்தானா? பரக்ஷீது எதுவும் பேசவில்லை. அவனாக விரும்பினாலும் அதிகமாக அங்கு பேச முடியாது. அடுத்தவர்கள் யார்... யார்... மஜீது... அனீபா... புஹாரி... அப்புறம் நான்கு வெடலைப் பொடியன்கள்... ஆனாலும் ஒருவருக்கொருவர் அறிமுகமாக கூடிய சூழல் அங்கிருக்க வில்லை என்பதனை விட அப்படிப் பட்டதோர் ஆர்வம் இருப்பது வெகு அபூர்வம் அந்த இடத்தில்.

எல்லோரும் அங்கு போடப் பட்டிருந்த நீள்வாங்கில் உட்கார்த்தி



உறக்கமில்லாத இரண்டு இரவுகளின் அவஸ்தை பரீதின் கண்களில் தெரிந்தது. கண்களின் கீழே கருவளையம் உறக்கமில்லாத அவஸ்தைகள் பற்றிய ஆவணப்படம் செய்திருந்தது. ரொம்பவும் சோர்ந்து போயிருந்தான்.

வைக்கப்பட்டிருந்தார்கள்... ஆளாளுக்கு புன்னகையைப் பரிமாறிக் கொண்ட தோடு சரி...அவர்களது புன்னகையில் விரக்தியின் வர்ண ஜாலம்.

அந்த விடலைப் பொடியன்கள் யாரென்று தெரியாவிட்டாலும் பரீது அவர்களைப் பார்த்து புன்னகைத்துக் கொண்டான். ஒருநாள் சிநேகம்.... இன்றோடு முடிந்து விடப்போகின்ற ஒருநாள் நட்பு... நட்பு என்பதனை விடவும் பார்வையால் தெரிந்து கொண்டதற்கான அடையாளமாக பரிமாறப்பட்ட புன்னகைகள். இன்று ஓரிரு மணித்தியாலயத்தில் காணாமற் போய்விடும். அப்புறம் நீ யாரோ நான் யாரோ என்கிற போக்கில் இனி பெரும்பாலும் அங்கிருப்பவர்கள் சிநேகத்தோடு சந்தித்துக் கொள்ளப் போவதில்லை.

வான் எலப் பொலிஸ் நிலையம்.

வான் எல மற்றும் அதனைச் சுற்றியுள்ள சலப்பயாறு, கிரான், கல்லடிவெட்டுவான், கற்குழி, குரங்குபாஞ்சான் போன்ற பிரதேசங்களைப் பொறுத்த வரை வான் எல பொலிஸ் நிலையம் காவல் நிலையம் என்பதனை விடவும் ஒரு பேய்வீடாக இப்போ தெல்லாம் போய்விட்டது. அன்றாடக் கூலிகளும் அன்றாடக் காய்ச்சிகளும், தினத்தொழில்களை நம்பி வயிற்றுப் பிழைப்பு நடாத்துபவர்களும் வானம் பார்த்து வாழ்க்கையை நடாத்துபவர்களும், விறகு களை எரியவிட்டு வயிற்றுப்பசியை தணிப்பவர்களும் மட்டும் வாழ்கின்ற அந்தக் கரிசக்காட்டு பூமியில்.

அந்த பொலிஸ் நிலையம்

ஒரு அசுரனாகக் காட்சி தந்து கொண்டிருந்தது. அவர்கள் அப்பாவிகள்... எதிர்த்துப் பேசத் தெரியாத விளிம்பு நிலை மக்களைப் போட்டு மிதிக்கின்ற பூட்சுகளின் சொந்தக்காரர்கள் அந்தப் பிரதேசத்தில் ஆடுகின்ற கதகளி... அராஜகத்தின் உச்சம்... அதிகார இயந்திரத்தின் வெறித்தனமான சப்தம் அவர்களைப் பொறுத்த வரை ஒலிக்காத நாளில்லை...அதற்குப் பயந்து அவர்கள் தங்களை ஒளிக்காத நாளில்லை.

என்ன நடந்தாலும் கேட்பார் நாதியற்றுப் போன இந்தக் கரிசக்காட்டு மண்ணுக்குரியவர்கள் வாக்களித்து அரியாசனத்தில் வைத்து அழகுபடுத்து கின்ற பொம்மைத் தலைவர்கள் பொம்மலாட்டம் மாத்திரமே போட முடிகின்றபோது என்ன செய்தாலும் எதிர்க்கேள்வி எழப்போவதில்லை என்று நன்கு தெரிந்துகொண்ட அந்த பொலிஸ் நிலையத்து காக்கிச்சட்டைகளின் சட்டரீதியான சர்வாதிகாரம் இப்போதெல்லாம் கடந்துவிட்டது.

அப்படித்தான் பரீதும்

அடித்தட்டு மக்களின் ஆரம்பகாலத்து அங்கத்துவன்.... விளிம்பு நிலையத்தில் இவன் போன்றவர்கள்தான் இன்றுவரை விளம்பரத்துக்காக பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். வயிற்றுப் பிழைப்பு மாத்திரமே வாழ்க்கையின் போராட்டமாக வும் இலட்சியமாகவும் மாறிப் போய்விட காலத்தின் கொடுமைக்கு பலியானவர்கள் பட்டியலில் அவன் பெயரும் உண்டு. சோற்றுப் பருக்கைகளுக்கான யுத்தத்தில் இவர்கள் நிராயுதபாணிகள்.

யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பது கூட தெரியாமல் விளித்துக்கொண்டு நிற்கும் போது தேர்தல் காலத்தில் மட்டுமே வீடு வந்துவிட்டுப் போகும் மகா தலைவனின் அல்லக்கைகளின்“காலகாலமாக இவரது பரம்பரைக்கே நாம் வாக்களித்துக் கொண்டிருக்கிறோம். பரம்பரையாக இதுதான் நமது கட்சி.... பரம்பரையாக இவர்கள்தான் நம் தலைவர்கள் என்கிற மூளைச் சலவைக்குள்ளாகி

“நீ நல்லா இருப்பே... தலைவா”

“நீ எப்பவும் சந்தோஷமா இருக்கனும் ராசா... நீதான் தலைவனா இருக்கனும்”

“இந்த மண்ணின் தலை மகன் வாழ்க... விவசாயிகளின் நண்பன் வளர்க... ஏழைகளின் தோழன் என்றென்றும் வாழ்க...”

என்கிற கோஷங்களுடன் அப்பாவித் தனங்களின் உச்சக் கட்டத்தில் அரசியல் தலைமைத்துவத்தினை தெரிவு செய்கின்ற ஆயிரமாயிரம் புள்ளடிக்காரர்களுக்கு மத்தியில் இவனும் ஒரு நவீன உலகின் ஜனநாயக அடையாளம்.

பாவம் பரீது. தனக்குத் தெரிந்த ஒரே தொழில் விறகு வெட்டுவது... பொண்டாட்டி பிள்ளைகள் என்று ஐந்தாறு ஜீவன்கள் தனது உழைப்பினை நம்பி உள்ளதே... எப்படியாவது அவர்களை வாழ வைக்க வேண்டிய கட்டாயப் பொறுப்பு இவன் மீது எழுதப் படாத விதி.

உழைத்தே ஆக வேண்டும்

ஒரு நேர சாப்பாட்டுக்காவது இரத்தம் சிந்த வேண்டிய வறுமையின் கொடூரம் உலகப் பணக்காரர் களின் வீட்டில் அல்சேஷன் நாய்களுக்காக வைக்கப் படும் தங்கத்தட்டுக்களில் மினுங்கிக் கொண்டிருக் கின்றது. டொப் டென் பணக்காரர்களின் தர வரிசைப்படுத்தலில் மூக்கில் விரல் வைத்துக் கொண்டு பட்டி மன்றம் நடாத்தும் உலகத்தின் குருட்டுக் கண்களில் இந்த மாதிரியானவர்களுக்கு உருவம் கிடையாது. பரீது டொப் டென் ஏழை வர்க்கங்களின் பட்டியலில் எத்தனையாவது...?

இருக்கின்ற புராதன காலத்து லுமாலா ப்ரான்ட் சைக்கிளை தள்ளிக்கொண்டு போய் மிகுந்த பொலிஸ் அச்சத்துடன் விறகுகள் சேகரித்து சேகரித்து உள்ளங்கையிரண்டும் நல்லாக் காய்ச்சுப் போயிருந்தது. கோடைகாலத்து வியர்வை மழையில் தெப்பலாய் நனைந்து மலைப்பாதையில் மூச்சிறைக்க விறகுகள் கட்டப்பட்ட சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வருகையில் எங்கிருந்து வந்தார்கள் இந்த காக்கிகள்

வான் எலப் பொலிஸாம்.

பொலிஸில் மாட்டிக் கொண்டான்... செய்யாத குற்றத்துக்காகவெல்லாம் நாள்தோறும் தொடர்சங்கிலி யாய் நீண்டு கொண்டிருக்கும் அன்றாடக் கைதுகளில் பரீதின் பெயரும் இணைக்கப்பட்டு பொலிஸ்

நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டான்.

அங்கு வந்த பிறகுதான் தெரிந்தது அவனைப் போல விறகு வெட்ட வந்து பொலிசில் மாட்டுப் பட்டுக்கொண்ட பல விளிம்புநிலை அங்கத்தவர்கள் இரத்தம் வற்றிய முகங்களோடு இந்தா மழை வரலாம் என்கிற தோரணையில் இருள் முற்றிய முகங்களோடு சுருண்டு போய்க்கிடந்தார்கள்..

முந்தா நாள் கைது செய்யப்பட்டு பொலிஸ் ஷெல்லில் போடப்பட்டான். இன்று காலை பத்து மணிக்குத்தான் கொண்டு போகப் போகிறார்களாம்.

கோர்ட்டுக்கு மூன்று நாட்களுக்குள் கைதாகி சேர்க்கப்பட்டவர்களை ஒன்றாக்கி இன்று கோர்ட்டுக்கு கொண்டு செல்லப் போகிறார்கள் பரீது மட்டுமில்லை... நிறையப் பேர் கடந்த நான்கைந்து வருடங்களாக வான் எல பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்கிறார்கள். பெரும்பாலும் செய்யாத குற்றத்துக்காக கைது செய்யப்பட்டு பொலிசின் அடி உதைக்கு ஆளாகி...

கடந்த வாரம் வயலில் படுத்துக் கிடந்த புதுக் குடியிருப்பு நஸாரை மரம் வெட்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு இன்னமும் கந்தளாய் நீதிமன்றில் வழக்கு போய்க் கொண்டிருக்கிறது அவர் தனக்கெதி ராக கொண்டு வரப்பட்ட குற்றச்சாட்டுப்பத்திரத்துக்கு சுற்றவாளி என்று சொன்னதால் வக்கீல் வைத்து காசு செலவழித்து பொலிசுக்கெதிராக அந்த அபாண்ட மான குற்றச்சாட்டுக்கெதிராக இன்னமும் வழக்காடிக் கொண்டிருக்கிறார்.

அது தவிர ராபி சேரின் கதை அதை விடப் பயங்கரம்...பயங்கரம் என்பதனை விடவும் மிக்க துயரமிக்கது...தனது பெரியப்பாவுக்கு குரங்கு பாஞ்சானில் ஒரு ரெண்டரை ஏக்கர் காணி உள்ளது. பேர்மிட் காணி...ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தைந்தாம் ஆண்டே பேர்மிட் கொடுக்கப் பட்டிருந்தது...யுத்த காலத்தில் செய்கை பண்ணாமல் கை விடப்பட்டிருந்த காணி பற்றை பிடித்து காடாகி... எப்படியும் மீண்டும் டோசர் போட்டு காணியை சுத்தம் செஞ்சால்தான் என்னமாவது பண்ணலாம் என்ற நிலையில் பிரதேச செயலாளரின் எழுத்து மூல அனுமதியோடு...இவருக்கு மட்டுமல்ல உள்நாட்டு யுத்தத்தால் பாதிப்புக்குள்ளாகி செய்கை பண்ணப்படாதிருந்த காணிகளை மீண்டும் துப்புரவு செய்து பயிர் செய்ய பிரதேச செயலகம் எழுத்து மூலம் அனுமதித்து...

அதன் பெயரில்...பெரியப்பா வயசாளி...ராபி மாஸ்டரிடம்தான் சொல்லியிருந்தார் யாரையாவது பிடித்து காணியை டோஸர் பண்ணுமாறு...ராபி சேரும் யாரோ ஒரு டோஸர்காரனை பிடித்து காடாகிக் கிடந்த வயற் காணியை துப்புரவு செய்ய சொல்லி விட்டு வீட்டுக்கு வந்து விட்டார்...அவர் வயற் பக்கம் கூடப் போகவில்லை...டோஸர்காரன் காடு வெட்டிக் கொண்டிருந்த போது பொலிஸால் கைது செய்யப்பட்டு

"யார் டோஸர் பண்ணச் சொன்னது..."

என்ற கேள்விக்கு அவன் ராபி சேரைச் சொல்ல சரியாக அந்த சம்பவம் நடந்து ஒரு வாரத்தின் பின் அவர் பொலிஸால் கைது செய்யப்பட்டு...ஆசிரியர் என்று கூடப் பாராது...செய்யாத குற்றத்துக்காக கிட்டத்தட்ட ஒன்றரை மாதம் ரிமான்டில் இருந்திருக்கின்றார்.

"குறித்த காணியில் டோஸர் பண்ணுகிற நேரம் சந்தேக நபரான ராபியும் அந்த இடத்தில் காணப் பட்டார்" என்று பொலிஸார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் மேலதிக அறிக்கை என்பன அப்பட்டமான பொய்களின் பிரசுரங்கள்.

கொலைக் குற்றத்துக்கே ஏதோ நீதிமன்றத் தினை திருப்திப்படுத்தும் காரணங்களை முன் வைத்து நீதிமன்றத்தினை திருப்திப்படுத்தி விட்டார் என்ற காரணத்தினால் மேல் நீதிமன்றங்களினால் குறித்த சந்தேக நபர்களுக்கு பிணை வழங்கப்படுகின்ற இந்த தேசத்தில் "அரச காட்டுக்குள் அத்து மீறி நுழைந்து அரசுக்கு சேதம் ஏற்படுத்தினார்" என்ற பொய்யான குற்றச்சாட்டின் பேரில் சரியாக ஒன்றரை மாதம் ரிமான்டில் வன வாசம்...எந்த நீதிமன்றம் அவரை பொலிஸின் விண்ணப்பத்தின் பேரில் ஒன்றரை மாதம் ரிமான்ட் பண்ணியதோ அதே நீதிமன்றம் அவரை குற்றவாளியாகக் கண்டு...அப்புறம்...இப்போது ராபி சேர் அப்பீல் செய்திருக்கின்றார் மேனிதிமன்றத்துக்கு...

தலை விதி தவிர வேறென்ன....காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட சொந்தக் காணிக்குள் சென்று ஏதாவது செய்தால் அசர காட்டுக்குள் ஏன்டா புகுந்தாய் என்று கழுத்தை நெரிக்கும் சம்பவங்கள் ராபி சேருக்கு மட்டுமல்ல...இன்னும் எத்தனையோ பேருக்கு இந்த பிரதேசத்தில்.

இன்றைக்கும் அவர் கோர்ட்டுக்கு அலைந்து கொண்டிருக்கின்றார்.

ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தைந்து களிலேயே பேர்மிட் வழங்கப்பட்ட காணியது. சொந்தக் காணிக்குள் புகுந்து விவசாயம் செய்யவும் தடை செய்யப்பட்ட மாத்ரு பூமி போட்ட விலங்கு களில் மாட்டிக் கொண்ட ராபி சேரின் மனசில் இன்று வரைக்கும் கல் வெட்டுகளாக பதிந்து கிடக்கின்றன அந்த கசப்புகள்.....கறை படிந்த வரலாறு.

பரீதின் பெரு மூச்சில் ஒரு தேசத்துத் துயரம் தெரிந்தது.

அப்புறம் மூஸா, ராஸிக், சல்மான் பக்கத்து வீட்டு பக்கீராஸின், யாஸீன், முஸ்தகீன் என அந்தப் பட்டியல் நீண்டு செல்லுகின்றது. ஒருத்தனும் நிம்மதி யாக வயலுக்கோ காட்டுக்கோ செல்ல முடியாத சூழலை வான் எல பொலிஸ் மிகத் தீர்க்கமாக ஸ்தாபித்துவிட்டதில் அந்தப் பிரதேசமே அச்சத்தில் மைனஸ் டிகிரி பனிக்கட்டிகளாய் மரத்துப் போய்க்கிடக்கின்றார்கள்.

கேட்பார் பார்ப்பார் இல்லாத ஊராகிப் போய்விட்டது.

வயலுக்கு காவலுக்குப் போன ரஷீது நாநா புதையல் கிண்டினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு கடந்த நான்கு மாதமாய் இன்னும் விளக்கமறியலில் இருந்து கொண்டிருக்கிறார்.

தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு ஆறு மற்றும் பதினான்கின் கீழ் தண்டிக்கப்படக்கூடிய குற்றங்களைப் புரிந்துள்ளார் எனும் சந்தேகத்தின் பேரில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டதன் காரணமாக இந்த நீதிமன்றத்துக்கு அவருக்கு பிணை வழங்கும் நியாயதிக்கம் கிடையாது என்று நீதவான் சொல்லி விட்டார்.

ஆகக்குறைந்தது அவருக்கெதிராக குற்றச் சாட்டுப்பத்திரத்தினை பொலிஸார் இந்த மன்றில் தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு இந்த நீதிமன்றம் கட்டளையிட வேண்டும் என அவரது சட்டத்தரணி ஒவ்வொரு தவணையின்போதும் நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்யும் போதெல்லாம் பொலிஸோ..

அவருக்கெதிரான வழக்கில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படுகின்ற மண் வெட்டி இரண்டு தேசிக்காய்கள் சந்தனக் கட்டையொன்று என வழக்கின் சான்றுப் பொருட்களாக நீதிமன்றத்துக்கு சமர்ப்பித்திருந்தனர். வயல் வேலைக்காக கையில் மண் வெட்டி வைத்திருந்தது ஒரு குற்றமா....?

குற்றச்சாட்டுப்பத்திரத்தினை தாக்கல் செய்வதற்கு அடிப்படையான "புராவிதயா வார்த்தா" இன்னும் எங்கள் கைக்கு வந்து சேரவில்லை என்ற காரணத்தினை கடந்த நான்கு மாதங்களாக சொல்லிச் சொல்லி தவணை போவதும் பதினான்கு நாட்களுக் கொரு முறை விளக்கமறியலிலிருந்து ரஷீது நாநாவை நீதிமன்றத்துக்கு அழுது கலங்கிய கண்களோடு கொண்டுவருவதும்.

வழக்காமானதொன்றாகிப் போய்விட்டது.

யாரிடம் சொல்லி அழ.... அவரின் கைகளைப் பிடித்துக் கொண்டு இந்த துயர் தீராக் கதைகளை செல்லிக் கதற அதிகாரத்தை வைத்துக்கொண்டு அப்பாவிகளை நசுக்குகின்ற பொலிஸ் இயந்திரத்தின் சில்லுகளில் அடித்தட்டு மக்கள் நசுங்கிச் சிதைந்து கொண்டிருக்கின்றனர்.

கங்கை ஆற்றுக்கும், பூவரசந்தீவுக்கும் சென்று இப்போதெல்லாம் வியாபாரத்துக்காக மணல் ஏற்றி வர முடியாது. இரண்டு வாரத்துக்கு முந்தி பூவரசந் தீவுக்குச் சென்று மணல் ஏற்றி வந்த நான்கு டிரக்டர் கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத் தில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

இத்தனைக்கும் அந்த நாலு பேரிடமும் மணல் ஏற்றுவதற்கான புவிச்சரிதவியல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் இருந்தன. கைது செய்த பொலிஸாரிடம் அந்த உத்தரவுப்பத்திரங்கள் காண்பிக்கப்பட்டபோது அவர்கள் சொன்னது.

"அனுமதிப்பத்திரத்தில் சொல்லப்பட்ட நிபந்தனைகளை மீறி செயற்பட்டிருக்கின்றீர்கள்... அதனால்தான் கைது செய்தோம்..

என்ன நிபந்தனை மீறப்பட்டிருக்கின்றது என யோசித்து முடிப்பதற்குள் நான்கு பேரும் தமக்கெதிராக கொண்டு வரப்பட்ட குற்றச்சாட்டுக்கு குற்றவாளிகள் என பூம்பூம் மாடுகள் மாதிரி ஒத்துக்கொண்டு தலா ஐயாயிரம் தண்டப் பணத்தினை நீதிமன்றத்துக்கு கட்டி விட்டு... ஏற்றிவந்த மணலை அரசுக்கு பறிமுதல் கொடுத்துவிட்டு...அச்சத்துக்கு மத்தியில் நகருகின்ற வாழ்க்கையில் நாய்பட்ட பாடு. பயந்து பயந்து தொழில் செய்ய வேண்டிய நிலை... அல்லது தொழிலே செய்ய முடியாத இறுக்க மான சூழல்... யாரிடம் சொல்லி அழ.... அதிகார வெறியின் கோரைப்பற்களுக்குள் மாட்டுப் பட்டுக் கொண்ட ஏழை ஜாதியினால் எப்படி தப்பிச் செல்ல முடியும்... எமை காப்பாற்றுவார்கள் என நம்பிய அரசியலின் தேவ தூதர்கள் அடுத்த தேர்தல் வரும் வரை மௌன விரதம் இருப்பதாக சத்தியப் பிரமாணம் செய்து எடுத்துக் கொண்டு விட்டார்களே...

பரகஷீது .... புஹாரி... அனீபா.... எல்லோரும் ஜீப்புல ஏறுங்க....



பெரும்பாலும் ஜீப்பில் ஏறிய எல்லோரது மனோநிலையும் ஒரே மாதிரியாகவே இருந்திருக்க வேண்டும் என்பதனை அங்கு நிலவிய அசந்தர்ப்பமான சூழல் அவனுக்கு தெளிவாகக் காட்டிற்று.

"இப்போது புதிய வழக்குகள் கூப்பிடப்படும்" என்று கந்தளாய் நீதவான் நீதிமன்ற துலக் முதலியார் சொல்லும்போது வெளியே வானலியில் பொறிக்கும் சட்டியில் போட்டு வறுத்தெடுத்துக் கொண்டிருந்தது வெயில்... சித்திரை மாத வெயிலின் சித்திரவதை குவான்டனோமாவின் சுவர்களில் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தது.

நீதவானுக்கு பக்கவாட்டுச் சுவரில் கொழுவப்பட்டிருந்த பெரிய மணிக்கூட்டில் சிறிய ஊசி பன்னிரெண்டுக்கு நெருக்கமாகவும் பெரிய ஊசி பத்தைத் தாண்டியும் சோம்பேறித்தனமாய் அரச உத்தியோகம் செய்து கொண்டிருந்தது.

காலை ஒன்பதரை மணிக்கு ஃப்ரெஷ்ஷாக வந்து விளக்கத்துக்காக நியமிக்கப்பட்டிருந்த வழக்கு களை ஆரம்பத்தில் கூப்பிட்டு சாட்சிகள் வந்திருந்த

வழக்குகளை விளக்கத்திற்காக ஒரு பக்கத்தில் "இந்த வழக்குகள் விளக்கத்துக்காக பின்னர் கூப்பிடப் படும்" என்றவாறு ஒதுக்கி வைத்துவிட்டு பின்னர் பிஆர் வழக்குகள்... அப்புறம் அழைப்புக்காக வைக்கப் பட்டிருந்த வழக்குகள் என ஓயாது கூப்பிட்டு கூப்பிட்டு பயங்கர டயர்டாகிவிட்டது நாக்கு கனத்து போயிருந்தார் துலக் முதலி..

வியர்வை மசமசப்பில் திறந்த நீதிமன்றத்தில் காலையில் வந்திருந்த கூட்டம் இன்னும் குறைய வில்லை... ஆங்காங்கு சுற்றிக் கொண்டிருந்த ஃபேன் காற்றை விடவும் வியர்வையின் விஸ்வரூபம் சர்வாதிகாரியாகி விட்டிருந்தது. மனுஷ வெப்பம் அந்த இடத்தில் அனல் மின்சாரம் செய்து கொண்டிருந்தது.

வழக்கிலக்கம்... முஹம்மது முத்துக்கண்டு பரக்ஷீது... வான் எலப் பொலிஸ் அலுப்போடு அழைத்த துலக் முதலியார் "பந்தனாகாரய.. குயிக்கா கொண்டு வாங்க" எரிச்சல் தெரிந்தது துலக் முதலியாரின் குரலில்.

அவரது குரலில் காலையில் பிறந்த பூ பகல் நேரம் கடந்து வாட ஆரம்பித்திருப்பது தெரிந்தது... குரல்வளையில் அதிகம் வியர்த்திருந்தது... தண்ணீர்ச் சொட்டுக்கும் அவகாசமில்லாத தொழிலிது... குரலில் உப்புக்கரித்திருந்தது.

"இதோ சுருக்கா கொண்டு வாங்க.." பந்தனா காரய என்றழைக்கப்படும் சிறைச்சாலை உத்தி யோகத்தன் ஒருத்தன் சிரமெதிரிய என கருப்பு வெள்ளையினால் போர்டு போடப்பட்டிருந்த ஷெல்லிலிருந்து பாதுகாப்பாக அழைத்து வந்த பரக்ஷீதை அழைத்து வந்தபோது

"இந்தா சும்மா பாத்திட்டு நிக்காம கூண்டுல ஏறுங்க"

புலி உறுமிய துலக் முதலியாரின் பாலைவனக் குரலில் பயந்து போன பரக்ஷீது சிங்களத்தில் "வித்திக்கறு" என போர்டு போடப்பட்டிருந்த கூட்டில் ஏறினான் மலங்க மலங்க விழிகளோடு ரொம்பப் பயந்திருந்தான்.

பொலிஸ்... கோர்ட்.... கருப்பு அங்கிகளோடு சட்டத்தரணிகள்... உறுமும் துலக் முதலியார் இறுகிய முகத்துடனான நீதவான்... படித்தவனையும் அக்மார்க் கிரிமினல்களையுமே ஒரு கணம் துனுக்குறச் செய்யும் அந்த சூழல் பரக்ஷீதைப் போன்ற அப்பாவிப் பாமரர்களுக்கு ஏன்தான் கொள்ளி வெட்டப் போனேனோ... என்ட அல்லாஹ்... வாழ வழியில்லை பொழப்புக்கு வேற போக்கிடம் இல்ல. தெரிஞ்ச ஒரே தொழில் வெறகு வெட்டுறதுதானே... இது ஒரு குத்தமா... ஏன்தான் காட்டுக்குப் போனேனோ.... பட்டினி கெடந்திருக்கலாம்...பட்டினி கெடந்து செத்தாலும் பரவால்ல....இதென்ன கொடும...

அழுத மனசுக்குள் பரக்ஷிதின் மனைவி பிள்ளைகள் கண்ணீர் கனவுகளை விவசாயம் செய்து கொண்டிருந்தனர்.

"உங்களுக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டு என்னவெனில்"

...................

பரக்ஷீதுக்கு ஐநூறு ரூபாய் பீஸில் ஒரு இளம் கருப்பு கோர்ட் ஆஜராகியிருந்தது. மனைவி எங்கே எடுத்தாளோ இந்த ஐந்நூறு .... ரொம்பக் கஷ்டப்பட்டிருப்பா.

கூண்டுக்குள்ளிருந்த பரக்ஷீதின் பூஞ்சனம் பிடித்த பார்வைகளில் பெண்களுக்கென ஒதுக்கப் பட்டிருந்த அந்தப்பகுதியில் போடப்பட்டிருந்த கடைசி வாங்கில் அவனது மனைவி... அழுதிருக்க வேண்டும்.

அது மட்டும்தானே ஏழைக்கு மிச்சசொச்சம் கண்ணீர் மட்டும்தானே வறுமைக்குப் பிறந்த கூட்டத்தின் காலத்துக்கமாக அசையும் சொத்து அதேதான் பரக்ஷீதுக்கும் மனைவிக்கும்.

"கடந்த... அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றில் இந்த நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் கல்லடி வெட்டுவான் எனும் பிரதேசத்தில் அனுமதிப்பத்திரமின்றி நூறு கிராம் கஞ்சாவை தனது உடமையில் வைத்திருந்ததற்காக இலங்கையின்... இலக்க அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு... ன் கீழ் தண்டிக்கப்படக் கூடிய குற்றமொன்றைப் புரிந்துள்ளதாக இத்தால் குற்றம் சாட்டப்படுகின்றீர்கள். குத்தவாளியா... சுத்தவாளியா..."

வியர்த்துப் போனான் பரக்ஷீது... அரச காட்டில் விறகு வெட்டியதற்காகத்தானே கைது செய்து வழக்கு போடுவதாக பொலிஸ் சொன்னார்கள். நான் எப்போது கஞ்சா வைத்திருந்தேன் கஞ்சாவா...என்ட அல்லாஹ்... இது என்ன புதுக்கதை...பொறந்ததுக்கு பீடி சகரெட்னு எதுவுமே தெரியாது...என்னப் போயி கஞ்சா வெச்சிருந்தேன்னு...இதென்ன அநியாயம்... நான் எப்ப கஞ்சா வெச்சிருந்தேன்...கண்ணால கூட அதக் கண்டிருக்க மாட்டேனே...யா அல்லாஹ் இதெல்லாம் நீ பாத்திட்டுத்தானே இருக்க.....

பரக்ஷீதுக்கு தனக்குள் கரப்பான் பூச்சிகள் நுழைந்து மூளையை கடித்துக் குதறிக் கொண்டிருக்கையில்...

"என்ன குத்தவாளியா சுத்தவாளியா" பரக்ஷீதிடம் திரும்பிய சட்டத்தரணி

"குத்தாளியா சுத்தவாளியா சொல்லுங்க... குத்தவாளின்னா ஃபைன் அடிப்பாங்க.. அதக்கட்டிட்டு வெளியே போயிடலாம். சொல்லுங்க இந்தக் குத்தத்த நீங்கள் செஞ்சீங்களா..."

"குத்தவாளிங்க..." யோசிப்பதற்கெல்லாம் அங்கு அவகாசம் கிடையாது. பரக்ஷீது சொன்னதும் அந்த லோயர்,

"தனது குற்றத்தை எதிராளி ஏற்றுக்கொள் கின்றார் யுவர் ஓனர்..."

நீதவான் இயந்திரத்தனமாக எவ்வளவு ரூபா தண்டப்பணம் என்பதனை அந்த வழக்குக் கோவையின் ஜேர்னல் என்ட்ரியில் எழுதிக் கொண்டிருந்தார். ●



கி.நடராசா

# பேராசிரியர் கனகசபை அருணாசலம் அவர்களின்
# தமிழ் ஆய்வுப்பணி

அண்மையில் அமரத்துவம் அடைந்த பேராசிரியர் கனகசபை அருணாசலம் அவர்களும் நானும் பல்கலைக்கழகத்தில் சக மாணவராகப் படிக்கத் தொடங்கிய நாள் முதல் அவர் இறக்கும் வரை ஏறக்குறைய ஐம்பது வருடங்கள் அவரோடு நெருக்கமாகப் பழகியுள்ளேன். பல்கலைக்கழகத்தில் தமிழை சிறப்புப் பாடமாக அவர் கற்கவேண்டும் என வற்புறுத்தியவர்களில் எனக்குப் பெரும் பங்குண்டு. புகழ் விரும்பாத, வெளியுலகத்திற்கு தன்னை அடையாளப்படுத்த விரும்பாத தன்னடக்கமும் அவரிடம் நிறைய இருந்தது. படிக்கின்ற காலத்திலிருந்து நேர்மையும் கடின உழைப்பும் விடா முயற்சியும் நிறையவே காணப்பட்டது. பேராதனைப் பல்கலைக்கழகத்தை சுவைத்த பெருமைக்குரியவர். அடிக்கடி அவர் பேராசிரியர்களான வித்தியானந்தனையும், தில்லைநாதனையும் நினைவு கூர்ந்து கொண்டேயிருப்பார். மாணவர்களை நேசிப்பதில் இவ்விருவரையுமே பின்பற்றிச் செல்வார். தனக்கு கற்பித்த ஆசிரியர் அனைவரையும் நேசிப்பது போல மாணவர்களையும் நேசிப்பார். சமூகத்தில் ஏழ்மை நிலையில் இருந்து உயர்ந்த ஓர் கர்ம வீரர். எத்தனையோ பேராசிரியர்களை நாம் பார்த்திருக்கின்றோம். ஆனால் நண்பர் அருணாசலம் அவர்களிடமிருந்து வேறுபட்டவர்.



இன்று இலங்கை தமிழ் இலக்கியவரலாற்றில் மலையக தமிழ் இலக்கியம் தனித்து நோக்கப்படுமளவிற்கு வளர்ச்சி பெற்றுள்ளதென்றால் அதற்கு ஊற்றுக் கண்போல விளங்கி அடித்தளமிட்டவர் பேராசிரியர் அருணாசலம் அவர்களே ஆவர்.

அறிமுகம்

யாழ்ப்பாணக்குடாநாட்டின் தென்மராட்சிப் பகுதியில், சாவகச்சேரியில் அல்லாரை என்ற கிராமத்தில் கனகசபை காசிப் பிள்ளை தம்பதியினர்க்கு மகனாகப் பிறந்தவர். ஆரம்பக்கல்வியை அல்லாரை அரசினர் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் கற்று பின்னர் கொழும்பு பேராதனைப்பல்கலைக்கழகத்தில் இளநிலைப்பட்டப்படிப்பை மேற்கொண்டவர். பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே தமிழை சிறப்புப் பாடமாகக் கற்றுத் தேறியவர். அதே பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகவும் தமிழ்த்துறை தலைவராகவும் தமிழ் பேராசிரியராகவும் பணியாற்றியவர். எளிமை, ஊக்கம், நேர்மை, முறைதவறுபவரை கண்டித்தல், ஆய்வியல் நோக்கு போன்ற நல்லியல்பு கொண்ட மனிதருள் மாணிக்கம் போன்றவர்.

பேராசிரியர் அருணாசலத்தின் தமிழ் ஆய்வுப்பணியை நான்கு வழிகளில் குறிப்பிட விரும்புகின்றேன்.

1. மலையகத் தமிழிலக்கியம் தொடர்பான ஆய்வு
2. ஈழத்து தமிழ் இலக்கியம் தொடர்பான ஆய்வு
3. நவீன தமிழ் இலக்கியம் தொடர்பான ஆய்வு

### 4. நூலாசிரிய ஆய்வுப்பணி

**மலையகத்தமிழ் இலக்கியம் பற்றிய ஆய்வு**

இன்று இலங்கை தமிழ் இலக்கியவரலாற்றில் மலையக தமிழ் இலக்கியம் தனித்து நோக்கப்படுமள விற்கு வளர்ச்சி பெற்றுள்ளதென்றால் அதற்கு ஊற்றுக் கண்போல விளங்கி அடித்தளமிட்டவர் பேராசிரியர் அருணாசலம் அவர்களே ஆவர். பல்கலைக்கழக மட்டத்தில் பேராசிரியர் சோ. சந்திரசேகரம், பேராசிரியர் செ. யோகராசா போன்றோர் மலையகம் பற்றி தொடர்ந்து எழுதிக் கொண்டேயிருக்கின்றனர். பேராசிரியர் அ. சிவராசா, "மலையகத் தமிழரின் அரசியல் வரலாறும் இலக்கியங்களும்(1992) என்ற தலைப்பில் நூலொன்றினை எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும் பேராசிரியர் மலையக இலக்கியங்களை வெளிக்கொணர்ந்தளவிற்கு எவரும் முயலவுமில்லை; முயற்சிக்கவுமில்லை.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படித்த காலத்திலும் விரிவுரையாளராக பணியாற்றிய காலத்திலும் தோட்டத் தொழிலாளருடன் பழகும் வாய்ப்பு அவருக்கு ஏற்பட்டது. இவர்களை காணும் போதெல்லாம் தான் பிறந்து வளர்ந்த குடும்பச்சூழலை உணர்ந்து கொண்டதால் ஏழைகளின் மீது இயல்பாகவே பரிவும் பாசமும் ஏற்பட்டது. அதுமட்டுமின்றி மலையக எழுத்தாளர்களுடன் நெருக்கமான உறவையும் கொண்டிருந்தார். அவர் அளித்த பேட்டியொன்றில், "புதுமைப் பித்தனது சிறுகதைகள் என் உள்ளத்தை உலுக்கின. மலையகத்தையோ, மலையகத் தொழிலாளர் களையோ அதுவரை பார்த்திராத நான் துன்பக்கேணி என்ற சிறுகதையினூடாக அவர்களின் அவலங்களை அறிய முடிந்தது" எனக் கூறியுள்ளார். மலையகம் பற்றி எழுதத் தூண்டியதற்கு புதுமைப்பித்தனது கதைகளும் அடிப்படையாக அமைந்தது எனலாம். "இலக்கிய ஆக்கப் பசி கொண்டவனுக்கு அவனறிந்த சமுதாயம் அமுதசுரபி" என்று கூறலாம். மலையக மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளை எழுதும் போது யாருக்கும் எதற்கும் அஞ்சாமல் கூறிவிடும் இலக்கியநேர்மை அவரிடம் காணப்பட்டது. அதனது வெளிப்பாடே "மலையக தமிழ் இலக்கியம்" என்ற நூலாகும். இந்நூலுக்கு தேசிய சாகித்திய விருதும் மத்திய மாகாண சாகித்திய விருதும் கிடைத்தமை குறிப்பிடத் தக்கது.

மலையக மக்களின் வாழ்வியலை மையமாகக் கொண்டு மலையக எழுத்தாளர் பலர் பல நாவல்களை எழுதியுள்ளனர். இவற்றுள் பத்தொன்பது நாவல்களை பின்புலமாகக் கொண்டு அவரால் எழுதப்பட்ட இன்னொரு ஆய்வு நூல் "மலையகத் தமிழ் நாவல்கள்" என்பதாகும். பிரதேசக்கோட்பாட்டினை விளக்கிச் செல்லும் மிகச் சிறந்த நூலாகும். இந்நூலுக்கும் தேசிய சாகித்திய விருதும் மத்தியமாகாண சாகித்திய விருதும் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

மலையக இலக்கியம் தொடர்பாக பேராசிரியர் நூல்கள் மட்டுமன்றி பல ஆய்வுக் கட்டுரைகளையும், மலையக எழுத்தாளர்களைப் பற்றியும் எழுதியிருக்கின்றார். "சாதனையாளர் சாரல்நாடன்" என்ற நூல் மலையக பிரபல எழுத்தாளரை பின்னணியாக கொண்டு எழுதப்பட்டது. மலையகம் தொடர்பான அவரது ஆய்வுக்கட்டுரைகள் சில வருமாறு:

1. மலையகத் தொழிலாளர் பற்றிய சிறுகதைகள்
2. மலையகச் சிறுகதைகளில் பெண் தொழிலாளர்கள்
3. மூட்டத்தினுள்ளே என்ற நாவல் பற்றிய நோக்கு

மேற்குறிப்பிட்ட விடயங்களை தவிர மலையகத்தை சேர்ந்த மாணவர்கள் தமிழை சிறப்புப்பாடமாக பயின்றபோது இறுதிப்பரீட்சைக்கான ஆய்வுக் கட்டுரைக்குரிய விடயம் மலையகத்தைப் பற்றியதாக இருக்க வேண்டுமென வற்புறுத்தி செயலூக்கம் கொடுத்தவர். இது போல மலையக மாணவர் முது கலைமாணி, முது தத்துவமாணி ஆகிய பட்டங்களுக்குரிய ஆய்வு விடயமாக மலையக இலக்கியங்களை ஆய்வு செய்யுமாறு வற்புறுத்தியதுடன் வழிகாட்டுநருமாகச் செயற்பட்டவர் எனலாம்.


**ஈழத்து தமிழ் இலக்கியம் தொடர்பான ஆய்வு**


இலங்கையில் தமிழியல் ஆய்வு தொடர்பாக ஏலவே தனிநாயகம் அடிகளார், பேராசிரியர்களான வித்தியானந்தன், கைலாசபதி, சிவத்தம்பி போன்றோர் எழுதிய துறையிலேயே தனி ஒரு நூலாக எழுதிய பெருமை பேராசிரியரையே சாரும்.


அவரது இலங்கைத் தமிழ் ஆய்வு என்ற நூல் பன்னிரண்டு இயல்களை வகுத்து எழுதப்பட்டது. இந்நூலுக்கு தேசிய சாகித்திய விருதும் வடக்கு கிழக்கு மாகாண சாகித்திய விருதும் வழங்கப்பட்டிருந்தது. இலங்கையில் அதிகளவிலான சாகித்திய விருது பெற்ற பேராசிரியர்களில் இவரே முதன்மையானவர் என துணிந்து கூறலாம்.

ஈழத்து தமிழ் இலக்கியம் தொடர்பாக பல தமிழறிஞர்களும் தமிழ் ஆர்வலர்களும் பல நூல்களையும் ஆய்வுக்கட்டுரை



களையும் எழுதியுள்ளனர். பேராசிரியரின் மூன்று கட்டுரைகள் முதன்மை வாய்தன வாக உள்ளன.

1. இருபதாம் நூற்றாண்டில் ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சிப் போக்குகள்.

2. சுதந்திர இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சிப் போக்குகள்

3. ஈழத்து தமிழ் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்

இவற்றை விட யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில், "ஈழத்து இருபதாம் நூற்றாண்டு தமிழ் இலக்கியம்" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு மூன்று நாட்கள் தொடர் கருத்தரங்கு நடாத்து வதற்கு தலைமை தாங்கிச் செயற்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**நவீன தமிழ் இலக்கியம் தொடர்பான ஆய்வு**

நவீன இலக்கியம் என்ற வகையில் புனைகதை இலக்கியங்களே இவரைக் கவர்ந்த துறையாக இருந்தது. க.பொ.த. உயர்தர வகுப்புகளில் படிக்கின்ற காலத்தில்(1965-66) நாவல்கள், சிறுகதைகள் படிப்பதில் மிக்க ஆர்வமுடையவராக இருந்தவர். தனது முதுகலை மாணிப் பட்டப்பின் படிப்பிற்கான ஆய்வுப் பொருளாக தேடிக் கொண்டது "ஈழத்து தமிழ் சிறுகதைகள்" என்பதாகும். இது மிகப்பரந்ததொரு ஆய்வுப்பொருள். இதை தொடர்ந்து தனது கலாநிதிப்பட்டப்படிப்பிற்கான ஆய்வுப்பொருளாக தெரிவு செய்தது "தமிழின் வரலாற்று நாவலின் தோற்றமும் வளர்ச்சியும்" என்ப தாகும். இவ்வாய்வினை மேற்கொள்வதற்காக தமிழகத்திற்கும் கேரளத்திற்கும் அடிக்கடி சென்று வந்தார். இவ்ஆய்வின் சிறப்பினைக் கருத்திற் கொண்டு "பரீட்சையாளர் சபை" ஏகமனதாக முதன்முதல் பொன்னம்பல முதலியார் ஞாபகார்த்த பரிசுக்கு(சேர் பொன். இராமநாதன், சேர் பொன். அருணாசலம் ஆகியோரின் தந்தை) சிபார்சு செய்தது. முதன்முதலாக அப்பரிசினைப் பெற்றுக் கொண்டவர் இவரே. இப்பரிசு இதுவரை வேறு எவருக்கும் வழங்கப்படவில்லை. இவ் ஆய்வேடு பிற்காலத்தில் நூல் வடிவமாக (தமிழ் வரலாற்று நாவல்கள்) வெளிவந்த போது வடக்கு கிழக்கு மாகாண சாகித்திய விருதினையும் பெற்றுக் கொண்டது. இவை தவிர சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற நூலையும் எழுதியிருந்ததையும் அறிந்திருந்தேன்.

**நூலாசிரியர் என்ற வகையில் அவரது ஆய்வுப்பணி:**

மேற்குறிப்பிட்ட விடயங்கள் தவிர்ந்த ஏனைய விடயங்கள் எல்லாவற்றையும் இத்துறைக்குள் அடக்க முயல்கின்றேன்.

ஆய்வியலாளர் என்ற வகையில் அவரது முதல் நூலாக வெளிவந்தது 'பாரதியார் சிந்தனைகள்' (1984) என்ற நூலாகும். பாரதியார் கவிததையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அவர் அடிக்கடி என்னுடன் உரையாடும் போது, "பாரதி பாடாத துறையுமில்லை, பாரதி பாடாத பிரச்சினையுமில்லை" எனக் கூறுவார். பாரதியார் கவிதைகள் அவரது கருத்தியல் வாத சிந்தனைகளோடு ஒத்திருந்தது. அதன் விளைவாகத் தோன்றியதே பாரதியார் சிந்தனைகள் என்ற நூலாகும். முற்போக்குச் சிந்தனை கொண்ட பேராசிரியர் சாதியம், குருட்டு நம்பிக்கைகள், சமயபேதங்கள், பொருளாதார பேதங்கள் போன்றவற்றை தனது பேனா மூலம் வெளிக் கொணர வேண்டும் என்ற அவவாவின் விளைவே பாரதியார் சிந்தனைகள் என்ற நூலாகும்.

இந்நூலினைத் தொடர்ந்து "விபுலானந்தரின் சமய சிந்தனைகள்" என்ற நூலை எழுதியிருந்தார். இந்நூலுக்கு தேசிய சாகித்திய விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பெருநூல்கள் தவிர சிறியளவிலான நூல்களையும் எழுதியிருக்கின்றார்.

இளங்கதிர் காலக் கண்ணாடி(1994)

இளந்தலைமுறையினரும் கல்வியும்

தமிழகத்தில் சமணம்

பேராசிரியரிடம் தனிப்பட்டோர் தமது தேவைக் காக கட்டுரையொன்று கேட்டால் காலதாமதமின்றி எழுதிக் கொடுக்கும் உயர்ந்த பண்பு அவரிடம் காணப் பட்டது. நான் அறிந்தவரையில் எழுபதுக்கும் அதிகமான ஆய்வுக்கட்டுரைகளை எழுதியிருக்கின்றார். பல்கலைக் கழக மட்டத்தில், "இரத்தின தீபம்", "சாகித்திய ரத்ன" போன்ற உயர் விருதுகளைப் பெற்றுக் கொண்ட ஒரு சிலரில் பேராசிரியரும் அடங்குவர்.

**போரசிரியர் வகித்த பதவிகள்**

பல்கலைக்கழகத்தில் தமிழ்துறை சார்ந்த பதவிகளோடு புறநிலை நிகழ்வுடன் கூடிய சில பதவி களும் அவரைத் தேடி வந்தன. நான் அறிந்தவரை அவர் வகித்த சில பதவிகளைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

1.பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் சங்கப் பெருந்தலைவர்.

2.சங்கீத நாட்டிய சங்கத்தின் பெருந்தலைவர்.

3.இலங்கை கலைக்கழகத்தின் தமிழ் இலக்கிய குழுத்தலைவர்


4.தேசிய கல்வி நிறுவகத்தின் தொலைக் கல்விப் பிரிவின் தமிழ்ப்பாட பதிப்பாசிரியர்; தமிழ் மொழித்துறை ஆலோசகர்

5. தென் இந்திய பல்கலைக்கழகங்கள் சிலவற்றின் கலாநிதிப்பட்ட ஆய்வேட்டு மதிப்பாளர்.

**நிறைவுரை**

என் கடன் பணி செய்து கிடப்பதே என வாழ்ந்து காட்டியவர் பேராசிரியரே. பல்கலைக்கழக விரிவுரை யாளர்களின் பணி சமூகப்பணி என செயலில் காட்டிய வரும் இவரே. விபுலானந்த அடிகளார், பேராசிரியர் களான கணபதிப்பிள்ளை, வித்தியானந்தன், செல்வ நாயகம் போன்றவர்களின் மறைவின் பின்னரும் தமிழ்த் துறையை அவர்களுக்கு ஈடாக வளர்த்த பெருமைக் குரியவர். இவரைப் பற்றி பேராசிரியர் தில்லைநாதன், "பொறாமை, அவா, சினம்(பிறர் மனதை புண்படுத்தல்) கடுஞ்சொல் ஆகிய குற்றங்களுக்கு இடந்தராத, கள்ளம் கபடமற்ற ஒரு நல்ல மனிதன் பேராசிரியர் கனகசபை அருணாசலம்" என குறிப்பிட்டுள்ளார்.

அவர் ஆத்மா சாந்தியடைக.



# அரசியல்

இது
மக்களுக்குப்புரியாத
ஒரு
மாயவித்தை!

உலக அதிசயங்களில்
இதுவுமொரு
அதிசயம்!

யார்யாரோ விட்டுச் செல்ல
யார்யாரோ எடுத்து வளர்க்கும்
காலடி விட்டோடும்
கைப்பிள்ளை!

பிழைக்கும் வழிகளின்
கண்டு பிடிப்புகளுக்கான
அறிவாளிகள் சிலரின்
அந்தரங்க அரியாசனம்!

மனங்களை வெல்லும்
மகுடியை வைத்திருப்பதால்
மக்களை
மயக்கி ஓட்டும் பணியை
மலையேற்றி வைக்கும்!

அடிக்கடி
அழுக்குகள் நிறைந்து கொள்வதால்
எவராலும்
சுத்தப்படுத்த முடியாதிருக்கும்
தடாகம் என்பதை
தடமாய்ப் பதிக்கும்!

சதுரங்கமாகி
சத்தமில்லாது விளையாடி
சமகால நிஜங்களைக்கூட
சயனிக்கச் செய்யும்!

குட்டை கூறும்
மட்டைக் கதையில்
பல பாத்திரங்கள்
அரங்கேறி நடிக்கும்!

நினைத்ததை முடிக்கும்
சிலரின் நிலைப்பாடுகளின்
உச்சி ஆட்டத்திற்கு
உத்தரவாதமளிக்கும்!

வாக்குறுதி வாய்களுக்கு
சோம்பல் படாது
சும்மாவே சோறு போடும்!

நிரந்தரமான நண்பனுமில்லை
பகைவனும் இல்லை என்ற
தத்துவச் சுடரை
வில்லங்கங்களுக்கு முன்
விளக்காக்கும்!

கறுப்புக் கண்ணாடியால்
வெள்ளையைப் பார்த்து
கறுப்பென்றே சொல்லும்

வேதாந்த வித்தையை
கற்றுக் கொடுக்கும்!

ஒன்றாகச் சேரும்
உள்வீட்டு உறவுகள்
முரண்பாட்டுக் குழந்தைகளை
முனங்காமல் பிரசவமாக்கும்

வியர்வைத்துளிகளால்
விளையும் வளத்தால்
வள்ளல்களாய் சிலரைத் தூக்கி
வாரிசுகளாக்கும்!

அதிகாரத் தடியை
கையில் கொடுத்து
அடாவடிகளையும்
அறிமுகப்படுத்தும்!

கணக்குப் பெட்டியில்
கழித்தலைச் செய்வதில்
காலங்கள் மத்தியில்
கலந்து கொள்ளும்!


மிதிக்கின்ற பணிக்கு
மேலாடை கட்டி
மதிக்காத வேள்விக்கு
மணியடிக்கும்!

நாட்டுக்காக
அதனால் எழுதப்படும்
நல்ல பக்கங்கள்
நலத்தைச் சொல்லும்.

– பாவரசு பதியத்தளாவ பாறூக் –

நாச்சியாதீவு பர்வீன்

# கிராமத்தான் கலீபாவின்
# “நழுவி”கவிதைகள் பற்றியவிமர்சனம்




கவிதைக்கான விமர்சனம் அல்லது ஆய்வு என்பன இன்று திறனாய்வு எனும் புதிய உருப்பெற்று படைப்பாளியின் சுயத்தை நோண்டாமல் அவனது படைப்பின் ஏற்ற இறக்கங்களைஆராயாமல் அப்படைப் பின் திறனை மாத்திரம் சுட்டி படைப் பாளியை ஊக்கப்படுத்துகின்ற அல்லது அப்படைப்பாளியை தட்டிக் கொடுக் கின்ற வேலையை செவ்வனே செய் கிறது. இது ஆரோக்கியமான நிலவரம் தான் இருந்தாலும் திறனாய்வு என்ற கோதாவில் படைப்பின் நலவுகளை மாத்திரம் கோடிட்டு மலினமான ஒரு படைப்பை உயர்த்தி உச்சானிக் கொப்பில் வைத்து கொண்டாடுவதில் எனக்கு உடன் பாடில்லை.

“ஒரு எழுத்தாளனது வாழ்க்கை அவன் கடந்து வந்த வருடங்களால் அன்றி, அவன் படைப்புக் களாலேயே தீர்மானிக்கப்படுகிறது”

எழுத்தாளனை அறியவும், அளக்கவும் அவனது படைப்புகளை விட சிறந்தவையாக வேறு எதுவும் இருக்கமுடியாது.”

“உண்மைக் கவிஞன் ஒருவன் தான்சார்ந்த தனி உணர்வை வெளிப்படுத்துவதில் வெற்றியடைந்து விட்டால், விளக்க முடியாத வகையில் அது எல்லா மனிதர்க்கும் உரியபொது உணர்வாகி விடுகிறது. ஆனால், எல்லா மனிதர்க்குமுரிய பொது உணர்வை ஒரு கவிஞன் வெளிப்படுத்தமுனைந்தால், அவனால் அதை தூக்கமுடியாதுஅதன்கணத்தில் அவன் நசுங்கி காணாமல் போய்விடுவான். ஏனெனில், தனி உணர்வு களின்றி பொது உணர்வுகள் என்று ஒன்று இருக்க முடியாது. “தஜிகிஸ்தானின் மக்கள் கவி” எனப் போற்றப் படுபவரான ரஸ்யாவின் தலைசிறந்த கவிஞர் ரஸூல் கம்ஸதோவ்வின்(RasulGamzatov)கூற்று இது.

இந்த உணர்வுச் சட்டத்தின் மையத்தில் வைத்தே கிராமத்தானின் கவிதைகளை உரசிப் பார்க்கிறேன்.

இன்றைய நவீன இலக்கியத்தின் இயங்கு தளமும் போக்கும் மக்களை விட்டகன்று பிறிதொரு பாதையில் செல்வதாகப்படுகின்றது மக்களுக்கான இலக்கியம் என்பதெல்லாம் பொய்யான விடயமாகும் தன்னை முன்னிலைப்படுத்தி தன்னுணர்வுகளைதான் சார்ந்த மொழிக்கூடாக சொல்லி விட்டு படைப்பாளி நடந்து கொண்டே இருக்கின்றான் பாவம் வாசகன் புரிந்தது பாதி புரியாதது பாதி என்று விக்கி விறைத்து... திண்டாடிப் போகின்றான்.

இந்தவகையில் கிராமத்தான் கலீபா “நழுவி” ப்பயணிக்கிறார்.

கிராமத்தானின் நழுவிஎனும் தொகுதியிலுள்ள கவிதைகளை ஒருசேர வாசிக்கின்ற போது தென்னிந்திய கவிஞர் “தபுசங்கரின்” ஞாபகமே எனக்கு வரு கிறது. அவரது தொகுதிகளில் அனேக மானவை கலப்படமில்லாத காதல் கவிதை கள் ஆனால் கலீபா காதல் கவிதைகளுக் குள்ளால் கொஞ்சம் கலப்படமும் செய்திருக்கிறார்

மெய்யிலே கவிஞனுக்கு காதல் உள்ளம் தான் அவனது பலமும் பலவீனமும் காதல் என்பது ஒரு பொதுவான உணர்வு அந்த உணர்வின் வெளிப்பாடுகள் சோகமாயும் சந்தோசமாயும் கவிஞனிடமிருந்து ஒருசேர வெளிப்படும் போதுபலருக்குஅதுகண்ணீர் ஆகுகின்றது இன்னும் சிலருக்குஅதுவே கவிதையாகி விடுகிறது.

கிராமத்தான் கலீபாவின் காதல் உள்ளம் கவிதையாகி இங்கே “நழுவி” விழுந்துள்ளது.

இந்தத் தொகுதியில் உள்ள முதலாவது கவிதையே காதலுடன் ஆரம்பிக்கிறது

**காதல்**
**உன்னில் மௌனமாகவும்**
**என்னில் கண்ணீராகவும்**

காதலின் வேதனைப் பக்கங்களை வெகு லாவகமாகமொழிபெயர்த்துள்ளார் கிராமத்தான் கலீபா

இந்த இரண்டு வரிக் கவிதை வடிவம் ஒரு காலத்தில் சகட்டு மேனிக்கு வெகுவாக எழுதப்பட்டும் பாராட்டப்பட்டும் வந்த வடிவமாகும். புதுக் கவிதைக்கு புதுப்பாய்ச்சலை உண்டு பண்ணி இலங்கையிலும் இந்தியாவிலும் ஏககாலத்தில் கிளர்ந்தெழுந்த வானம் பாடிகளின் ஆதர்ஷன வடிவமாக இது இருந்தது. ஜப்பானிய ஹைக்கூ வடிவத்திற்கு ஏற்றாப்போல் இந்த இருவரிக் கவிதைகள் இருந்தாலும் சொல்லாட்சியிலும் கருத்துச் செறிவிலும் ஹைக்கூ கவிதைகள் முன்னிலை வகுப்பது குறிப்பிடத் தக்கது

அந்த வகையில் வெகுசுலபமாக தனது அடி மனது சோகங்களை அப்படியே பதிந்து நம்மையும் நுகர வைத்திருக்கிறார் கிராமத்தான் கலீபா

ரா.பார்தீபனின் “கிறுக்கல்கள்” எனும் தொகுதியில் ஒரு கவிதை

நீஅழகியில்லை–
பேரழகி

இவ்வாறான மிகக் குறைவான சொற்களை பயன்படுத்தி வாசகனை வளைத்துப்போடும் லாவகம் புதுக்கவிதைக்கே உரித்தான சிறந்த பாங்கு.

அதனை சாமர்த்தியமாக கையாள்பவர்களுக்கு மட்டுமே கவிதைத் தேரில் தொடரான பயணத்தை மேற் கொள்ளமுடியும். அந்தவகையில் கவிதை எனும் பெருங் கடலின் நீந்தகிராமத்தான் கச்சைகட்டி விட்டார் என்பது புலப்படுகிறது.

இந்தத் தொகுதியிலுள்ள இரண்டாவதுகவிதை "ஞாபங்கள்" தனதுகாதல் ஞாபங்களைஅடுக்கிக் கொண்டே செல்கின்றார். கவிஞர் தனது காதலின் ஒவ்வொறு முனையிலும் காதலின் ஞாபகங்களை பட்டை தீட்டி வாசகனிடம் கையளித்துள்ளார்.

இந்தக் கவிதையில் சிலவரிகள் சலசலத்து ஓடும் நீரோடைபோல நெஞ்சுக்குள் நெருக்கமாய் ஓடிக் கொண்டிருக்கிறது. கவித்துவ வரிகள் வாசகனையும் அவனது பழைய வாழ்க்கையை இரைமீட்டச் செய்யும் கைங்கரியத்தைஅற்புதமாய் செய்கிறது

"எச்சில் இனிக்குமாப்போல் சுவைத்தோம்
அணில் தின்ற மிச்சத்தை
உன் உம்மம்மா வீட்டுக் கொய்யாப்பழம்"

என்ற வரிகள் இளமைக்காதலின் இனிப்பான பக்கங்களைஅடையாளப்படுத்தி நிற்கிறதுஅதிலும் கிராமத்து காதலில் கொய்யாமரமும் வாழைத்தோப்பும் வயற்காடும் ஓடைக்கரையும் ஒட்டியேகாணப்படும் கவிஞரின் காதலில் உம்மம்மா வீட்டு கொய்யாபழம் ஞாபகமாக வந்து போகின்றது!

கிராமத்துப் பிரதேசவழக்கு மொழியிலான கவிதைகள் எனக்கு மிகவும் பிடிக்கும். நான் வாசித்த அளவில் "சோலைக்கிளி" அதன் பின்னர் பொத்துவில் அஸ்மின், எஸ்.ஜனூஸ் போன்றவர்களின் கவிதைகளில் கிராமிய மணம் வேரோடிக்கிடக்கின்றது இன்னும் பலர் இருக்கலாம்...?

அள்ளிக்கொடுப்பவைகள்/ஆண்டுகளால் அழிவதில்லை/
பள்ளிப்பருவநிலை/பழைய கதை ஆவதில்லை

என்ற வைரமுத்துவின் வரிகள் பள்ளிக்காலத்து ஞாபங்களைஅழகாய் சொல்லி நிற்கிறது. அனேகமான காதல் பள்ளிப் பருவத்திலயே தோன்றுவதனால் ஒரு வேளை பள்ளிப்பருவத்தை வைரமுத்து மறக்காமல் இருக் கிறார் போலும் கவிஞர் கிராமத்தான் கலீபா போல.

இத்தொகுதி முழுக்க கிராமத்து காதலின் வாசத்தை வெகுவாக பரவ விட்டுள்ளார் கவிஞர் கவிதைத் தலைப்புக்கள் சில கிராமிய மணத்தை மணக்க வைப்பதோடு கவித்துவ வாசமும் வீசுகிறது "தாவணிச் சொப்பனம்", "மண்புட்டு", "கருவண்டு நீயா" "மனம் கொத்தி" போன்ற கவிதைத்தலைப்புகளின் மூலம் தான் கிராமத்தான் என்பதை நிறுவ முனைகிறார் கவிஞர்.

புதுக்கவிதையில் தொடங்கியகவிஞரின் கவிதைப் பயணம் மரபுமுனையிலும் நின்று வெள்ளோட்டம் பார்த்திருக்கிறது. இன்னும் "கசல்" கவ்வாலிப் பாடல்கள் பக்கமும் மெல்லச்சாய்ந்துள்ளது

கட்டுடைத்துஓடும் ஒருகாட்டாறுபோல இவரது கவிதைப்பிரவாகம் வளைந்து நெளிந்து பயணிக்கிறது.

புதுக்கவிதை என்பது எல்லா இலக்கண இலக்கிய சட்டமரபுகளையும் தாண்டியது. அதனால் தான் நவீன இலக்கியப்பரப்பில் தெருவுக்கு ஒரு கவிஞன் தோன்றியுள்ளான் இந்தக் கவிஞர்களின் ஆயுளை தீர்மானிப்பது அவர்களின் தொடரான வாசிப்பு இடை விடாத தேடல். ஆனால் அனேகமான புதுக்கவிதை யாளர்கள் தற்துணிவும் தன்னளவில் திருப்தியும் மட்டுமே கொண்டு "நான் கவிஞனாகிவிட்டேன்" என்றஅருட்டல் உணர்வில் வானத்திற்கும் பூமிக்கும் இடையில் துள்ளிக் குதிக்கின்றனர். இவர்கள் அடுத்தவரை வாசிப்பதில்லை இந்த பலவீனத்தினால் காலப்போக்கில் காணாமல் போய் விடுகின்றனர். நல்ல வேளை கிராமத் தான் கலீபா அந்தப் பட்டியலில் இல்லை என்பதற்கு இந்த "நழுவி" சாட்சியாக இருக்கிறது. இந்தத் தொகுதியில் பல கவிதைகள் அடிக்கடி என்னை வாசிக்கத் தூண்டியவை

"வா பூச்சூட", "கள்வனாக நானிருந்தால் லென்ன" மனதுகனத்தபொழுதொன்றில் "வீணி யொழுகும் முத்தமும் பேரன் ஆதிலும்" போன்ற கவிதை களில் மனம் நெக்குருகிப் போகின்றன ஒரு கவிஞனின் வெற்றி அந்தப் புள்ளியில் தான் இருக்கிறது வாசித்த மாத்திரத்தில் வாசகனை கொக்கி போட்டு இழுத்து தன் வயப்படுத்தும் படைப்புகளால் படைப்பாளன் உயர்ந்து நிற்கின்றான் மட்டுமல்ல அவன் காலத்தை வென்றவனாகின்றான்

ஒரு பிரதி அல்லது படைப்பு சமூகம் எனும் பொதுத்தளத்திற்குள் வந்தவுடன் அந்தப்பிரதியின் ஆக்ககர்த்தாவான படைப்பாளி இறந்து விடுகிறான் என்கின்ற மேலேத்தேய ஆய்வாளர்களின் வாதம் இங்கு மனங் கொள்ளத்தக்கது.

அந்த வகையில் "நழுவி" எனும் இந்தப்பிரதியும் சராசரியைத் தாண்டி மேலோங்கியே நிற்கிறது.

"வீணியொழுகும் முத்தமும் பேரன் ஆதிலும்" என்ற கவிதையானது எனது ஒரு வயதேயான சின்ன மகள் ஸைனபின் குறும்புத்தனங்களை அப்பட்டமாக சொல்லி நிற்கிறது அதனால் அந்தக் கவிதை எனக்கு மிகமிகப் பிடித்தகவிதையாகின்றது

தடுக்கித்தடுக்கி ஓடிவா
என் மடி வெறுமித்துக் கிடக்கு
உன்னை அமர்த்தி நிரப்பிக் கொள்ள(பக்கம்–67)

கிராமத்தான் கலீபாவின் மேற் சொன்ன கவிதை எல்லா காலத்திற்கும் பொருத்தமான நல்ல கவிதையாக காலத்தைவென்று பயணிக்கும் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும். இந்தத் தொகுதியில் சிலகவிதைகள் சினிமாப்பாடல் தொணியில் இருப்பதாக எனக்குப் படுகிறது அது கவிஞனின் பலவீனமல்ல. ஆனால் கவிதை எனும் கட்டுக்கோப்பான ஒரு படைப்புக்கு சினிமாப்பாடல் வகையான கவிதைகள் காலதேச வர்த்தமானங்களுடன் போட்டியிட்டு வீறுநடை போட முடியுமா என்பது கேள்விக் குறி.

"உறவினில் மெல்ல மலர்ந்திடு" என்ற கவிதை யில் இந்த சினிமாத்தனத்தை நான் உணர்கிறேன்.

கிராமத்தான் கலீபாவின் படைப்புக்களும் இந்த காலத்தை வென்று தனது வரலாற்றை நிறுவ வேண்டும் என்ற பிரார்த்தனைகளோடு நழுவியின் பின்னட்டையில் இருக்கின்ற மிகப்பெரிய எழுத்துப் பிழைகள் இந்த புத்தகத்தின் பலத்தை பலவீனப்படுத்தாது என்ற நம்பிக்கையுடன் விடைபெறுகிறேன்.

## கே. எஸ். சிவகுமாரனின்

# “பல நாடுகளில் வசிக்கும் வாசகர்களுக்கு பயனுள்ள குறிப்புகள்”




வெளியீடு - மணிமேகலைப் பிரசுரம்
விலை - 60/-
பக்கம் - 68

இந்தியாவின் முன்னணிப் பதிப்பகங்களில் ஒன்றான மணி மேகலைப்பிரசுரம் கே.எஸ். சிவ குமாரனின் “பல நாடுகளில் வசிக்கும் வாசகர்களுக்கு பயனுள்ள குறிப்புகள்” என்னும் நூலை வெளி யிட்டுள்ளது. ஏற்கனவே கே.எஸ். இன் 9 நூல்களை மணிமேகலைப்பிரசுரம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. இந்நூலில் அடங்கியுள்ள திறனாய்வுக்குறிப்புகள் 2013 ஆம் ஆண்டு தினக்குரல் பத்திரிகையில் கே.எஸ். சிவகுமாரனால் எழுதப்பட்ட “ஓரக் குறிப்புகள்” என்னும் தலைப்பின் கீழ் தொடராக வெளிவந்தவை. கே. எஸ். ஈழத்து திறனாய்வாளர்களில் முக்கியமானவர். இருநூற்றுக்கும் மேற்பட்ட படைப்புக் களை திறனாய்வு செய்திருப்பவர். அவரது திறனாய்வின் முறை வித்தியாசமானது; அதிகம் அலட்டல் இல்லாமல், அதிக பக்கங்களை வீணடிக் காது சாதாரணமாக தன் பார்வையை முன்வைப்பவர்.

இந்நூலில் இலக்கிய ஆளுமைகளான க.நா.சு, பிரான்ஸ் கஃகா, தேவி பிரசாத், கே.ஜி.மகாதேவா, பேனா மனோகரன், த. அகிலன், சி.விமலன், முருகேசு ரவீந்திரன், இ.சு.முரளிதரன், அனார் போன்றோரின் படைப்புகள், நூல்களை முன்னிலைப்படுத்தி தன் பார்வையை பதிவு செய்துள்ளதோடு, மனமோகினி, பூங்காவனம் இதழ்கள் பற்றிய விரிவான திறனாய்வையும், “சார்க் நாடுகளின் இலக்கியத் தொகுதிகள்”, குமரன் புத்தக இல்லத்தின் “முற்போக்கு எழுத்தாளர்கள்” பற்றிய தன் பார்வையையும் முன் வைத்துள்ளார்.

“க.நா.சு” என்ற க.நா.சுப்பிரமணியம் அவர்கள் 20 நாவல்கள் வரை எழுதியுள்ளார். அதில் கே.எஸ். தனது வாசிப்பிற்குட்பட்ட “வாழ்ந்தவர் கெட்டால்”, “அசுர கணம்”, “பொய்த்தேவு” பற்றிய சிறு குறிப்புகளை தந்துள்ளார். அத்தோடு “சந்திரோதயம்” சஞ்சிகையின் ஆசிரியராக க.நா.சு. செயற்பட்டமை பற்றியும் குறிப் பிட்டுள்ளார். “பிரான்ஸ் கஃகா” பற்றிய கட்டுரையில் அவரது படைப்புகள், தத்துவங்கள் பற்றி மேலோட்ட மான தன் பார்வையை வெளிப்படுத்தியுள்ளார். “சார்க்” நாடுகள் கவிதை, சிறுகதைத் தொகுதிகளை வெளி யிட்டுள்ளமை பற்றியும் அவற்றில் கவிதைத் தொகுதியில் மட்டும் சோ.ப, சிவசேகரம், மு.பொ, சேரன் ஆகிய நான்கு கவிஞர்களது மொழிபெயர்ப்பு கவிதைகள் மட்டும் உள்ளதாகவும் சிறுகதைத்தொகுதியில் ஈழத்தவர் சிறுகதைகள் எதுவும் சேர்க்கப்பட வில்லையென “சார்க் நாடுகளின் இலக்கியத் தொகுதிகள்” கட்டுரையில் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தி யுள்ளார்.

கே.ஜி.மகாதேவா, பேனா மனோகரன் ஆகியோருடனான தனது இலக்கிய தொடர்புபற்றியும் அவர்களது திறமைகள் பற்றியும் அவர்களைப்பற்றிய கட்டுரையில் தெரிவித்துள்ளார். ஈழத்து முக்கிய கவிஞர்களாக திகழும் த.அகிலன், அனார் பற்றி, அவர்களது நூல்களை முன்னிறுத்தி தன் பார்வையை படரவிட்டுள்ளார். அனாரின் கிழக்கிலங்கை மக்களின் நாவில் தவழும் காதல் பாட்டுக்கள் நிறைந்த “பொடுபொடுத்த மழைத்தூறல்” கவிதைத் தொகுப்பை வெகுவாகப் பாராட்டி, அதில் உள்ள சொற்கள், கவிதை பாடப்பட்டுள்ள முறைமை பற்றி நயந்துள்ளார். குமரன் புத்தக இல்லத்தின் வெளியீடாக வெளிவந்த “முற்போக்கு எழுத்தாளர்கள்” தொகுதி பற்றியும் அதில் உள்ளடங்கிய சில கட்டுரைகள் பற்றியும் சிலாகித் துள்ளார். சிறுகதை ஆசிரியரான முருகேசு ரவீந்திரன், புதிதாக திறனாய்வு செய்யும் சி. விமலன் ஆகியோரின் படைப்புகளை முன்னிறுத்தி அவர்களது படைப்புத் திறனை பற்றிய அலசலையும் மேற்கொண்டுள்ளார். ஈழத்தில் சினிமா பற்றிய விமர்சனங்களை நுண்ணிப்பான அவதானிப்பின் பின் மேற்கொள்ளும் இ.சு.முரளிதரனின் “தமிழ் சினிமாவின் பார்வையில் ஈழம்- வணிகமாக்கப் பட்ட வலிகள்” நூல் குறித்த தன் முழுமையான பார்வையையும் இ.சு. வின் படைப்பு உத்திகள் பற்றியும் தனது கருத்துக்களை முன்னிறுத்தியுள்ளார். மற்றும் மனமோகினி, பூங்காவனம் இதழ்கள் பற்றிய பார்வையை விரிவாக மேற்கொண்டுள்ளார்.

நூலின் தலைப்பில் குறிப்பிட்டது போல பல பயனுள்ள குறிப்புகளை தாங்கி கே.எஸ். இன் இந்நூல் வெளிவந்திருப்பது பாராட்டத்தக்கது.




இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி ந. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.